# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 37 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 18, திங்கட்கிழமை 02.01.2017


# மோசடிகளை விசாரிக்க மற்றொரு ஆணைக்குழு

## நாடாளுமன்றுக்கு வருகிறது சட்ட வரைவு

கொழும்பு, ஜனவரி 2

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் குறித்து விசாரணை நடத்த மற்றுமொரு ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. இதுதொடர்பான சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றில் முன்வைக் கப்படும்.

இவ்வாறு சிறப்பு வேலைத் திட்டங்களுக்கான அமைச்சர் சரத் அமுனுகம தெரி வித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மகிந்த ஆட்சிக் காலத்தின் போது இடம்பெற்ற நிதி மோசடிகளைக் கண்டறிவதற்கு குற்றவியல் நியாய ஆணைக்குழு விரைவில் உருவாக்கப்படும்.

பொதுமக்களின் பெருமளவு பணம் கடந்த ஆட்சியில் சூறையாடப்பட்டது. அவற்றை அவர்களிடமிருந்து பறிமுதல் செய்வதற்கு சட்ட ஏற்பாடுகள் இல்லை. குற்றஞ் சாட்டப்படுகின்றவர்களுக்கு சிறைத் தண்டனையுடன் தண்டமும் அறவிடப்படுகின்றது. மக்களின் பணம் மீளப் பெறப்படுவதில்லை. >> 04

## இழுவைமடி கடற்றொழிலுக்கு தடை போட டில்லி இணக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 2

இழுவைமடித் தொழிலைத் தடை செய்வதற்கு இந்திய நடுவண் அரசு கொள்கை அளவில் இணங்கியுள் ளது. இது தொடர்பில் இன்றைய அமைச்சு மட்டப் பேச்சுக்களின் போது தீர்க்கமான முடிவு எட்டப்படும் என்று அறிய முடிகின்றது.

கொழும்பில் இன்று ஆரம்பமாகும் இந்திய – இலங்கை மீனவர் பிரச் சினை தொடர்பான அமைச்சு மட்டப் பேச்சுக்கு முன்னோடியாக, கடந்த சனிக் கிழமை புதுடில்லியில் அமைச்சு அதிகாரிகள் மட்டப் பேச்சு நடைபெற்றது. >> 25

## நல்லாட்சி பற்றி வியாழனன்று ரணில் சிறப்புரை

கொழும்பு, ஜன. 2

நல்லாட்சி அரசின் இன்றைய நிலை பற்றியும் அதன் எதிர்காலத் திட்டங் கள் பற்றியும் பிரதமரும் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை சிறப்பு உரை யொன்றை ஆற்றுவார் என்று அறி விக்கப்பட்டது.

தேசிய அரசு கடந்த 16 மாதங்களாக முன்னெடுத்துள்ள திட்டங்கள் பற்றி யும், அதன் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் நாட்டு மக்களுக்குத் தெளிவு படுத்தும் நோக்கில் இந்த >> 25

## 2016இல் மழை வீழ்ச்சி மிகக் குறைவு

யாழ்ப்பாணம், ஜன. 2

கடந்த 6 ஆண்டுகளில் இரண்டாவது மிகக் குறைந்த மழை வீழ்ச்சி பதிவா கிய ஆண்டாக 2016ஆம் ஆண்டு அமைந்துள்ளது. 2015ஆம் ஆண்டை விட 820 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கடந்த ஆண்டு குறைவடைந்துள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறான அதிகளவிலான வித்தியாசம் இரு ஆண்டுகளுக்கு இடையில் காணப்பட் டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட் டது.

"2016 ஆம் ஆண்டு >> 25

## புதுடில்லியின் மாயைக்குள் சிக்கி வடக்குக் கடற்பரப்பை தாரை வார்க்கக்கூடாது

### அரசிடம் வலியுறுத்துகிறது கடற்றொழிலாளர் இணையம்

யாழ்ப்பாணம், ஜன. 2

இந்திய அரசின் தந்திரோ பாய அரசியல் நகர்வுக்குள் அகப்பட்டு எங்களுடைய வடக்குக் கடற்பரப்பை தாரை வார்க்கின்ற நிலைக்கு இலங்கை அரசு போகக் கூடாது. இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலர் என். வி.சுப்பிரமணியம் கொழும்பு அரசிடம் வேண்டுகோள் விடுத் துள்ளார். இலங்கை – இந் திய மீனவர் >> 25

## மகிந்த அணியின் 15 எம்.பிக்கள் அரசுடன் இணைவர்



### எதிர்பார்க்கிறார் அமைச்சர் ரவி

யாழ்ப்பாணம், ஜன. 2

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் மகிந்த ஆதரவு அணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் >> 25

## முதலீடுகளைத் தடுக்கும் உத்தியே மகிந்தவின் ஆட்சி கவிழ்ப்புக் கதை

### அமைச்சர் சஜித் கூறுகிறார்



கொழும்பு, ஜன. 2

நல்லாட்சி அரசை முடிந்தால் கவிழ்த்துப் பார்க்கட்டும் என்று மகிந்த ராஜபக்சவுக்கு சவால் விடுத்துள்ளார் அமைச்சர் சஜித் பிரேமதாச. மகிந்தவால் ஒன்றையும் கவிழ்த்துவிட முடி யாது. இலங்கைக்கு வரும் முதலீடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கான உத்தி >> 25

## தனியார் ஆய்வு கூடத்தில் குருதி பரிசோதிக்கத் தடா

### சுகாதார அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, ஜன. 2

அரச வைத்தியசாலைகளில் அனு மதிக்கப்படுவோரின் குருதிப் பரிசோதனையைத் தனியார் மருந்துவ ஆய்வு கூடங்களில் பரிசோதிக்க நேற் றுத் தொடக்கம் தடைவிதிக்கப் பட்டுள்ள தாக சுகாதார அமைச் சர் ராஜித சேனாரத்ன அறி வித்தார். >> 25

## பொருத்து வீட்டை மக்களிடம் திணிக்கும் செயற்பாடு தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன. 2

முன்னிர்மாணிக்கப்பட்ட – பொருத்து வீட்டை மக் களி டம் திணிக்கும் செயற்பாடு கள் வேகமாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. வலி. வடக்கில் மீள் குடியமர் வுக்கு அண்மையில் அனு மதிக்கப்பட்ட பிரதேசங் களில் இதற்கான பரப்புரை கள் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன.

முன்னிர்மாணிக்கப்பட்ட – பொருத்து வீட்டை வழங்கு வதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முயற்சிகள் மேற் கொண்டுள்ளன. இந்த வீட் டுத் திட்டம் >> 25

## தமிழ்மொழி உறுதியுரையில் தவறு; அரச ஊழியர்கள் இடையே அச்சம்

யாழ்ப்பாணம், ஜன. 2

அரச உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த உறுதியுரைக்கான தமிழ்மொழி மூல மான சுற்றறிக்கையில் சர்ச்சைக்குரிய விடயம் உள்ளதால் அதில் ஒப்பமிடுவதில் தமிழ் அரச உத்தியோகத்தர்கள் அச்சம டைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊழியர்களாகப் பணிபுரிபவர்களிடம் ஆண்டுதோறும் முதல்வேலைநாளில் உறுதியுரை எடுத்து அதில் ஒப்பம் பெறுவது வழமையான நடைமுறையாக உள்ளது. இவ்வாறு ஒப்பமிடுவதற்கான சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சால் அச்சிடப்பட்டு அனுப்பிவைக்கப்படும். அதற்கமைய இந்த வருடத்துக்கான சுற்றறிக்கை மும் மொழிகளிலும் அச்சிட்டு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட சுற்ற றிக்கையில் ஆங்கிலத்தில் உள்ள விடயங் கள் தமிழில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஆங்கில உறுதியுரையில் ஒரு நாடு ஒரு தேசமாக வாழ்வோம் எனக் குறிப்பிடப்பட் டுள்ளபோதிலும் தமிழ் >> 25

## கல் வீடுதான் வேண்டும்

### இப்படி விண்ணப்பிக்குமாறு மக்களிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 2

வீட்டுத் தேவையுள்ள மக் கள் பொருத்து – முன்னிர் மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை நிரா கரியுங்கள். கல் வீடே எமக்கு வேண்டும் என்று பிரதேச செயலரிடம் எழுதிக் கொடுங் கள். மீள்குடியேற்ற அமைச் சரின் தவறான வழிநடத்த லுக்குப் பலியாகிப் பின்னர் மனம் வருந்த வேண்டாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு >> 25

## சிறுவர் மருத்துவமனை அமைக்க யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி காணியை விடுவிக்கவேண்டும்

### மருத்துவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 2

சிறுவர் வைத்தியசாலை அமைக்க, பண்ணையி லுள்ள யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக் குச் சொந்தமான தற் போது இராணுவத்தினர் வசமுள்ள காணியை விடுவிக்க யாழ்ப்பாணத் துக்கு வரும் ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் போதனாவைத்தியசாலை மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"யாழ்ப்பாணத்துக்கு நாளை மறுதினம் வருகை தரும் ஜனாதிபதி மைத்தி ரிபால >> 25

முச்சந்தி முனி



கடவுளே சொன்னாலும் காணி விடாயினம் பாருங்கோ...

## கொழும்பிலிருந்து 8 கிலோ தங்கத்தை கடத்தியவர் சென்னையில் கைது

சென்னை, ஜன. 2

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக 8.3 கிலோகிராம் எடை யுடைய தங்கத்தைக் கடத்திய குற்றச் சாட்டில் சென்னை யில் வைத்து ஒரு வரைக் கைது செய்துள்ளதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"சென்னை புலனாய் வுத்துறை அதி காரிகளால் மேற் கொள்ளப்பட்ட தேடு தல் நடவடிக்கையின் போதே >> 25

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பொலிஸாரின் செல்வாக்குடன் மணல் கொள்ளை அதிகரிப்பு

### மறவன்புலவு மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 2

மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குபவரின் விவரம் அடுத்த நிமிடம் எமக்குத் தெரியவரும் என்று மறவன்புலவு வடக்கில் வாகனத்தில் வருவோர் அச்சுறுத்தி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்கின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

“தென்மராட்சி தெற்கு, மறவன்புலவு வடக்குப் பகுதியில் இரவிரவாகத் தினமும் வாகனங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்கின்றனர். மறவன்புலவு கடற்கரைப் பகுதியில் அவற்றைப் பறித்து வைத்துப் பின்னர் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு ஏற்றிச் செல்கின்றனர். அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புக்கள் அற்ற தனியார் காணிகளில் உரிமையாளரின் அனுமதியின்றி மணல் ஏற்றப்படுகின்றன.

மணல் ஏற்றுபவர்களின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி எவரும் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்க முன்வருவதில்லை. இரவிரவாக பல தடவைகள் தினமும் பெருமளவு மணல் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. அதனால் பல இடங்களில் பெருங் குழிகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பகுதி சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று பிரதேச பொதுமக்கள் கோருகின்றனர். (வ-4,9)

# சீனக்குடா ஒயில் குதங்களை மீளப்பெறுவது குறித்துப் பேச்சு

### ஐ.ஓ.சி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 2

திருகோணமலை சீனக்குடாவில், இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (ஐ.ஓ.சி ) கட்டுப்பாட்டில் உள்ள மூன்று எண்ணெய்க் குதங்களை மீளப் பெறுவதற்கு கொழும்பு அரசு முடிவு செய்துள்ள நிலையில், இரு நாட்டு அரசுகளும் பேச்சு நடத்த வேண்டும் என்று இந்திய நிறுவனம் கோரியுள்ளது.

வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, மேலதிக டீசல் மற்றும் எண்ணெயைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் நோக்கில், சீனக்குடாவில் உள்ள மூன்று எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து மீளப் பெறும் அமைச்சரவைத் தீர்மானம் அண்மையில் எடுக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கைப் பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி உறுதி செய்துள்ளார்.

“தேசிய தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய எண்ணெய் நிறுவனத்துக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்தில் தலையிடும் உரிமை எந்தவொரு நிறுவனத்துக்கும் கிடையாது. எனினும், அயல்நாட்டுடன் பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை.

அடுத்த வாரம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், சீனக்குடா எண்ணெய்க் குதங்களைப் பார்வையிடுவதற்குச் செல்வார்கள்” என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

இதேவேளை- இரு நாட்டு அரசுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையில், தேவைப்பட்டால் இலங்கை எந்த எண்ணெய்க் குதங்களை மீளப்பெற முடியும். இதுகுறித்து இந்திய அரசுடனேயே இலங்கை அரசு பேச வேண்டும் என்று- இந்திய எண்ணெய்நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சியாம்போரா கோரியுள்ளார். (வ-4)

# பலாலி அமெ.மிஷன் பாடசாலையை ராணுவம் விடுவிக்க மைத்திரியுடன் பேச்சு

### மாவை எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணம் பலாலி வடக்கில் உள்ள அமெரிக்கன்மிஷன்பாடசாலையை விடுவிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் வரவுள்ள ஜனாதிபதியுடன் பேசப்படும் என்று கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

“ஏற்கனவே யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் ஜனாதிபதியுடன் உரையாடியுள்ளோம். அதே போன்று யாழ்ப்பாணத்துக்கு நாளைமறுதினம் வரவுள்ள ஜனாதிபதியின் கவனத்துக்கும் அது கொண்டு செல்லப்படும்.

பலாலி வடக்கில் மீள்குடியேறும் மாணவர்களின் நன்மை கருதி அதன் அருகில் இராணுவத்தினரின் பிடியில் உள்ள பலாலி வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையை விடுவித்து மாணவர்களின் கற்றலுக்கு உதவ முன்வர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அவ்வாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் நாம் ஏற்கனவே எமது கரிசனையைக் கொண்டுள்ளோம். இதற்காக அண்மையில் ஜனாதிபதி மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோரையும் சந்தித்து நேரில் கலந்துரையாடினோம். யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதியிடம் இது தொடர்பில் ஓர் உறுதியான நிலைப்பாட்டையும் பெறுவதற்கு முயற்சிப்போம்.

> “தற்போதைய சூழலில் அங்குள்ள எமது மாணவர்கள் கல்விக்காக 10 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.”

தற்போதைய சூழலில் அங்குள்ள எமது மாணவர்கள் கல்விக்காக 10 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களின் வாழ்விடப் பகுதியில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் பலாலி அமெரிக்கன் மிஷன்பாடசாலை உள்ளது. இதனை விடுவிக்க படையினர் முன்வருவார்களானால் அங்குள்ள 150 மாணவர்களின் எதிர்காலம் சிறப்படையும். இல்லையேல் குறித்த 150 மாண வர்களும் தினமும் கல்விக்காக 20 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்யும் உடல், உளச் சோர்வுடனேயே கல்விகற்க வேண்டும்.

இவ்வாறு சிறுவர்கள் சிரமத்தை எதிர்கொள்வதோடு அந்தச் சிறுவர்களுக்காக பெற்றோரும் அலையும் நிலமையே ஏற்பட்டுள்ளது. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு அம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக நாம் தொடர்ந்தும் முயற்சிப்போம்”என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்தார். (வ-4,101)

# எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

தன் வசம் இருந்த கைத்துப்பாக்கியை, வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் மூத்த உறுப்பினருமான சி.தவராசா கொழும்பு மாவட்டச் செயலகத்தில் மீள ஒப்படைத்துள்ளார். அவ்வாறு ஒப்படைத்ததற்காக அவர் உள்ளிட்ட பலர் கடந்த வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தவராசா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தனது பாதுகாப்புக்காக அனுமதிப்பத்திரத்துடன் கைத்துப்பாக்கி ஒன்றைப் பெற்றிருந்தார். அதற்கான அனுமதி காலாவதியாகிவிட்டது.

இந்நிலையில், அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் அவற்றுக்கான அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். அல்லது அவற்றை மீள ஒப்படைத்தல் வேண்டும் என்று அரசு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் தன் வசம் வைத்திருந்த குறித்த துப்பாக்கியைக் கொழும்பு மாவட்டச் செயலகத்தில் கடந்த மார்ச் மாதம் தவராசா மீள ஒப்படைத்துள்ளார். அதற்காகவே அவர் உள்ளிட்ட பலருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா பணம் அன்பளிப்பாக வழங்கப்புட்டுக் கௌரவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,101)

# பட்டாசினால் வந்தவினை

### கட்டடத்தில் தீப்பிடித்தது

கொழும்பு, ஜன. 2

கொடஹெனவில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டம் ஒன்றில் நேற்றைய தினம் தீ பரவியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

புதுவருடமான நேற்று பட்டாசு கொளுத்திக் கொண்டாடியபோது இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது.

தீயணைப்பு நடவடிக்கையில் கொழும்பு தீயணைப்புப்பிரிவு, காவற்றுறை மற்றும் பிரதேச மக்கள் இணைந்து செயற் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)



# புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் விபத்துக்களால் 479 பேர் காயம்

கொழும்பு, ஜன. 2

புதுவருடத்துக்கு முன்னதாக 113 விபத்துக்கள் உட்பட பல கார்ணங்களால் 479 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

புதுவருட வாண வேடிக்கையின் போது ஏற்பட்ட 12 விபத்துச் சம்பவங்களால் காயப்பட்டவர்களும் விபத்தில் அடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீதி விபத்துக்கள், வீட்டு விபத்துக்கள் மற்றும் வீட்டு வன்முறைகள் கடந்த இரண்டு நாள்களில் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலையின் பொதுத் தொடர்பாடல் அதிகாரி புஸ்பா ரம்யானி செய்சா குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை 13 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஆண்டு 109 சம்பவங்களில் 179 பேர் வரை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 16 வீதத்தாலும், வீட்டு விபத்துக்கள் 43 வீதத்தாலும் குறைவடைந்துள்ளன.

எவ்வாறாயினும் வாண வேடிக்கையால் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பொதுத் தொடர்பாடல் அதிகாரி புஸ்பா ரம்யானி செய்சா மேலும் தெரிவித்தார். (வ-4)

# வான் படையின் முன்னாள் தளபதிக்குத் தூதுவர் பதவி

கொழும்பு, ஜன. 2

ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக, இலங்கை வான் படையின் முன்னாள் தளபதி எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங் கள நியமிக்கப் படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது பெயர் இந்தப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ள நிலையில், உயர் நிலைப் பதவிகளுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக இவர் முன்னிலையாவார். நாடாளுமன்றத் தெரிவுக் குழு இவரை இந்தப் பதவிக்குப் பொருத்தமானவர் என்று ஏற்றுக்கொள்ளும் நிலையில்,

ஆப்கானிஸ்தானுக்கான தூதுவராக எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள நியமிக் கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே சில நாடுகளின் தூதர்களாக படைத்துறையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (வ-4)

# நல்லிணக்க முயற்சிக்கு இலங்கைக்கு ஐ.நா. ஆதரவு

## புதிய பொதுச் செயலாளர் பதவியேற்பு குறித்து கொழும்பு அலுவலகம் அறிக்கை

கொழும்பு, ஜனவரி 2

இலங்கையில் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். அதற்கு ஐ.நாவின் ஆதரவு புத்தாண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.

இவ்வாறு ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்தார்.

ஐ.நாவின் புதிய பொதுச் செயலாளர் அன்ரொனியோ குற்றரெஸ்ஸின் பதவிக் காலம் நேற்று ஆரம்பமானது. இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நல்லிணக்கம் மற்றும் அமைதி நோக்கிய இலங்கையின் பயணத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும். இந்தப் புத்தாண்டிலும் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும். நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியை நிலைநாட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். 2017ஆம் ஆண்டில் உலகளவில் அமைதியை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று புதிய பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்" என்று இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)




## பொலிஸ் அதிகாரி அடித்துக் கொலை

கொழும்பு, ஜன.2

குருநாகல், குளியாப்பிட்டிய இழுக்ஹேன பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் பொலிஸ் அதிகாரி கட்டையால் அடித்து கொலை செய்யப்பட்டார். குடும்ப தகராறு வலுப்பெற்றதன் காரணமாகவே இந்தக் கொலை நடந்துள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய நபர், குறித்த பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து குளியாப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட சிறுவன் திடீரெனச் சாவு

மட்டக்களப்பு, ஜன.2

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தளவாய்க் கிராமத்தில் நேற்று புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த சிறுவன் ஒருவன் திடீரென விழுந்து உயிரிழந்தான்.

தளவாய் கிராமத்தைச் சேர்ந்த தயாகரன் மதுசான் (வயது - 11) என்ற சிறுவனே நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளான்.

"புன்னைக்குடாவில் ஆழ்கடல் தொழிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளையில், நேற்று அதிகாலை 5.30 மணியளவில், மனைவியிடமிருந்து மகன் திடீரென விழுந்து இறந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தது. ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு மகன் கொண்டு செல்லப்பட்டபோதும் ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

எமது வீட்டு வளவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தேவாலயத்தில் நடந்த புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் எனது மகனும் ஈடுபட்டுள்ளார். இதன்போதே அவர் விழுந்து உயிரிழந்துள்ளார்"- என்று சிறுவனின் தந்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ய-46)

## எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன.2

நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக எரிபொருளை இறக்குமதி செய்ய இலங்கை பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 4 வருடங்களுக்காக 17 இலட்சம் மெட்ரிக் தொன் எரிபொருள் இறக்குமதிசெய்யப்படவுள்ளதுஎன்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் டீ.ஜி.ஜயசிங்க தெரிவித்தார்.

மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் வீதத்தைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எரிபொருளைக் களஞ்சியப்படுத்தும் வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன. முத்துராஜவல, கொலன்னாவ, சப்புகஸ்கந்த பகுதிகளில் மேலதிக எண்ணெய்த் தாங்கிகளை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## ரூ.25,000 தண்டம் சட்டத்தில் திருத்தம்

### *நிதி அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 2

வீதி விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக விதிக்கப்படும் தண்டத் தொகையை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள உள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இதில்திருத்தங்களைமேற்கொண்டு இந்த வருடத்தில் மீண்டும் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே நிதி அமைச்சர் மேற்கண்ட விடயங்களைக் கூறினார்.

வீதி விதிகளை மீறும் சாரதிகளுக்கு விதிக்கப்படும் தண்டத் தொகையை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சரால் யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த யோசனைக்கு பொதுப் போக்குவரத்துச் சாரதிகள் சங்கத்தினர், கடும் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டனர். அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து இந்த விடயம் குறித்துதமது கவலையையும் வெளியிட்டிருந்தனர்.

இதன்போது, இவர்களிடம் கருத்து வெளியிட்டிருந்த ஜனாதிபதி, வாகன சாரதிகளுடன் கலந்துரையாடாமல் தண்டத் தொகையை அதிகரிக்கப்போவதில்லை எனக் கூறியிருந்தார். (வ-5)

## முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ். போதனாவில் நேற்று சிறப்புச் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 2

அனைத்துலக மருத்துவ சுகாதார நலச்சங்கத்தின் அனுசரணையுடன் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான 3ஆவது சிறப்பு மருத்துவ முகாம் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்திய சாலையில் மருத்துவப் பிரிவில் நடைபெற்றது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டதால் இடுப்பு மற்றும் நெஞ்சுப் பகுதிக்குக் கீழ் செயலிழந்தவர்கள் ஒரு பகுதியினர் மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்றனர்.

போராலும், விபத்துக்களினாலும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது அன்றாட தேவைகளுக்குரிய பொருள்கள் அடங்கிய பொதிகளும் வழங்கப்பட்டன. இதற்கான அனுசரணையை அனைத்துலக மருத்துவ சுகாதார நலச்சங்கம் வழங்கியது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு குருதி மற்றும் சிறுநீரக பரிசோதனைகளும் சிகிச்சையும் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பு துறைசார் மருத்துவ நிபுணர்களது ஆலோசனைக்காக மேலதிக பரிசோதனைகளுக்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் த.சத்தியமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் சிறப்பு மருத்துவ வல்லுநர் எம். அரவிந்தன், உணர்வழியியில் சிகிச்சை வல்லுநர் எஸ். பிறேமகிருஸ்ணா மற்றும் சத்திர சிகிச்சை வல்லுநர் ரி. சர்மா ஆகியோரது வழிகாட்டலில் ஏனைய துறைசார் மருத்துவர்கள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட்டனர்.

மருத்துவ முகாமில் அனைத்துலக மருத்துவ சுகாதார நலச்சங்கத்தின் அமெரிக்க மற்றும் இலங்கைக் கிளையின் பொருளாளர் முரளி இராமலிங்கமும் கலந்து கொண்டார். (வ-7)

## கஜமுகாசுரன் சங்காரம்

யாழ்ப்பாணம், ஜன.2

வட்டுக்கோட்டை வடக்கு பிரமானாச்சித்தோட்ட கற்பக விநாயகர் ஆலயத்தில் கஜமுகாசுர சங்காரம் இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு நடைபெறும் வசந்தமண்டப வழிபாட்டைத் தொடர்ந்து விநாயக பெருமான் வீதி வலம் வருதலோடு கஜமுகாசுரனுடன் போர் புரியும் நிகழ்வு இடம்பெறும். பிள்ளையார் கதைப் படிப்பு நாளை செவ்வாய்க்கிழமை நிறைவு பெறும்.

இதேவேளை, ஆலயத்தில் திருவெம்பாவை வழிபாடு இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## 2016ஆம் ஆண்டு அதிகரித்துள்ளது எச்.ஐ.வி. தொற்று

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016ஆம் ஆண்டு எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வாறு தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் தொற்று ஒழிப்பு இயக்கம் தெரிவித்தது.

சுகாதார பாதுகாப்பு அற்ற முறையில் பச்சை குத்திக் கொள்வதும் எச்.ஐ.வி. தொற்றுக்கு முக்கிய காரணமாக உள்ளது என்று அந்த இயக்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்தார். (ற)

## திருவெம்பாவை இன்று ஆரம்பம்

இந்து ஆலயங்களில் திருவெம்பாவைப் பூஜைகள் இன்று திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி அதிகாலை நடேசர் ஆருத்ரா தரிசனம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

++++++++++++++

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் திருவெம்பாவை உற்சவம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற உள்ளதாக ஆலய பரிபாலன சபையின்ர் அறிவித்தனர். (வ)

++++++++++++++

வண்ணை அங்குசபாச விநாயகர் ஆலயத்தில் இன்று திருவெம்பாவை வழிபாடு ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவைப் படிப்பு நடைபெறவுள்ளது. தினமும் காலை 7 மணிக்கு வழிபாடு ஆரம்பமாகி திருவெம்பாவை படிப்பு நடைபெறும். (வ-10)

## விபத்தில் பொலிஸ் அதிகாரி சாவு

கொழும்பு, ஜன.2

பத்தேகம மக்குருகொட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

பொலிஸ் அதிகாரியின் மோட்டர் வாகனமும் வான் ஒன்றும் மோதியதில் விபத்து நடந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் சடலம் பத்தேகம ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், கைது செய்யப்பட்டவர் காலி நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# ஓட்டோ சாரதி மீது தாக்குதல் சீருடையினர் இருவர் கைது

வவுனியா பேருந்து நிலையத்தில் முச்சக்கர வண்டி சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட இரண்டு சீருடையினரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

"மூன்றுமுறிப்புப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையத்தில் பணிபுரியும் 2 சீருடையினர் அந்தப் பகுதியிலிருந்து முச்சக்கரவண்டி ஒன்றில் வவுனியா பேருந்து நிலையத்தில் வந்து இறங்கியுள்ளனர். முச்சக்கர வண்டியில் ஏறும்போது 150 ரூபா வாடகைக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்று முச்சக்கரவண்டிச் சாரதி தெரிவித்துள்ளார். பேருந்து நிலையத்தில வந்து இறங்கியதும் 120 ரூபாவை சீருடையினர் இருவரும் வழங்கியுள்ளனர். இதையடுத்து முச்சக்கரவண்டி சாரதி பேசியதுபோல 150 ரூபா பணத்தைத் தருமாறு கேட்டு தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதையடுத்து முச்சக்கரவண்டிச் சாரதி மீது பயணம் மேற்கொண்ட இரண்டு சீருடையினரும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்ட முச்சக்கர வண்டிச் சாரதி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சீருடையினர் இருவரும் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விவசாயத் துறையில் புரட்சிகர மாற்றம் வரும்

## மைத்திரி நம்பிக்கை

அநுராதபுரம், ஜன. 2

புதுவருடத்தில் நாட்டின் விவசாயத் துறையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்ரிரிபால சிறிசேன தெரிவித்தார். பொலன்னறுவை மாவட்ட விவசாய சங்கங்களின் தலைவர்களுடன் நேற்று பொலன்னறுவையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"பேண்தகு யுகத்தின் மூன்றாண்டுப் பிரவேசம் தேசிய நிகழ்ச்சித்திட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்தத் திட்டம் நாட்டின் விவசாயத் துறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும். இந்த நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிபெறச் செய்வதற்கு அனைத்து விவசாய சமூகத்தினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுடன் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது அரசின் நோக்கமாகும். விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான் இந்த நாட்டின் எந்தவொரு விவசாயக் குடும்பத்தையும் பட்டினியில் இருக்க இடமளிக்கமாட்டேன்" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பூகோள வெப்பமாதலுடன் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக விவசாய நேரசூசியில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களினால் நாடு முழுவதும் விவசாய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# விபத்தில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் . மின்சார நிலைய வீதியால் வந்த மோட்டார் சைக்கிளிலும் கஸ்தூரியார் வீதியால் வந்த காரும் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. மோட்டர் சைக்கிளில் பயணித்த ஞானேந்திரன் சசிதரன் (வயது 28) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்து தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-7)

# திருட்டுக் குற்றச்சாட்டில் நான்கு சிறுவர்கள் கைது

இருவேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் நான்கு சிறுவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் நேற்றும், நேற்றுமுன்தினமும் கைது செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காரைநகர் பிரதேசத்தில், கதிர்காமநாதன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் பகல் திருட்டு இடம்பெற்றுள்ளது. ஆலயத்தின் சி.சி. ரி.வி கமரா அதன் உபகரணங்கள், டி.வி.டி பிளேயர் உள்ளிட்ட சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்கள் திருடப்பட்டன.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் நேற்றுக் காலை முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் மேற்கொண்ட துரித விசாரணைகளைத் தொடர்ந்து நேற்று மதியம், காரைநகரைச் சேர்ந்த 14 வயது சிறுவர்கள் இருவர் சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆலயத்தில் திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் போலித் திறப்புக்கள் என்பனவும் அவர்களிடம் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்களுக்கு வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு உள்ளதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் ஒரு மாதத்திற்கு முன்னர் தொலைபேசி விற்பனை நிலையம் உடைத்துக் களவாடப்பட்டிருந்தது. தொலைபேசி, மீள் நிரப்பு அட்டை உள்ளிட்ட ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய 2 சிறுவர்களை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர். அவர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டு சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ-5-26)

# மோசடிகளை...

எனவே, கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய புதிய சட்ட ஏற்பாடு கொண்டுவரப்படவுள்ளது. அது தொடர்பான சட்ட வரைவு தற்போது தயாரிக்கப்படுகிறது. அது விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்" என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் இன்று அரச நிறுவனங்களில் மோசடிகள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டுகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, கடந்த ஆட்சியில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்கு பெரியளவிலான நிதிமோசடிகள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. அத்துடன், நிதி மோசடிகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கீழ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு இயங்கி வருகிறது. மேலும் நாட்டில் இடம்பெறும் லஞ்சம் மற்றும் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை புலன் விசாரணை செய்யும் ஆணைக்குழு உள்ளது. இவற்றுக்கு மேலாக புதிய சட்ட ஏற்பாடுகளுடன் நிதி மோசடிகளைக் கண்டறிவதற்கான குற்றவியல் நியாய ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. (வ-5)



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 600 | 700 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 600 | 650 | 600 | – | 450 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 300 | 400 | 800 | 500 | – | 350 |
| விளை | 650 | 350 | 400 | 800 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 250 | 300 | 400 | 400 | – | – |
| கும்பிளா | 400 | 300 | 350 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 400 | – | 450 | – | – |
| ஓரா | 400 | 300 | 350 | – | 300 | – | – |
| திரளி | 300 | 200 | 250 | 200 | 250 | 200 | – |
| நகரை | 250 | 200 | – | 300 | 300 | – | 350 |
| சூடை | 150 | 100 | 150 | 200 | 200 | – | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | 400 | 200 | 100 | 300 |
| திருக்கை | 150 | 300 | – | 350 | 300 | – | 150 |
| மதனம் | 150 | 150 | 230 | – | 300 | – | 300 |
| கொய் | 100 | 100 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 150 | 200 | 400 | 300 | 400 | – |
| வாளை | 100 | 100 | – | – | 400 | – | 200 |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 60 | 50 | 40 | – | 60 |
| கத்தரி | 30 | 40 | 40 | 50 | 20–30 | 40 | – | 40 |
| கரட் | 120 | 90 | 80–140 | 100 | 80–100 | 120 | – | 160 |
| மரவள்ளி | 50 | 70 | 50 | 60 | 60 | 60 | – | 50 |
| பயிற்றை | 180 | 140 | 200 | 140 | 120 | 170 | – | 80 |
| பாகல் | 300 | 300 | 240 | 120 | 160 | 280 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 80 | 120 | – | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 80 | 100 | 70 | 100 | – | 160 |
| பூசணி | 50 | 50 | 50 | 50 | 40–60 | 50 | – | 80 |
| தக்காளி | 180 | 170 | 140 | 100 | 160 | 160 | – | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 | 60 | 80 | – | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 40 | 20 | 50 | – | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 120 | 160 | 140 | 140 | 200 | – | 500 |
| புடோல் | 80 | 70 | 80 | 60 | 60 | 80 | – | 100 |
| கோவா | 30 | 30 | 40 | 40 | 20 | 20 | – | 140 |
| வெண்டி | 80 | 60 | 70 | 120 | 60 | 80 | – | 80 |
| போஞ்சி | 240 | 100 | 120 | 140 | 100 | 160 | – | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | – | 150 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 350 | 200 | 450 | – | 280 |
| வல்லாரை | 25 | 20 | 20 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 160 | 200 | 240 | 180 | 180 | – | 200 |
| இராசவள்ளி | 300 | 250 | 300 | 200–260 | 300 | 300 | – | 120 |
| முருங்கைக்காய் | – | 400 | 800 | – | 400 | – | – | 350 |

# மருந்தாளர் நியமனம்

சாவகச்சேரி, ஜன. 2

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் இரு மருந்தாளர்கள் கடமைகளை நேற்றுப் பொறுப் பேற்றனர்.

வைத்தியசாலையில் ஆறு மருந்தாளர்களுக்கான ஆளணி உள்ள போதிலும் இருவரே கடமையாற்றினர். அவர்களில் ஒருவருக்கு சுகாதாரத் திணைக்களத்தால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றல் வழங்கப்பட்டது. இருவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டனர். (ഩ-9)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன.2

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் தெற்கில் உள்ள 41 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு அவை வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ഩ-17)

# வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 2

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள ஆலயத் திருவிழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (ഩ-7)

## English Trainer Training Diploma (Teacher Training)

**சர்வதேச தரத்திலான ஆங்கிலத்தை முழுமையாகவும் அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்**

- ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
- “ English Medium ” மாணவர்களுக்கும்
- Speaking, Writing. Listening and Reading திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்குமானது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் English Medium மாணவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்கள் தெரிவு செய்கின்ற ஒரேயொரு கற்கைநெறி.

New Batches Start on **02.01.2017** 9.00 a.m / 1.30 p.m Weekdays — **07.01.2017** 9.00 a.m / 1.00 p.m Weekend

**ELAS** Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 32ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் மற்றும் 11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்துக்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் மற்றும் DVD யினை எடுப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்ட புகைப்படப் பிடிப்பாளரிடம் பட்டமளிப்பு அங்கி பெற்றுக்கொள்ளும் தினமன்றே புகைப்படம் மற்றும் DVD பிரதிகளுக்காக பதிவுகளை மேற்கொள்ளுமாறு பட்டதாரி மாணவர்கள் வேண்டப்படுகின்றனர். குறித்த புகைப்படம் மற்றும் DVD பிரதிகளுக்கான கட்டண விவரங்களையும் தமக்காகத் குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விவரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி www.jfn.ac.lk

| திகதி | நேரம் | பட்டம். |
|---|---|---|
| 04.01.2017<br>புதன்கிழமை | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 02.00 – 04.00 | விவசாய விஞ்ஞானமாணி<br>சித்த மருத்துவ சத்திரசிகிச்சைமாணி<br>மருத்துவமாணி சத்திரசிகிச்சைமாணி<br>தாதியியல் விஞ்ஞானமாணி<br>மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி<br>மருந்தகவியல்மாணி<br>கலைமாணி (சிறப்பு), சட்டமாணி |
| 05.01.2017<br>வியாழக்கிழமை | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 02.00 – 04.00 | கலைமாணி (பொது)<br>நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்)<br>தொழில் நிர்வாகமாணி,<br>வணிகமாணி (3 வருடங்கள்)<br>விஞ்ஞானமாணி (சிறப்பு, பொது)<br>கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி<br>பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி<br>கணினி விஞ்ஞானமாணி |
| 06.01.2017<br>வெள்ளிக்கிழமை | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 02.00 – 04.00 | பட்டப்பின் படிப்புப் பட்டதாரிகள் |

குறிப்பு:-

1. பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும் தினத்திலன்று பட்டதாரி மாணவர்கள் நேரடியாக சமுகமளித்து கல்விக் கிளையினால் வழங்கப்படும் கேள்விக் கொத்தினை முறையாகப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.
2. வவுனியா வளாக மாணவர்கள் 06.01.2017 ஆம் திகதியிலிருந்து பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விவரங்களை வவுனியா வளாக இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

முகவரி www.vau.jfn.ac.lk

- பதிவாளர் -



## கலாலயா

யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 15.01.2017 (ஞாயிறு)**
**கிழமைநாள் பிரிவுகள்: 16.01.2017 (திங்கள்)**
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

## சேவைநலன் பாராட்டு வாழ்த்துப்பா



வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலராக 01.02.2012 முதல் 30.12.2016 வரை கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் மதிப்பிற்குரிய

### திரு. மு.நந்தகோபாலன்

அவர்களின் சேவைதனைப் பாராட்டி வலி.தெற்கு பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தினரால் வழங்கப்பெற்ற

### வாழ்த்துப்பா

உடுவில் சூழ் பிரதேசத்தை
உயர்த்தியே ஓங்க வைக்க
நடுவிலோர் நாயகன் போல
நலம்பட வந்தீர் ஐயா!
பணியிலே பச்சைப்பிள்ளை
பணியிலோ பந்தா இல்லை
கனிவினைக் காட்டி மக்கள்
கடமைகள் செய்தீர் ஐயா!

ஊழியர் குழாத்தையெல்லாம்
உறவுகள் போன்றே எண்ணி
ஊழியர் உயர்வுக்காயும்
உண்மையாய் உழைத்து நின்றீர்
மேழியில் உங்கள் வாழ்வில்
மேன்மையே பெருகி ஓங்கி
ஆழிசூழ் உலகில் தங்கள்
அரும்பெயர் துலங்கிவாழும்

மக்களை மக்களாக
மதிக்கின்ற மாண்பைக் கண்டோம்
அக்கறை அதிகம் கொண்டு
அவர் துயர் களையக் கண்டோம்
தக்கவே அவர்கள் தேவை
தாமதிக்காமல் செய்த
பக்குவப்பட்ட சேவை
பார்த்து நாம் தெளிந்து கொண்டோம்

மங்கலம் பொங்க வாழ்க!
மற்றவர் போற்ற வாழ்க!
தங்களைப் போன்றே தம் புதல்வரும்
துணைவியும் நன்றே வாழ்க!
நந்த கோபாலன் நாமம்
நனி சிறப்பாக வாழ்க!
எந்தையே இறைவா உன்னால்
இவர் புகழ் வாழ்க! வாழ்க!!

அன்புடன் வாழ்த்தும்: **நலன்புரிசங்கம்**
**பிரதேச செயலகம் வலி.தெற்கு, உடுவில்.**

(c.27534)(13.18)

## வேலையாள்கள் தேவை
பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
நடமாடும் பாண் விற்பனை வானில் பாண் விற்பனையாளர்கள் தேவை.
**புதிய துர்க்கா வெதுப்பகம்**
கலைவாணி லேன், பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

Galaxy Star
வெற்றி வாரம் 123 திகதி 01.01.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 02, 11, 13, 41
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 30,19,604 /-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 01.01.2017 | வெற்றி வாரம் 2077 | ஊதா
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்
08 10 11 61
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5, 371, 884/=
2017.01.03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
வெற்றி இலக்கங்கள்
70 28
டபிள் சான்ஸ்
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# நடத்துநர் இன்றி பயணித்த பேருந்து

வவுனியா, ஜன.2

மல்லாவியிலிருந்து வவுனியாவுக்கான சேவையை நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தனியார் பேருந்து, நடத்துநர் இன்றிச் சேவையில் ஈடுபட்டது. அதனால் பயணிகள் சிரமத்துக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து நேற்றுக் காலை மல்லாவிக்கான சேவையை மேற்கொண்ட தனியார் பேருந்தில் சாரதியே சேவையை வழங்கியுள் ளார்.

பிற்பகல் மல்லாவியிலிருந்து வவுனியா வுக்கான சேவையை வழங்கும் போது நடத்துநர் பேருந்தில் சேவையில் இருக்க வில்லை.

பேருந்தில் பயணம் மேற் கொண்ட பயணிகள் சிரமத்திற் குள்ளாகினர் என்றும், பயணத் துக்குரிய பணத்தை சாரதி சேக ரித்துக் கொண்டு பேருந்தையும் செலுத்தினார் என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

நடத்துநருக்கு காலில் காயம் ஏற் பட்டுள்ளதால் சேவை வழங்க முடியவில்லை என்று சாரதி தெரி வித்தார் என்றும் கூறப்பட்டது. (ந-21)

# வல்லைப் பாலத்தில் வெள்ளை இறால்

தொண்டமானாறு குடாக் கடல் நீரேரி வல்லைப்பால நீர்ப் பரப்பில் வெள்ளை இறால் பிடிக்கப்படுகின்றது. சிலவருடங் களுக்குப் பின்னர் இந்த வருடம் வெள்ளை இறால் பிடிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருப்பது உள்ளூர் மீன் பிடித் தொழிலாளர்களுக்கு கணிச மான அளவு வருமானம் ஈட்டுவ தற்கு வகை செய்துள்ளது.

வெள்ளை இறால் ஒரு கிலோ 800 ரூபாவுக்குக் குறையாது விற்பனை செய்யப்படுகின்றது.

வல்லைக்கடற்பரப்பில்வெள்ளை இறால் மரபுவழி முறையாக தடுப்பு வேலி (கண்டி) அமைத்து கூடு வைத்தும், வீச்சு வலை மூலமும் பிடிக்கப்படுகின்றது.

தொண்டமானாறு தடுப்பு அணை உறுதிசெய்யப்பட்டு சமுத்திர நீர் குடாக் கடல் நீரேரிக்கு வராமல் தடுக்கப்பட் டதை அடுத்து கடந்த சிலவருடங்களாக முற்றாக இது தடைப்பட்டிருந்தது. இந்த வருடம் வெள்ளை இறால் கணிசமான அளவு பிடிக்கப்படுகின்றது.

வெள்ளை இறால் பகல் வேளையில் அச்சுவேலி மீன்சந்தையிலும் மாலை வேளையில் அச்சுவேலிப் பகுதி பிர தான வீதி ஓரங்க ளிலும் வைத்து விற் பனை செய்யப்படுகின்றது. (ந-1)

# சம்புக் கோழியால் நெற் பயிர்கள் நாசம்

## விவசாயிகள் கவலை

தென்மராட்சி, ஜன.2

வயல்களில் விளைந்த பயிர்களை சம்புக் கோழிப் பறவைகள் அழிக் கின்றன என்று நெற்செய்கையாளர் கள் கவலை தெரிவித்தனர்.

மழை பொய்த்ததால் நெற் செய்கை யாளர்கள் நீர்பாய்ச்சி நெற்செய் கையை மேற்கொண்டுள்ள நிலையில் இரவு வேளைகளில் கூட்டமாக வரும் சம்புக் கோழிகள் பயிர்களைப் பிடுங்கி பயிர்களில் கூடுகட்டி அழிக்கின்றன.

சம்புக்கோழிகளிடமிருந்து பயிர்க ளைப் பாதுகாக்க இரவு வேளையில் டோர்ச் வெளிச்சம் பாய்ச்சப்பட்டு அவை துரத்தப்படுகின்றபோதும் ஆள்கள் நடமாட்டமில்லாத வேளை களில் வயல்களில் இறங்கி அவை பயிர் களை அழித்து வருகின்றன.

வலை விரித்துப் பிடிப்பது சட்ட விரோ தம் என்பதால் நெற்பயிர்களைப் பாது காக்க இரவுவேளையில் காவல் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சம்புக் கோழிகள் மழை காலங்களில் நீர்நிலைகளில் உள்ள சம்புப் புற்க ளில் கூடுகட்டி முட்டையிடும். நீர்நிலை களில் நீர் இல்லாததால் நீர் காணப் படும் நெல் வயல்களில் கூட்டம் கூட்ட மாக வந்து நெற்பயிர்களைப் பிடுங்கி அழிக்கின்றன என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ந-21,9)

## பணிநிலை வெற்றிடம் - Vacancy
பணித்தளம் – காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை

**01. அணித்தலைவர் - Team Leader (1)**
தகைமை:-
1. 3 வருடத்துக்குக் குறையாத தொழில்சார் அனுபவம்.
2. தொழில்சார் கல்வி தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. G.C.E.A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
அடிப்படை வேதனம் ரூபா 21,000.00

**2. உளவளத் துணையாளர் - Counsellor (1)**
தகைமை:-
1. 3 வருடத்துக்குக் குறையாத பதவிசார் அனுபவம்.
2. தொழில்சார் கல்வி டிப்ளோமா சான்றிதழ்கள் இருத்தல் வேண்டும்
3. G.C.E.A/L சித்தியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
அடிப்படை வேதனம் ரூபா 20,000.00

**3. சமூகப் பணியாளர் - Social Worker (3)**
தகைமை:
1. G.C.E.A/L சித்தியுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சமூகப் பணியில் முன் அனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. பணித்தளத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
அடிப்படை வேதனம் ரூபா 16,000.00

**04. காரியாலய உதவியாளர் - Office Assistant (1)**
தகைமை:-
1. முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
அடிப்படை வேதனம் - ரூபா. 11,800.00

01. சகல பதவிகளுக்கும் அறிக்கை எழுதும் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.
02. சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.
03. சகல பதவிகளுக்கும் 45 வயதுக்குட்டபட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
04. தமது விண்ணப்பங்களை தபால் மூலமாக 07 ஜனவரி 2017 இற்கு முன் கிடைக்கப் பெறக் கூடியதாகக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தபால் மூல விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
05. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே தொலைபேசி மூலம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். வேறு தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. அனுப்பப்பட வேண்டிய தபால் முகவரி :-
Chairman "ITHAM CACPD"
NO.22 Anaicoddai Road, Kokuvil West.Kokuvil.
(8ஊ/7269) (11,18)
தலைவர் – இதம்

## வாழ்த்துக்கள்



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இன்று (02.01.2017) தொடக்கம் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உப அதிபராகப் பதவியேற்கும்
**திரு. ஐயாத்துரை குணசீலன். - SLPS III**
(Commerce (Trd)B.Edu )
அவர்களையும் அத்துடன் எமது பாடசாலையில் முன்னர் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது அதிபராக பதவியேற்கும் திரு.தி.அபராஜிதன் அவர்களையும், பிரதி அதிபர்களாகப் பதவியேற்கும் திருமதி சு.தேவரதி, திரு.சி.நாவலன் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்– யா/கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை – கொடிகாமம்.

## திவ்விய ஆயுர்வேதம்
விசேட சிகிச்சைகள்
- உடற்பருமன்
- வாதநோய்கள், பாரிசவாதம் மற்றும் அடிபட்ட நாட்பட்ட நோவு என்பவற்றுக்கு பத்து ஒயில் மசாச்
- முகப்பரு
- தலைமுடி உதிர்வு, இளநரை
- சொடு, பேன்
- குழந்தை இன்மை
- மாதவிடாய்க் கோளாறு
- ஆண்மைக் குறைபாடு
- பாலியல் பலவீனம்
- மூலரோகம்
- வயிற்றுப்புண் (அல்சர்)
- கொலஸ்ரோல்
- சலரோகம்
- நாட்பட்ட தோல்நோய்கள்
- சிறுநீரக கற்கள்
- ஆஸ்மா
- நாட்பட்ட பீனிசம், தலையிடி, அம்மல்
- முள்ளந்தண்டு நோய்கள்
- இரத்தச் சோகை
- தைரொய்ட்சுரப்பிக் கோளாறு
- உடல்மெலிவு, கணச்சூடு
- நரம்புத் தளர்ச்சி, நடுக்கம்
- தலைச்சுற்று

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மருந்து.
ஆயுர்வேத மருந்து, மாத்திரைகள், எண்ணெய் வகைகள், சூரணங்கள், லேகியங்கள் போன்றவற்றிலான விசேட சிகிச்சைகள்.
தொடர்பு:
077 666 4674
இல.1, 2ஆம் குறுக்குத்தெரு, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு
OFFICE ASSISTANT (female)
தகைமைகள்:
- 28 வயதிற்குட்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடியவர்கள்
- O/L, A/L அனைத்து பாடங்களிலும் சித்தி
- பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். (ஒரு வருட ஒப்பந்தம்)
- கணினி அறிவு (ms office, photoshop, Internet & email)
- நீண்ட நேரம் அர்ப்பணிப்புடன் பணியாற்றி இலக்குகளை அடையக் கூடியவர்கள்.

முன்னனுபவம் அவசியம் இல்லை. தகுந்த பயிற்சிகள் வழங்கப்படும். கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்.
காலம்: 02.01.2017, 03.01.2017 (திங்கள், செவ்வாய்)
11 am- 4 pm வரை
சுயவிவரக்கோவை, கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
WINSTAR
106, தபாற்பெட்டிச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.

## இதோ வெளிவந்துவிட்டது !
பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய
" தமிழ் இலக்கணப் பூங்கா "
6 ஆம் பதிப்பு
(புதிய இணைப்புக்களுடன்)
யாழ் நகரின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(J/7342) (14,17,18)

## வேலையாள் தேவை
கோழிப் பாமுக்கு வேலையாள்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 248 7841, 077 312 7498

## விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள பாவித்த யன்னல்கள், நிலைகள் விற்பனைக்குண்டு.
077 248 7841

## வான் விற்பனைக்கு
59 - Town ACE வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- 076 670 4835

## விற்பனைக்குண்டு
நாதஸ்வரம், தவில் உதிரிப்பாகங்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு.
077 872 8540, 076 980 1513

## வீடு வாடகைக்கு
கோயில் வீதியில் அமைதியான சுற்றாடலில் சகல வசதிகளுடன் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)
077 248 7841, 077 312 7498

## English Classes
- English Literature
  Gr.10,11,A/L
  GAQ,BA (Peradeniya)
- IELTS Classes
- General English Classes
  For school leavers and Government Servents
  Commence on 05.01.2017

By- K.Jeyakumar B.A (Eng)
PGDE (TESL) Col
SHAMROCK ACADEMY
Eachchamoddai

## கால்நடை வைத்தியர்கள் இடமாற்றம்

சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றிய இரு கால்நடை வைத்தியர்களும் இடமாற்றல் செய்யப்பட்டுள்ளனர். நீண்டகாலமாக சாவகச்சேரி பிரதேச கால்நடை வைத்தியராக கடமையாற்றிய க.இரகுநாதன் கரவெட்டி கால்நடை வைத்தியர் அலுவலகத்துக்கும், கால்நடை வைத்தியர் செல்வி தரங்க கொழும்பு கால்நடை வைத்தியர் அலுவலகத்துக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

பூநகரி பிரதேச கால்நடை வைத்தியர் சசிமாறன் சாவகச்சேரி கால்நடை வைத்தியராகப் பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## யாழ். போதனாவில் 2016இல் 3 லட்சம் பேருக்கு சிகிச்சை

### வெளிநோயாளர் பிரிவில் மட்டும்

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஆண்டு 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் சிகிச்சைபெற்றுள்ளனர் என்று வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

“2016ஆம் ஆண்டு 3 இலட்சத்து 60 ஆயிரம் பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர். ஒரு இலட்சத்து 30 ஆயிரம் நோயாளர்கள் வைத்திய சாலை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றனர். 2 இலட் சத்து 30 ஆயிரம் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்களில் 80 ஆயிரம் பேர் சிறுவர்கள்.

சாதாரண காய்ச்சல், சுவாசத்தொற்று, தோல்தொற்று, எக்ஸ்சிமா, முதுகுநோவு, நாரி உழைவு, முழங்கால் உழைவு, சிறு நீரகத்தொற்று மற்றும் நாய் கடிக்கு இலக்கானவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர். நாள் ஒன்றுக்கு சரா சரியாக 600 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்'' என்று மருத்துவர் சி.ஜமுனாநந்தா தெரிவித்தார். (ற-7)



## அல்லைப்பிட்டியில் நன்னீர் உவர் நீராக மாறும் அபாயம்

### கடற்கரையில் மணல் அகழ்வது எல்லை மீறுகின்றது என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.2

அல்லைப்பிட்டி கடற்கரையை அண்டிய பகுதியில் அதிகளவு மணல் அகழப்படுகின்றது. அந்தப் பகுதியில் உள்ள நன்னீர்க் கிணறுகள் அதனால் உவர் நீர் கிணறுகளாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் எதிர் காலத்தில் குடிதண்ணீரைப் பெறுவதில் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடற்கரையில் இருந்து 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் மணல் அகழ்வு நடைபெறுகின் றது. கடந்த ஒன்றரை மாதங்களாக இது நடக்கின்றது. ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் இது தொடர்பாகக் கூறியபோது பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் தான் மணல் அகழப்படுகின்றது என்று கூறுகின்றனர் – என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

ஒன்றரை மாதங்களில் மட்டும் 60 உழவு இயந்திரப் பெட்டிகளுக்கு மேல் மண் அகழப்பட்டுள்ளது. இவ்வாறு மண் அகழ்வது நீர் நிலைகளைப் பாதிக்கும். மண் அகழ்வை உடன் நிறுத்த வேண்டும். அல்லைப்பிட்டி நன்னீர் கிணற்றிலிருந்தே குடிதண்ணீர் பெறப்பட்டு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் வேலணை, மண்டைதீவு, மண்கும்பான், ஊர்காவற்றுறை போன்ற இடங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

மண் அகழ்வால் கடல் நீர் தரைப்பகுதியை நோக்கி வரக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கோடை காலங்களில் இந்தப் பகுதிகள் வறட்சியில் வாடுகின்றமை அனைவரும் தெரிந்ததே. நன்னீர் கிணறும் உவர் நீர் கிணறாக மாறக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது. நீர் நிலைகளைப் பாதிக்கின்ற எந்தவொரு செயலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. இது தொடர்பாக உரியவர்கள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் – என்றனர்.

வேலணை பிரதேச செயலகத்துக்கும், யாழ். மாவட்ட செயலருக்கும் இது தொடர்பாக அண்மையில் இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டன. உகந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும் இது வரை மண் அகழ்வு நடைபெறுகின்றது. அவசியமான அபிவிருத்தி நடவடிக்கைளுக்கு மட்டும் தான் மணல் அகழப்படுகின்றது என்று வேலணை பிரதேச செயலர் கூறுகின்றார். எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் மண் அகழ முடியாது என தெரிவித்திருந்தோம். ஒரு மாதத்துக்கு முன்னராக மாவட்டச் செயலரிடம் தெரிவித்த போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மண் அகழ்வைத் தடுப்பதற்குரிய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது போன்று தெரியவில்லை – என்று நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ்.மாவட்டப் பிரிவினர் தெரிவித்தனர். (ற-21,10)



*வவுனியா, ஓமந்தை நாம்பன் குளத்தில் நெல்சன் பவுண்டேசனால் 200க்கும் மேற்பட்ட மரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடப்பட்டன. 3 ஏக்கர் நிலப்பரப்பில் அவை நடப்பட்டன. வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா மாவட்ட வனவள அதிகாரி ஜி.டி.ஜி.-சரத்குமார, மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ஜி.ஏ.ஜெ. பாலசூரிய, சுங்கங்கள் பணியக மாவட்ட பிரதான பொறியியலாளர் கெ.என்.டி.பிள்யூ.கே. விமலரத்ன, வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி. கிஷோர் சுகந்தி, ஓமந்தை பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.எஸ்.எ.சில்வா, கிராம மக்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-21)*

## விவசாயிகளுக்கு உதவியாக இருவாரஉணவுப்பொருள்கள்

### ஒட்டுசுட்டானில் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.2

முத்தையன்கட்டுக் குளத்தின் கீழ் விவசாயம் புரியும் 12 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக இரு வாரங்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அனிருத்தன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

2016ஆம் ஆண்டு குள சீரமைப்பின் காரணமாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை. காலபோக நெற்செய்கையும் வறட்சியின் காரணமாக அழிவை எதிர்கொண்டுள்ளது. பிரதேசத்தில் மிகவும் வறுமையை எதிர்கொள்ளும் ஆயிரம் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இரு வாரங்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பொதிகள் ஒவ்வொன்றும் சுமார் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியானவை.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதிப் பங்களிப்பில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர்களான ரவிகரன், சிவநேசன் மற்றும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-101)

## கரும்புச் செய்கைக்கான இடம் தெரிவாகவில்லை

### முல்லை. மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.2

முல்லைத்தீவில் கரும்புச் செய்கையை மேற்கொள்வதற்காக இதுவரை எந்த இடமும் தெரிவு செய்யப்படவில்லை என்று மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்ரெயர் நிலத்தில் கரும்புச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

“இந்த விடயம் கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதற்கான இடம் ஒதுக்கப்படவில்லை.

இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் இடங்கள் பிரதேச செயலாளர்கள் ஊடாக ஒதுக்கீடு செய்யப்படும். திட்டத்துக்கான முன்மொழிவின்போது ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவருமான அமைச்சர் ரிசாட் பதியுதீன், இடம் கிடைக்குமாயின் அதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளைத்தனது அமைச்சின் ஊடாக மேற்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்”– என்று மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். (ற-101)

## சக்கர நாற்காலி கையளிப்பு



வவுனியா, ஜன.2

வவுனியா, புளியங்குளம் பிரதேச வைத்திய சாலைக்கு சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. கனடாவைச் சேர்ந்த போதகர் பயஸ் விஜய பாலன் மரியாம்பிள்ளையால் நேற்றுமுன்தினம் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் அகில இலங்கை உண்மை உழைப்பு நிறுவனம் வைத்தியசாலை உத்தியோகத்தரிடம் அதைக் கையளித்தது.

நிகழ்வில் கனகராஜன்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபயகோன் பண்டாரா கலந்து கொண்டார். (ற-21)

# முல்லைத்தீவை கலப்புப் பிரதேசமாக மாற்ற அரசு திட்டம்

## வட மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன. 2

மட்டக்களப்பைப் போன்று முல்லைத்தீவையும் கலப்புப் பிரதேசமாக மாற்றி மூவின மக்கள் வாழும் மாவட்டமாக மாற்ற அரசு முயற்சிக்கின்றது. அதனால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோரிக்கை பலவீனமாகி விடும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன். 'நாளை முல்லைத்தீவு' எனும் அமைப்பின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள நிலங்களை விடுவிக்க வேண்டும் என்பதில் எமது தலைமைகளுக்கு உள்ள அக்கறை மணலாற்றுப் பகுதியிலே இடம்பெறும் குடியேற்றங்களை எப்படிக் தடுப்பது என்பதில் இல்லை என்பதுதான் உண்மை.

நான் மாகாண சபையில் இதைப் பல தடவைகள் கூறியிருக்கிறேன், விவாதித்திருக்கின்றேன்.

குறைந்தபட்சம் எல்லைகளில் உள்ள பாதைகளை யாவது ஒன்றிணையுங்கள். எமது மக்கள் இலகுவாகச் செல்ல முடியும். அடுத்த வரவு-செலவுத் திட்டத்திலாவது வீதிகளைத் திருத்த நிதி ஒதுக்கித் தாருங்கள். இல்லையேல் முல்லைத்தீவு தெற்கு நோக்கிச் சென்றுவிடும். முல்லைத்தீவைப் பற்றி மேடைகளிலே பேசுகின்றோம். தேர்தல்கள் வருகின்ற போது நாங்கள் சரியாகச் சிந்திக்கின்றோமா, நாங் கள் செய்தது சரிதானா என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கொக்கிளாயில் ஒரு விகாரை அமைக்கப்படுகின்றது. விகாரையை ஏன் அமைக்கின்றார்கள்? அங்கே சிங்களவர்கள் வாழ்கின்றனர் என்பதற்காக அல்ல. அங்கே சிங்களவர்கள் குடியேறி இருக்கின்றார்கள். குடியேறியுள்ளவர்கள் கூட புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. இருந்தும் விகாரை அமைப்பதில் முனைப்பாக இருக்கின்றார்கள்.

வடக்கில் இருந்தும், கிழக்கிலிருந்தும் நிலங்களை அபகரித்துச் சிங்கள மக்களைக் கொண்ட மணலாறுப் பிரதேசத்தை உருவாக்கத் திட்டமிடுகின்றனர். வடக்கு, கிழக்கு என்ற தாயகப் பிரதேசத்தை இரண்டாக்க முயற்சிக்கின்றனர்.

இதற்குக் கடந்த அரசு அத்திபாரம் இட்டது. இந்த அரசு தொடர்ந்து செய்கின்றது-என்றார். (ந-21,7,500)

# மடிச்சுக்கட்டி நோயால் நெற்பயிர்கள் பாதிப்பு

தென்மராட்சி, ஜன. 2

தென்மராட்சி தெற்கு தனன்களப்பு, மறவன்புலவு பகுதிகளில் காலபோக நெற்செய்கையில் மடிச்சுக்கட்டி நோய் மற்றும் எரிபந்தம் நோய் என்பற்றால் பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளன என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். அவற்றைக் கட்டுப்படுத்த உரிய களைநாசினிகள் கடைகளில் இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மழை வீழ்ச்சி குறைவாக இருந்தபோதிலும் வயல்களில் நீர் காணப்பட்டதால் நெற்கதிர்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. தற்போது மடிச்சுக் கட்டி மற்றும் எரிபந்தம் என்பன பயிர்களைத் தாக்குகின்றன. உரிய அதிகாரிகள் பார்வையிட்டு இந்த நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடிய களைநாசினிகள் பற்றிய விபரங்களை வழங்க வேண்டும் என்று நெற்செய்கையாளர்கள் கேட்டுள்ளனர். (ந-9)

# கள் உற்பத்தியைக் குறைத்து பதநீர் உற்பத்தியைக் கூட்டுக

## வடக்கு விவசாய அமைச்சர் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜன.2

கள் உற்பத்தியைக் குறைத்து கருப்பட்டி மற்றும் பதநீர் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தினருக்கும், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் இடையே நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலக மண்டபத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் விசேட செயற்பாடான போதைப் பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தில் கள்ளையும் போதைப் பொருளாகப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கள் உற்பத்தியை முற்றாக நிறுத்த வேண்டும் என்று நான் கூறவில்லை. பனை, தெங்கு சார்பான உற்பத்திகளை அதிகரியுங்கள் என்றுதான் கூறுகின்றேன்.

2017ஆம் ஆண்டில் பனை, தெங்கு சார்பான முக்கிய செயற்பாடுகளில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். நாகரிகம் அற்ற முறையில் காணப்படும் கள்ளுத் தவறணைகளை நவீனமயப்படுத்தல், கள் உற்பத்தியைக் குறைத்து கருப்பட்டி மற்றும் பதநீர் உற்பத்தியை அதிகரித்தல், செயற்கைக் கள் உற்பத்தியைத் தடுத்தல், சீவல் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவுதல், தெங்கு, பனை சார் கைப்பணி உற்பத்திகளை அதிகரித்தல், போத்தலில் அடைக்கப்பட்ட கள் உற்பத்தியைக் குறைதல் போன்ற விடயங்களில் நாம் அதிக அக்கறையுடன் செயலாற்ற வேண்டும் - என்றார்.

சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பனை தென்னைவள அபிவிருத்தி சபைகளின் உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-8)

இலங்கை மத்திய வங்கியிலிருந்து ஓர் செய்தி

பணத்தினை அனுப்ப CEFTS இனைப் பயன்படுத்துங்கள்
பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி

மற்றவர்களுக்கான பணத்தினை நாளாந்தம் எந்தநேரத்திலும் உடனடியாக கீழ்வருவனவற்றினூடாக அனுப்பலாம்

- இணையத்தளம்
- செல்லிடத் தொலைபேசி
- தன்னியக்க கூற்றுப் பொறிகள்
- வங்கிக்கு சென்று (கருமபீடம் ஊடாக)

எவ்வாறு பணம் அனுப்பப்படுகிறது?




நீங்கள் எவ்வளவு பணம் அனுப்ப முடியும்? ரூபா. 5 மில்லியன் வரை

உயர்ந்தபட்ச செலவு எவ்வளவு? கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ. 50/- (இணையத்தளம்/செல்லிடத் தொலைபேசி ஊடாக)
கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ. 50 - ரூ. 100 த.கூ.பொறி/கருமபீடம் ஊடாக)

- பொ.இ.நி.மா.ஆழி 2015 ஓகத்து தொடங்கப்பட்டது
- இதுவரையான கொடுக்கல்வாங்கல் 610,000; ரூ. 51 பில்லியன்

மேலதிக விபரங்களுக்கு உங்கள் வர்த்தக வங்கியைத் தொடர்பு கொள்ளுங்கள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பொ.இ.நி.மா.ஆழி மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது

[illegible] 23[illegible] psd@cbsl.lk

# சாரதிக்கு தலைசுற்றியதால் குடைசாய்ந்தது ஓட்டோ

தென்மராட்சி, ஜன.2

பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியின் சாரதிக்கு தலைச்சுற்று வந்ததால் வீதிவளைவில் முச்சக்கரவண்டி குடை சாய்ந்தது. அதில் சாரதியும் உடன் பயணித்த தென்னிலங்கை வாசியும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடிச் சந்தியில் நடந்துள்ளது.

குருணாகலவிலிருந்து பருத்தித்துறைக்கு வந்த ஒருவர் பருத்தித்துறையிலிருந்து நாவற்குளியில் உள்ள உறவுகளைப் பார்க்க அங்கிருந்து முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தி வந்துள்ளார். முச்சக்கரவண்டி கைதடிக்கு வந்தபோது சாரதிக்கு தலைச்சுற்று ஏற்பட்டுள்ளது. வீதியின் ஓரத்துக்கு முச்சக்கரவண்டியைச் செலுத்த முற்பட்டபோது அது குடை சாய்ந்தது. முச்சக்கரவண்டியின் சாரதியும் பயணித்த குருநாகல் வாசியும் அதில் காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ந-9)



யாழ். ஆனைப் பந்தியில் உள்ள குருகுலத்தில் இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்டுவரும் இந்து ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி நெறிசார்ந்த பயிலுநர்கள் கடந்தவெள்ளிக்கிழமை களக்கற்கைக்காக காரைநகர் சிவன் கோவிலுக்குச் சென்றனர். 'கோவிலும் நாமும்' என்ற பொருளில் இடம்பெற்ற இந்த களக் கற்கையில் சிவன் கோவில் மகோற்சவ குரு பிரம்மஸ்ரீ தி.உமாசுதக் குருக்கள், நீர்வை தியாக.மயூரகிரிக் குருக்கள், விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து விளக்கமளித்தனர். (ந-21)

# காணாமல்போன 11 வயதுச் சிறுமி மீட்கப்பட்டார்

கிளிநொச்சி, நாச்சிக்குடாவில் காணவில்லை என்று தேடப்பட்டு வந்த 11 வயதுச் சிறுமி நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் முதல் சிறுமியைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. வீட்டு வாசலில் நின்றிருந்த சிறுமி காணாமல் போயிருந்தார் என்று கூறப்பட்டது. இது தொடர்பாக நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. நாச்சிக்குடா மக்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் நேற்றுமுன்தினம் அவர் நொச்சிமுனை குளப்பகுதியில் மீட்கப்பட்டார். சிறுமி மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது. மருத்துவ பரிசோதனைக்காகச் சிறுமி முழங்காவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-21)

# வில்பத்து தொடர்பான அறிவிப்பை ஜனாதிபதி மீளப்பெற வேண்டும்

## வட மாகாணசபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் வேண்டுகோள்

மன்னார், ஜன.2

வில்பத்து சரணாலயத்துக்கு சொந்தமான பகுதியை விரிவுபடுத்தி அதனை வன ஜீவராசிகள் வலயமாக வர்த்தமானியில் அறிவிக்குமாறு ஜனாதிபதி விடுத்திருக்கும் அறிவிப்பானது 26 வருடங்களுக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகளை மீண்டுமொரு முறை அகதியாக்கும் முயற்சியாகும். ஜனாதிபதி தனது அறிவிப்பை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வட மாகாணசபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது-

முசலிப் பிரதேச முஸ்லிம்களை அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவதற்காக இனவாதிகள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சதி முயற்சிகளின் இன்னுமொரு அங்கமாகவே இது அமைந்துள்ளது. பிரதேசத்தின் உண்மை நிலையை திரிபுபடுத்தி வழங்கிய போலியான ஒலிநாடாக்களையும், பிழையான தகவல்களையும் பெற்றுக்கொண்டு ஜனாதிபதி அவசர அவசரமாக மேற்கொண்ட இந்த முடிவானது நல்லாட்சியின் மீதான முஸ்லிம்களின் நல்லெண்ணத்தை பாழ்படுத்தியுள்ளது.

முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் மீளக்குடியேற முனைந்ததிலிருந்து இனவாதத்தின் ஊற்றுக்களான ஞானசார தேரர், ஆனந்த தேரர் ஆகியோர் அந்த முஸ்லிம்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டே வந்தனர். தற்போதும் அதே முயற்சிகளையே மேற்கொள்கின்றனர்.

பாலைக்குழி, கரடிக்குழி, காயாக்குழி, மறிச்சுக்கட்டி போன்ற தமது பூர்வீகக் காணிகளில் உள்ள காடுகளை அகதி முஸ்லிம்கள் துப்புரவாக்கி கொட்டில்களை அமைத்த போது ஞானசார தேரர் தலைமையிலான இனவாதக்கூட்டம் அங்கு சென்று கொட்டில்களைப் பிடுங்கி எறிந்து அட்டகாசம் செய்தனர். இனவாத தனியார் ஊடகங்கள் அங்கு சென்று நவீன இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி வில்பத்துக் காடுகளை அழிப்பது போன்ற படங்களை எடுத்து அதனை தமது ஊடகங்களில் பரப்புரை செய்தனர். இதன் மூலம் முஸ்லிம்கள் தொடர்பாக சிங்கள மக்களின் மனங்களில் பிழையான கருத்தை ஏற்படுத்தி அவர்களைத் தூண்டி விடுவதே இனவாதிகளினதும் இனவாத ஊடகங்களினதும் நோக்கமாக அப்போது இருந்தது . மக்களுக்கு எதிராகவும் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராகவும் இனவாதச் சூழலியலாளர்கள் பல வழக்குகளைப் பதிந்தனர். இது தொடர்பில் இடம்பெறும் வழக்குகளிலே சட்டமா அதிபரின் அறிக்கையில் கூட வில்பத்துக் காடுகள் அழிக்கப்படவில்லை என்றே நீதிமன்றத்துக்கு அத்தாட்சி வழங்கப்பட்டுள்ளது. இனவாதிகளின் குற்றச்சாட்டுக்கள் பிழையானதென்றும் வில்பத்துவில் முஸ்லிம்கள் குடியேறவேயில்லை எனவும் மன்னார் மாவட்ட செயலாளரும் முசலி பிரதேச செயலாளரும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனவாதிகளின் பிழையான தகவல்களைப் பெற்று இவ்வாறான நடவடிக்கைகளை இப்போது மேற்கொள்வது நல்லாட்சி மீதான முஸ்லிம்களின் நம்பிக்கையை இழக்க வைக்கின்றது.

யாழ்ப்பாணத்துக்கு முன்னர் ஒரு தடவை பயணம் செய்த ஜனாதிபதி மைத்திரி வில்பத்துக்கு மேலாக தாம் விமானத்தில் பயணம் செய்த போது காடழிப்பு இடம்பெற்றதை அவதானித்தேன் என்று கூறினார். அப்போதும் நாங்கள் இந்தக்கூற்றைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். இப்போது மீண்டும் இனவாதிகளின் பொய்க் கதைகளைக் கேட்டுவிட்டு திடீரென இவ்வாறான அறிவிப்பை விடுத்திருக்கின்றார். நாட்டுத்தலைவரின் இந்த அறிவிப்பு வடக்கு முஸ்லிம்களை கவலைகொள்ளச் செய்துள்ளது. இந்த அறிவிப்பை இரத்துச் செய்ய வேண்டும். - என்றார்.

(ற-21,56)

# போரால் சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கு மானிய உதவி

யாழ்ப்பாணம், ஜன.2

குடாநாட்டில் போரால் சேதமடைந்த நிலையிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு மானியமாக 5 லட்சம் ரூபா வரை பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து சேதமடைந்த வீடுகளின் விவரங்களைத் திரட்டுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரு தசாப்தங்களுக்கு முன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சராக விருந்த பிரேமதாஸவால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கான பயனாளிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து, பெரும்பாலான வீடுகள் பகுதியாகவும் முழுமையாகவும் சேதத்துக்குள்ளாகின. இதனால் அந்த வீடுகளில் மக்கள் வெளியேறி வெற்றிடங்களில் வாழ்கின்றனர்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ மானிய மாக 5 இலட்சம் ரூபா வரை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். பிரதேசரீதியாகச் சேதமடைந்த வீடுகளின் விவரங்களைத் திரட்டுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்என தெரிவிக்கப்பட்டது. (ற-115)

# மாணவர்களுக்கு உதவிப் பொருள்கள்

வவுனியா, ஜன.2

வவுனியா கனகராயன்குளம் சிவில் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள், வறிய மாணவர்கள், தாய் தந்தையை இழந்த பிள்ளைகள் எனத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கனகராயன்குளம் சிவில் பாதுகாப்புக்குழுத் தலைவரும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வித்தியாலய அதிபருமான திரு. சுபாஸ் தலைமையில் கனகராயன்குளம் கலா மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலா மன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. புளியங்குளம் பிரதேச வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், வைத்தியர், கனகராயன்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி, சிவில் பாதுகாப்புக்குழு பொறுப்பதிகாரி, பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், மாதர் சங்க அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினர். இதற்கான நிதி அனுசரணையை பயஸ் விஜயபாலன் மரியாம்பிள்ளை வழங்கியிருந்தார். (ற-21)

# கவிதை நூல் அறிமுக விழா

காரைநகர், ஜன.2

காரைநகர் நாகமுத்துப் புலவர் கவிதைகள் நூல் அறிமுக விழா எதிர்வரும் 12ஆம் திகதி வியா ழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண் டபத் தில் கல்லூரியின் முன் னாள் அதிபர் கலாபூஜணம் பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை தலை மையில் நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக சிறுவர் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசியுரையை யாழ் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணமும், வாழ்த்துரைகளை வட மாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச் செயலரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான ப.விக்னேஸ்வரன், காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன், பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், காரைநகர் மணி வாசகர் சபையின் முன்னாள் செயலர் கவிஞர் வே.குமார சுவாமி ஆகியோரும், நூலின் அறிமுகவுரையை சிவத்தமிழ் காவலர் ஆ.செந்தில்நாதனும், வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக முன்னாள் தழிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவும் வழங்கவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை ஸ்டாலினா யோகரத்தினம் நூலை வெளியிட்டு வைக்க கௌரவப் பிரதியை. செல்வி இராணி வைத்தீசுவரக்குருக்கள் பெற்றுக் கொள் வார். ஆய்வு ரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும், நன்றியுரையை நூலின் தொகுப்பாளரும் வெளியீட்டாருமான கனக சிவகுமாரனும் வழங்குவர்.(ற-250)

# உரிமைக்காக குரல் கொடுக்க கூட்டமைப்பே சிறந்த தெரிவு

## வடமாகாண சபை உறுப்பினர் மயூரன் அமைச்சர் விஜயகலாவுக்கு ஆலோசனை

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பே சிறப்பான தெரிவாக இருக்க முடியும். இனவாத கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருந்து ஒரு போதும்குரல்கொடுக்கமுடியாது.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

அமைச்சர் விஜயகலாவின் 'விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்'பற்றிய கருத்துக்கள் தென்னிலங்கை இனவாதிகளால் தூக்கிப்பிடிக்கப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல. தமிழ் மக்களோ தமிழ் தலைவர்களோ எமது மக்களின் மன எழுச்சியை, உணர்வுகளின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணரும் போது இது போன்ற இனவாதம் தூசு தட்டப்படுவது தென்னிலங்கையைப் பொறுத்தவரை இனவாதத்தின் இயல்பு நிலையாகும்.

இனவாதத்தின் வரலாற்றுப் பக்கங்கள் காலத்துக்குக் காலம் இவர்களால் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே வரும். இது மாற்றியமைக் கப்பட எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன. இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தேசிய அரசிலும், ஐ.தே.கட்சியிலும் ஓர் உறுப்பினர். பிரபாகரன் உலகின் சிறந்த தலைவர் என்றும் நாட்டின் பிரதமராக பதவி வகிக்கத் தகுதியானவர் என்பதையும் தெரிவித்தமையால் விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் ஆளாகியுள்ளார். தனது கருத்தை ஏற்றுக் கொள்ளவோ, ஜீரணிக்கவோ அவரது கட்சிக்காரர்கள் மறுக்கின்ற பட்சத்தில் தொடர்ந்தும் அக்கூட்டுக் குள் இருந்து கொண்டு உண்மையையும், உரிமைக் குரலையும் ஒலிக்க முடியாது.

ஐ.தே.கட்சி ஒரு இனவாதக் கட்சியாகவே பதிவு செய்யப்பட்டது. ஆட்சி பீடத்தில் ஏறுவதற்காக காலத்துக்கு காலம் சிறுபான்மை இனங்களின் மீது கரிசனை காட்டுவதாக வேசமிட்டாலும் பேரினவாதப் பிடிக்குள் இருந்து அவர்கள் வெளியேற மாட்டார்கள். வெளி யேறவும் முடியாது.

அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் தடைகள் பல தாண்டித் தான் அரசியல் ஒறுத்தல்களுடன் உரிமைக்காக குரல் கொடுக்க முடியும். அவர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பே சிறப்பான தெரிவாக இருக்க முடியும். இனவாதக் கட்சி ஒன்றுக்குள் இருந்து கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் கட்சி என ஏற்றுக்கொண்டவர். இணைந்து செயற்பட அண்மைக்காலங்களில் சமிக்ஞையை வெளிப்படுத்தியவர். கட்சிக்குள் நெருக்கடிகள் ஏற்பட்டால் துணிவுடன் செயற்பட த.தே.கூட்டமைப்பை அவர் தெரிவு செய்ய முடியும்.

பிரபாகரன் உலகறிந்த ஓர் ஒப்பற்ற தலைவன் என்று சொல்லக்கூடிய, ஏற்றுக்கொள்ளுகின்ற தலைவர்களே இன்று எமக்குத் தேவை. விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டத்தையும், தமிழ் மக்களின் தார்மீக, உணர்வு பூர்வமான ஆதரவையும் வேறுபடுத்திக் கொண்டு, ஏற்கமறுத்துக்கொண்டு அரசியல் செயற்பாடுகளை இந்த மண்ணிலே ஒரு போதும் முன்னெடுக்கவும் முடியாது. அது வெற்றி பெறவும் முடியாது என்பதையும் அனைவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்-என்றுள்ளது. (21)




## வரவு – செலவுத் திட்டத்தின் பிரேரணைகள் நடைமுறை

### நேற்றுமுதல் ஆரம்பம் என்று நிதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2
2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட 362 பிரேரணைகள் நேற்று முதல் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
இந்த விடயங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
நடைமுறைப்படுத் தப்படவுள்ள திட்டங்கள் குறித்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது.
வரவு - செலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் மக்கள் பயன்பாட்டுக்கான செயற்றிட்டங்கள் என்பன நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
அதற்கான அனைத்து செயற்பாடுகளும் சட்டரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டும். மக்கள் பயனடையும் வகையில், விரைவாக இந்தச் செயற்பாடுகளையும் முன்னெடுக்குமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் பணிக்கப்பட்டுள்ளது- என்றார். (ற-4)

## அரிசி இறக்குமதி ஊழல் விசாரணைகள் நிறைவு

கொழும்பு, ஜன. 2
லக் சதொச ஊடாக அரிசி இறக்குமதியில் 8 பில்லியன் ரூபா ஊழல் நடைபெற்றது என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைகள் நிறைவுபெற்றுள்ளன.
2014, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் லக் சதொச ஊடாக அரிசி இறக்குமதியில் 8 பில்லியன் ரூபா ஊழல் மோசடி இடம்பெற்றது என்று குற்றஞ்சாட்டபடுகின்றது.
கோப் குழுவின் வேண்டுகோளுக்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தால் இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.



விசாரணை அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை கோப் குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்தார்.
2014, 2015 ஆம் ஆண்டுப் பகுதியில் வர்த்தகத்துறையில் கடமையாற்றிய அதிகாரிகளிடமும் லக்சதொச நிறுவனத்திடமிருந்தும் அரிசி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெறுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# நல்லாட்சியிலும் மக்கள் காணிகள் படைகள் வசம்

## வியாழேந்திரன் எம்.பி. கண்டனம்

மட்டக்களப்பு, ஜன.2
கிழக்கு முகாணத்திலே போர் முடிந்து சுமார் 10 வருடங்களாகின்றன. பொதுமக்களின் காணிகள் பொலிஸ் மற்றும் படையினரால் இன்னமும் விடுவிக்கப்படாமலிருப்பது நல்லாட்சி மீதான சந்தேகத்தை வலுக்கச் செய்கிறது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
2017ஆம் ஆண்டில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்களும் நாமும் அவாவுற்றுள்ளோம்.
போர் முடிந்து சுமார் 10 ஆண்டுகளாகிவிட்ட போதும் மக்கள் நலத் திட்டங்களினூடாக மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைக் கூட நிறைவுசெய்து கொடுப்பதற்கு காணிகள் விடுவிக்கப்படாமை போன்ற தடைகள் இருப்பது கவலைக்குரிய விடயம். நல்லாட்சியில் மக்களின் குடியிருப்பு மற்றும் வாழ்வாதாரக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்.
ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மைலம்பாவெளியில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் இந்து மக்களின் பிரபலமான ஸ்ரீ காமாட்சி வழிபாட்டு இடத்துக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரண் விடுவிக்கப்படாதுள்ளது.
அதனால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.
மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலே, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலே பேசப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோது மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொறுப்புவாய்ந்த அனைத்து அதிகாரிகளும் காணிகள் 3 மாதங்களில் விடுவிக்கப்படும் என வாக்குறுதியளித்தார்கள்.
அது இன்றளவும் நடைமுறைப்படுத்தப் படாததால் மக்கள் தமது உரிமையைக் கேட்டு வீதிக்கு வந்துள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்டத்திலே இன்னமும் பொலிஸ் மற்றும் படையினர் வசமுள்ள பொது மக்களின் குடியிருப்புக் காணிகள், வாழ்வாதாரக் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்- என்றார் (ற-ய-46,47)

## சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.2
பாதாள உலக கோஷ்டியின் முக்கியஸ்தர் என்று கூறப்பட்ட உடமவிட சமரே என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பத்தில் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 24 ஆம் திகதி, வெயாங்கொடையில் உடமவிட சாமர துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார்.
சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் நபரொருவர் மோட்டார் சைக்களில் வந்த ஒருவருடன் தப்பிச்சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன.2
புது வருடத்தின் முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நாடு முழுவதும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.
அண்மையில் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக நாடு முழுவதும் 68 பாடசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தப் பாடசாலைகள் யாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன என்றும் கல்வி அமைச்சு தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## தென் மாகாண அபிவிருத்தி திட்டம் சனியன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 2
அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவின் உதவியுடன் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளார்.
இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஸியான்லியாங் மற் றும் முக்கிய அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றுருகுணு அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் தலைவர் அஜித் கோஸ்தா தெரிவித்தார்.
இந்தத் திட்டத்தின் கீழ் துறைமுகம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, மற்றும் கைத்தொழில் பூங்கா என்பன அபிவிருத்தி செய்யப்படும். அதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீத உரிமை சீனாவுக்கு வழங்கப்படவுள்ளது. அம்பாந்தோட்டை, மொனராகல, மாத்தறை மாவட்டங்களில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளும் சீன நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, இந்த நடவடிக்கைக்கு முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (ற-4)



2017 ஆம் ஆண்டு ஊவா மாகாண தமிழ்க் கல்வி அபிவிருத்தி ஆண்டாக மாகாண கல்வி அபிவிருத்தி மன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. நேற்றுக்காலை பதுளை - ரொக்கில் ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானத்தில் மேற்படி பிரகடனம் வைபவ ரீதியாக வெளியிடப்பட்டது. நிகழ்வில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், ஊவா மாகாணசபை உறுப்பினர் வே. ருத்திரதீபன் மற்றும் கல்வியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-ய-41)

## பிரியங்கர ஜயரத்ன பதவி விலக முடிவு!

கொழும்பு, ஜன. 2
உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் சந்தித்த இராஜாங்க அமைச்சர் கடிதத்தை ஒப்படைத்தார் என்று பிரியங்கர ஜயரத்னவின் இணைப்புச் செயலாளர் தெரிவித்தார்.



புதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
பிரியங்கர ஜயரத்னவால் பயன்படுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் அமைச்சில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ற-4)

## மலையக தொழிலாளர் போராட்டம் முடிவு


நுவரெலியா, ஜன.2
நுவரெலியா - சந்தப்பளை பார்க் தோட்டத்தைச் சேர்ந்த சந்திரகாந்தி, தேயிலை மலை மற்றும் பார்க் ஆகிய மூன்று பிரிவுகளை சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த 26 நாள்களாக மேற்கொண்டுவந்த பணிப் புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

கொழும்பு நாராஹம்பிட்டியவில் அமைந்துள்ள தொழில் அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சை அடுத்தே இன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புகின்றனர்.

தோட்ட அதிகாரியை இடமாற்ற வேண்டும் என்று கோரி தொழிலாளர்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தொழில் ஆணையாளருடனான சந்திப்பில், அந்த அதிகாரி எந்தக் காரணம் கொண்டும் நேரடியாக தொழிலாளர் விவகாரத்தில் தலையிடமாட்டார் என இணக்கம் காணப்பட்டதை அடுத்து தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

தொழில் ஆணையாளருடனான பேச்சில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தலைவர் எஸ்.சதாசிவம் மற்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் செயலாளருமான வடிவேல் சுரேஸ் ஆகியோருடன் தோட்ட தொழிலாளர்கள் 75 பேரும் கலந்து கொண்டனர். (ற-ய-43)



## ஏமாற்றியது மழை நெருக்கடியில் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஜன.2
கிளிநொச்சி, கண்டாவளையில் மானாவரி செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மழை பொய்த்ததால் கடும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். குளம், ஆறுகளில் இருந்து இயந்திரம் மூலம் வயல்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கண்டாவளையில் விவசாயி ஒருவர் 850 அடி தூரத்துக்கு இயந்திரத்தின் மூலம் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுகின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அனேக பிரதேசங்களில் காலபோகச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. காலபோகத்தில் மழையை நம்பி மானாவரி செய்கையிலேயே அதிகமானவர்கள் ஈடுபடுவர்.

கண்டாவளையில் 975 விவசாயிகள் 3ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேல் மானாவரி செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் வழமையாக அதிகளவான மழை வீழ்ச்சி காணப்படும். இந்த வருடம் மழைவீழ்ச்சி இல்லாததால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

இரணைமடு குளத்தில் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதால் நீரை சேமித்து வைக்க முடியவில்லை. கல்மடு குள நீரை பெரியகுளத்துக்கு பாய்ச்சி அங்கிருந்து வாய்கால்கள் மூலம் வயல்களுக்குப் பாய்ச்ச வேண்டிய நிலை காணப்படுகின்றது. வாய்கால் கரைகள் மற்றும் குளக்கரைகளுக்கு அண்மையில் உள்ள வயல்களுக்கு இலகுவாக நீர் பாய்ச்சப்படுகின்றது. தொலைவில் உள்ள வயல் நிலங்களுக்கு இயந்திரங்களை பயன்படுத்தியே நீர் பாய்ச்சப்படுகின்றது. ஒரு விவசாயி தனது வயலுக்கு 850 அடி தூரத்தில் இருந்து இயந்திரம் மூலம் நீர் பெறுகின்றார்.

வசதி குறைந்த விவசாயிகள் இயந்திரங்கள் மூலம் நீர் பாய்ச்ச முடியாத நிலையில் உள்ளனர். வறட்சியான காலநிலை தொடருமானால் பயிர்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ற-21,6)

## வடக்கு மாகாணத்தில் 15,600 ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், ஜன.2
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள 12 கல்வி வலயங்களின் கீழ் உள்ள 940 பாடசாலைகளில் தற்போது 15 ஆயிரத்து 600 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இவ்வாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது-

வலயம் மற்றும் கோட்டத் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் என்பவற்றில் 2 ஆயிரத்து 820 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். வட மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் மொத்தமாக 18 ஆயிரத்து 420 பணியாளர்கள் சேவையாற்றுகின்றனர்.

அவர்களுக்கான வேதனம், அலுவலகச் செலவுகள், வாகனப் பராமரிப்பு, எரிபொருள், காகிதாதிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகச் செலவினமாக 2016ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினத்தில் 9 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவு ஏற்பட்டுள்ளது. வட மாகாண சபையின் ஒதுக்கீட்டின் கீழ் மூலதனச் செலவாக 570 மில்லியன் ரூபாவும், உலக வங்கியின் ஊடாக மாகாணத் திறைசேரியின் ஊடாக 465 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட ஆயிரத்து 425 மில்லியன் ரூபாவில் மாகாண ஒதுக்கீட்டின் 570 மில்லியன் ரூபாவும், உலக வங்கியின் நிதியில் 289 மில்லியன் ரூபாவுமாக 759 மில்லியன் ரூபா ஏற்கனவே கிடைத்துள்ளது. மிகுதி 666 மில்லியன் ரூபாவுக்கான தீர்ப்பனவுகளுக்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன.

மத்திய அரசின் கீழான ஆயிரத்து 450 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்களும் இடம் பெற்றுள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களினது நிதிப் பங்களிப்பிலான திட்டங்களும் இடம்பெற்றன. அரச சார்பற்ற நிறுவனப் பங்களிப்பின் கீழ் யு.என்.கபிட்டாஸ், சேவ்த சில்ரன் என போன்ற நிறுவனங்களின் ஊடாக பாடசாலைக் கட்டடங்கள், அதிபர், ஆசிரியர் விடுதிகள் எனப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள், வேதனம் என்ற வகையில் வட மாகாண கல்வி அமைச்சில் 2016ஆம் ஆண்டில் மொத்தமாக 12 ஆயிரத்து 205 மில்லியன் ரூபா மொத்த செலவினமாக கண்டறியப்பட்டுள்ளது-என்றார். (ற-101)

## கரையோர பகுதிகளில் தென்னம் பிள்ளைகள்

யாழ்ப்பாணம், ஜன.2
பொம்மை வெளியை அண்டிய கரையோரங்களில் யாழ். மாநகராட்சி மன்றம் தென்னம்பிள்ளைகளை நட்டுள்ளது. சுமார் நூறு வரையிலான தென்னம் பிள்ளைகள் நடப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

அவற்றுக்குப் பாதுகாப்புக் கூடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. கரையோரப் பகுதியில் உவர் நிலப் பிரதேசத்தில் தென்னங் கன்றுகள் விரைவாக வளரும் என்பதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டிலும் தென்னங் கன்றுகள் கரையோரப் பிரதேசத்தில் நடப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-17)



யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்று மதியம் 12 மணியளவில் இளைஞர்கள் வெடி கொளுத்தி புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். அதனால் போக்குவரத்து சிறிது நேரம் தடைப் பட்டது. வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன. நீண்ட தொடர் வெடிகள் கொளுத்தப்பட்டதால் அந்த இடம் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. (ற-8)

## பதவி விலகுவது தொடர்பில் இந்த மாத இறுதியில் முடிவு

### வட மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் கூறுகின்றார்

வவுனியா, ஜன.2
2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் பதவி விலகுவது தொடர்பாக நான் எடுத்த முடிவு இந்த மாத இறுதியில் வெளிப்படுத்தப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது:
கடந்த மாதம் வவுனியாவில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பின் போது அவர்களால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்காவிட்டால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல் மாகாணசபை உறுப்பினர்கள் என அனைவரும் பதவி விலக வேண்டும் என கூறியிருந்தேன்.

2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு கிடைக்கா விட்டால் மக்கள் எங்களுக்கு அளித்த ஆணைகளின்படி நாம் எல்லோருமாக பதவி விலகி இந்த அரசை இக்கட்டான நிலைக்கு இட்டுச் சென்று பன்னாட்டு மட்டத்தில் எமக்கு ஏதுவான நிலையை ஏற்படுத்தலாம் என்றே நான் அவ்வாறு கூறியிருந்தேன்.

ஒரு சில முகநூல் நண்பர்கள் இப்படித்தான் ஒருதடவை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலகுவதாக கூறி பதவி விலகவில்லை, இவர் மட்டும் விலகுவாரா?" என்று கேட்கின்றார்கள். நான் பதவி விலகுவேன் எனும் உறுதியில் தான் எல்லோரையும் பதவி விலக வேண்டும் என கூறியிருந்தேன். நான் மட்டும் பதவி விலகுவதால் இந்த இலங்கை அரசு ஒரு நெருக்கடியை சந்திக்கும், பன்னாடு எங்களுக்கு உதவி செய்யும் என்று நீங்கள் நம்பு வீர்களாயின் நான் பதவி விலகு வதில் பின்வாங்க மாட்டேன். நான் நகரசபையில் (2009ஆம் ஆண்டு) கடமையாற்றிய போது செய்த தவறை மீண்டும் செய்ய விரும்பவில்லை. ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள வர்கள் அனைவரும் பதவி விலகுபவர்களாக இருந்தால் நான் வவுனியா மக்களை கேட்க வேண்டிய தேவை ஏற்படாது என்று எண்ணுகிறேன். அது ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முடிவாகத் தான் அமையும் என்பதை தயவு செய்து நீங்கள் புரிந்து கொள்வீர்களாக.

நேற்று முன்தினம் என்னுடைய ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்த போது எதிர்வரும் 4ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். முக்கிய அறிவித்தல் ஒன்றை வெளியிட உள்ளார் என்று ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது. எதிர்வரும் 6 ஆம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற உள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் இறுதி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இவை இந்த மாதத்தில் இடம்பெற இருப்பதால் அவற்றின் சாதக, பாதக நிலைமைகளைக் கண்டறியாது பதவி விலக அனுமதிக்க முடியாது என அவர்கள் உறுதிப்பட தெரிவித்துள்ளனர். இந்தக் காரணங்களை சீர்தூக்கிப் பார்த்து ஒரு பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இவற்றினை அவதானித்து முடிவு எடுக்கலாம் எனும் நிலைப்பாட்டில் உள்ளேன்-என்றார். (ற-21)

# மாணவர்களுக்கு சுகாதாரக் காப்புறுதி

## புத்தாண்டில் அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜன.2

புத்தாண்டில் மாணவர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் நலத்திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. 45 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான சுகாதாரக் காப்பீடு வழங்கப் பட்டுள்ளது.

5 முதல் 19 வயதுடைய பாடசாலை மாணவர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். நிதியமைச்சர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கை மூலமே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்காக வரவு - செலவுத் திட்டத்தில் 2 ஆயிரத்து 700 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது. இதன்மூலம் அனைத்து மாணவர்களும் எந்த வைத்தியசாலையிலும் சுகாதார வசதியைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரச, தனியார் பாடசாலை மாணவர்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## மனைவிக்கு தீவைத்த கணவருக்கு மறியல்

திருமலை, ஜன.2

தனது மனைவிமீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கணவரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிவான் உத்தரவிட்டார். முள்ளிப்பொத்தானை ஒன்பதாம் கொலனியைச் சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவதினம் சந்தேகநபரின் (வயது - 53) மனைவி வீட்டில் வேறு ஒரு நபருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், அதனால் கோபம் கொண்ட கணவரான சந்தேகபர் அவர்மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீ மூட்டினார் என்றும் கூறப்படுகின்றது. தீக்காயங்களுக் குள்ளான பெண் கந்தளாய் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெறுகின்றார் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ய-45

## தாக்குதலில் தந்தை, மகன் காயம்

திருமலை, ஜன.2

திருகோணமலை - நிலாவெளி, கேனேசபுரியில் வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்த தந்தையும் மகனும் தாக்குதலுக் குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கே.மாரிமுத்து (வயது-45) அவரது மகனான எம்.தனுசன் (வயது- 22) என்ற இருவருமே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளை, இனந்தெரியாதவர்கள் வந்து தாக்கி விட்டு தப்பிச்சென்றனர் என்று நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் நிலாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ற-ய-45)

# தனித்து எதையும் சாதிக்க முடியாது

## பிரதியமைச்சர் அமீர்அலி தெரிவிப்பு

செங்கலடி, ஜன.02

நாட்டில் இரு பெரும்பான்மைக் கட்சிகள் இணைந்து ஆட்சி செய்யும் நிலையில் சிறுபான்மைச் சமூகங்கள் தனித்து நின்று எதையும் சாதித்துவிட முடியாது.

இவ்வாறு கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசபண்ணையாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை மது பாவனை மிக அதிகமாக உள்ளது. அதைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். கடந்தகால தனிப்பட்டபேதங்களைமறந்து மாவட்டத்தில் மது பாவனையைக் குறைப்பதற்கு அரசியல் தலைமைத்துவங்கள் ஒதுமித்த கருத்து வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

மதுபாவனையில் சமூக சீரழிவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமானால் மது பாவனையால் ஏற்படுகின்ற செலவைக் குறைக்க வேண்டும்.

மதுபாவனை குறைப்பு விடயத்தில் மாவட்டத்திலுள்ள அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து செல்வதற்கு நல்ல தருணம் ஏற்பட்டுள்ளது. இன-மத-பேதங்களை தனிப்பட்ட குரோதங்களை மறந்து மனிதநேயத்துடன் எல்லோரும் கைகோத்து இப்பணியில் ஈடுபடவேண்டும்.

எமக்குள்ள அரசியல் கருத்துக்களில் சரி பிழை கண்டு முரண்பாடுகளுடன் செயற்படுவதை விட்டு இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான பணியில் ஈடுபடவேண்டும்.

நாட்டில் தற்போதைய அரசியல்சூழலைப்பொறுத்தவரை இரு பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சி செய்கின்றன. இந்த நிலையில் தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ தனித்து நின்று எதையும் சாதிக்கமுடியாது.அவர்களுடன்இணைந்து எமக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ற- ய-47)

# ஒருமித்து வாக்களித்திருந்தால் தமிழ்க் கூட்டமைப்புக்கே கிழக்கு

## மாகாணசபை உறுப்பினர் நடராசா தெரிவிப்பு

களுவாஞ்சிக்குடி, ஜன.2

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எமது மக்கள் ஒருமித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்திருந்தால் கிழக்கு மாகாண சபையின் முழுமையான ஆட்சிஅதிகாரத்தை கூட்டமைப்பு கைப்பற்றியிருக்கும். எமது மக்கள் அவற்றை தவற விட்டார்கள். அவர்கள் வாக்களிப்பில் கூடிய சிரத்தை செலுத்தவில்லை.

எதிர்வருகின்ற தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரமே எமது மக்கள்வாக்களிக்கவேண்டும்.

இவ்வாறு கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அநேகமாக எங்கும் தொழில்லாப் பிரச்சினைகள் இருக்கின்றன. தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடிய வசதிகள் எமக்குக் குறைவாகவுள்ளன. அரச நியமனங்களை எம்மால் வழங்கமுடியாது. அவை எமது கையிலும் இல்லை. வீதிகள் சீரமைத்தல், மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், சிறு தொழில் முயற்சிகளுக்கு உதவுதல் உள்ளிட்ட சில அபிவிருத்தி வேலைத் திட்டங்களையே எம்மால் பெற்றுக் கொடுக்க முடியும்.

சிறுபான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த காலங்களில் எமது மக்களின் வாக்குகளைச்சிதறடித்திருந்தார்கள். எதிர்வருகின்ற தேர்தலில் மக்கள் தவறு செய்து விடக் கூடாது. பேரினவாதக் கட்சிகளை ஆதரித்து வாக்களிப்பதை எமது தமிழ் மக்கள் நிறுத்த வேண்டும்.

பேரினவாதக் கட்சியைச் சேர்ந்தோரோ, முஸ்லிம் மக்களோ எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதில்லை. தமிழ் மக்கள் தான் பேரினவாதக் கட்சிகளுக்கும், முஸ்லிம் கட்சிகளுக்கும் வாக்களித்து வருகின்றார்கள் - என்றார். (ற-ய)

## பண்டாரவளையில் 8 வீடுகள் தாழிறக்கம்

பதுளை, ஜன.2

பதுளை - பண்டாரவளை உடபேருவ பகுதியில் நேற்றுமுன்தினம் 8 வீடுகள் தாழிறங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உமாஓயா செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதியிலேயே வீடுகள் தாழிறங்கியுள்ளன.

சாதாரண வெடிப்புகளுடன் காணப்பட்ட இந்த வீடுகள் நேற்றுமுன்தினம் பெரும் சத்தத்துடன் தாழிறங்கின. உமாஓயா செயற்றிட்டத்தின் காரணமாகவே குறித்த வீடுகள் தாழிறங்கியுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

தாழிறங்கிய வீடுகளில் இருந்து வெளியேறிய சுமார் 60 பேர் எல்ல புறநகர்ப் பகுதி பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ற-ய-4)

## தேக்கு மரப் பலகைகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.2

சட்டவிரோதமாக தேக்கு, கொஹம்ப மரப் பலகைகளைக் கொண்டு சென்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவத்தேகம - மெத்தேவ பிரதேசத்திலேயே அவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான மரப் பலகைகள் அறுக்கப்பட்டுள்ளன என்றும்-விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும்-பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# தண்ணீர் பாதுகாப்பு குறித்து வவுனியாவில் கருத்தமர்வு

வவுனியா, ஜன.2

'இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் 3 ஆம் ஆண்டு நினைவு பகிர்வை முன்னிட்டுதண்ணீர் அனைத்து உயிர்களின் அடிப்படை உரிமை அது விற்பனை பொருளல்ல' என்ற தொனிப்பொருளில் வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது.

சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்ற கருத்தமர்வில் எதிர்காலத்தில் தண்ணீரை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு



மற்றும் பல்தேசிய கம்பனிகள் தண்ணீரை விற்பனை பொருளாக மாற்றுகின்றமை, விவசாய நிலங்கள் மற்றும் குளங்களை பாதுகாக்க வேண்டிய தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் இயற்கை வேளாண்மையும் நீர் மேலாண்மையும் என்ற தலைப்பில் இலங்கையின் இயற்கை வேளாண் விஞ்ஞானி கலாநிதி லயனல் வீரக்கோனும், தண்ணீர் அனைத்து உயிர்களின் அடிப்படை உரிமை என்ற தலைப்பில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நா.தேவகிருஷ்ணனும், நவ காலனித்துவத்தில் இலங்கையின் தண்ணீர் கொள்கை என்ற தலைப்பில் மக்கள் திட்ட ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் உபாலி லிவுலியதாவும், யாழ். குடாநாட்டின் குடிதண்ணீர் அரசியல் என்ற தலைப்பில் ஊடகவியலாளர் அ.ஜெயச்சந்திரனும், வவுனியாவில் நிலத்தடி நீர் பாதிப்புக்கள் குறித்து சமூக விழிப் புணர்வுக்கான மக்கள் அமைப்பின் பேச்சாளர் சி.சதீஸ்குமாரும் கருத்துரைகளை வழங்கினர். (ற-2)




## செவ்வாய் உரோமானிய போர்க் கடவுளின் நாமத்தோடு தென்படுகிறது

பாறைக்கோளமாக தென்படுகின்ற செவ்வாய்க்கு உரோமானிய போர்க் கடவுளின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன்படி மார்ஸ் எனும் நாமம் கொண்டு செவ்வாய் அழைக்கப்படுகிறது.

பூமியின் ஈர்ப்புவிசையின் 37 சத விகிதம்தான் செவ்வாயில் இருப்பதன் காரணமாக பூமியில் எதிர் விசையோடு நாம் குதிப்பது போல செவ்வாயில் குதிக்கும்போது 3 மடங்கு உயரத்தில் மிதக்க முடியும் என சொல்லப்படுகிறது. இவை தவிர செவ்வாயில் உள்ள 21 கிலோ மீற்றர் நீளமும் 600 கிலோமீற்றர் சுற்றளவுடையதுமான ஒலிம்பஸ் மோன்ஸ் எரிமலை எவரெஸ்ட் சிகரத்தையும் விட உயரமானதாகக் காணப்படுகிறது.

செவ்வாய்க்குரித்தானதாக போபோஸ், டெய்மோஸ் என்ற இரு நிலவுகள் உண்டு. கிரேக்க கடவுளான ஏரிஸ் பயணிக்கும் தேர்க்குதிரைகளின் பெயர்களே அவற்றுக்கு சூட்டப்பட்டுள்ளது.

மேலும் செவ்வாய்க் கோளின் மண் சிவப்பாக காட்சியளிப்பதுடன் அதற்கு அங்கு செறிவாகக் காணப்படும் இரும்பு ஒக்சைட்டே காரணம் என்றும் கூறப்படுகிறது. சூரியனிலிருந்து 4 ஆவது கோளான செவ்வாயில் ஒரு நாள் என்பது 24 மணி நேரம் 39 நிமிடங்களாக இருக்கிறது.

குறிப்பாக செவ்வாயில் பூமியைப் போலவே எரிமலைகள், பள்ளத்தாக்குகள், பருவநிலை மாறுதல்கள் உண்டு என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## நுகர்வோர் நலன்கருதி பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் நலன்களை முன்னிறுத்தி இதுவரை பல்வேறு நடவடிக்கைகளை நுகர்வோர் சேவை அதிகார சபை மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் கசித திலகரத்ன தெரிவித்துள்ளார்.

மிகப்பிரதானமாக நுகர்வோர் நலன் கருதி முற்றுகைகளை மேற்கொள்வதற்கு நுகர்வோர் சேவை அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் டிசெம்பர் மாதத்தில் இதுவரை 12 ஆயிரத்து 84 முற்றுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக நுகர்வோர் நலன் சாராத வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நுகர்வோரை தவறாக வழிநடத்துதல், காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, உணவுப் பொருள்களில் சேர்க்கப்படாத இரசாயனங்களை பயன்படுத்தியமை போன்ற தவறுகளை மேற்கொண்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

# விவசாயிகளுக்கான உரமானியமாக 661 கோடி ரூபாவை அரசு வழங்கியுள்ளது



அரசு இதுவரையான காலப்பகுதியில் 661 கோடி ரூபாவை விவசாயிகளுக்கான உர மானியமாக வழங்கி வைத்துள்ளதான தகவல் விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித ஜயதிலகவால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஏழு லட்சத்து 471 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் இந்த நிதியானது வைப்பிலிடப்பட்டுள்ளதுடன் வினைத்திறன் வாய்ந்த செயன்முறைகளின் ஊடாக உர மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கமநல சேவைகள் அலுவலகங்கள் மற்றும் வலய அமைப்புக்கள் தயார்நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர நிலத்தடி நீரின் மாசுபடல் மற்றும் அருமைத்தன்மை காரணமாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவுடைய வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றமடையும் விளைவுகளை எதிர்நோக்கியிருப்பதான வெளிப்படுத்தல்களும் நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எஸ்.சி.வீரசிங்கவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


"வரி அறவீடு இன்றி அரிசி இறக்குமதி செய்யப்பட்டால் ஒரு கிலோ அரிசியின் விலை நிர்ணயமானது 40 ரூபாவாகவும், 50 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

## நிவாரண அடிப்படையில் அரிசி இறக்குமதி

வரி நிவாரண அடிப்படையில் அரிசி இறக்குமதி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளதாகவும் இறக்குமதி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ள உரிய தரப்பினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், பெரும்போக நெல் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உரிய முறையில் மழை வீழ்ச்சி கிடைக்காமையால் முக்கிய நீர்த்தேக்கங்களில் போதிய நீர் இருக்கவில்லை. இதன்காரணமாக பெரும்போக செய்கையில் உற்பத்தி இலக்கை முழுமைப்படுத்த முடியாமல் போயுள்ளது. தவிர அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை தற்போது ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





# புழுக்களைக் கட்டுப்படுத்த விமானப்படை

### இது சாம்பியாவில்

லுசாக்கா, ஜன. 2
சாம்பியா நாட்டில் ஒருவகை புழுக்களின் தாக்கத்தால் பயிரிடப்பட்ட சோளப் பயிர்களின் பெரும்பாலானவற்றின் விளைச்சல் பாதிப்படைந்துள்ள நிலையில் புழுக்களைக் கட்டுப்படுத்த விமானப் படையில் உதவியை நாடினார் சாம்பியா ஜனாதிபதி எட்கார்.
சாம்பியாவின் முக்கிய பயிரான சோளத்தின் விளைச்சல் கடந்த வருட இறுதியில் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. புழுக்களின் தொல்லையைக் கட்டுப்படுத்தி விளைச்சலை அதிகரிக்க ஜனாதிபதி எட்கார், விமானப் படையினரின் உதவியை நாடியுள்ளார். ஆறு மாநிலங்களில் புழுக்களின் தாக்கம் உணரப்பட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு சிறப்பான மழை வீழ்ச்சியால் 2.87 மில்லியன் தொன் சோளம் அறுவடை செய்யப்பட்டது என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (ம-எ)







நியூஸிலாந்தும், ஆஸ்திரேலியாவும் 2017ஆம் ஆண்டின் வருகையை முதலாவதாக விமரிசையாகக் கொண்டாடியுள்ளன. இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டன. ஆஸ்திரேலியாவின் சிட்டி நகரில் தறை முகப்பாலத்தில் கண்கவர் வானவேடிக்கைகள் நடைபெற்றன. மொஸ்கோ, லண்டன், பரிஸ், நியூயோர்க், மும்பை, ரோக்கியோ, சியோல் போன்ற நகரங்களிலும் புதுவருடத்தை மக்கள் உற்சாகமாக வரவேற்றனர். ஐரோப்பிய நகரங்களில் தீவிரவாதத் தாக்குதல் அச்சத்தால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ற-எ)

## சோமாலியா ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர் கொலை

சோமாலிய நாட்டு ஜனாதிபதியின் பாதுகாப்பை கவனிக்கும் துணைத் தளபதியான அப்தி அப்துல்லா சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
மொகதியில் உள்ள அரசு இல்லத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டது என்றும் மற்றொரு வீரர் காயமடைந்துள்ளார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## புத்தாண்டு கொண்டாட்டத்தில் துப்பாக்கிதாரி வெறியாட்டம்

### துருக்கியில் 39 பேர் சாவு

அங்காரா, ஜன.2
துருக்கி நகரான இஸ்தான்புல்லில் கேளிக்கை விடுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் 39 பேர் உயிரிழந்தனர். 69 பேர் காயமடைந்தனர்.
அதிகாலை ஒருமணியளவில் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. கேளிக்கை விடுதியில் புதுவருடக் கொண்டாட்டங்கள் களைகட்டியிருந்த நிலையில் உள்ளே நுழைந்த ஆயுததாரி சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.
கறுப்பு உடையணிந்த ஆயுததாரிகள் விடுதிக் காவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு உள்ளே நுழைந்தார். அது பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.
இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க வெள்ளை மாளிகை கண்டனம் தெரிவித்தது.
தாக்குதல் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதல் பாணியில் அமைந்துள்ளது "என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.
தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை. துருக்கியில் 2017ஆம் ஆண்டு நடந்துள்ள முதலாவது தீவிரவாதத் தாக்குதல் இதுவாகும். (ற-எ)

# வறட்சியால் தமிழ்நாட்டில் 50 விவசாயிகள் இதுவரை சாவு

### காவிரி டெல்டாவில் அதிகம் பாதிப்பு

> வடகிழக்கு பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் இல்லாததாலும் பயிர்கள் கருகியுள்ளன. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் மாரப்படைப்பாலும், உயிரை மாய்த்தும் விவசாயிகள் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சென்னை, ஜன.2
இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தில் வறட்சியால் இதுவரை 50 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். காவேரி டெல்டா பகுதியில் 35 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
வடகிழக்கு பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் இல்லாததாலும் பயிர்கள் கருகியுள்ளன. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் மாரப்படைப்பாலும், உயிரை மாய்த்தும் விவசாயிகள் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு தடுத்து வைத்துள்ளது. அந்தநாட்டு உயர்நீதிமன்றம் தண்ணீரைத் திறந்துவிடுமாறு உத்தரவிட்டுள்ள போதும் கர்நாடக அரசு தனது முடிவில் விடாப்பிடியாக உள்ளது. இந்திய மத்திய அரசும் கர்நாடக அரசுக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடிக்கின்றது.
பருவ மழையும் பொய்த்துள்ள நிலையில் தமிழ்நாட்டு விவசாயிகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். காவிரி டெல்டா பகுதி பெரும் வறட்சியைச் சந்தித்துள்ளது. விவசாயத்துக்கான நீர் மட்டுமன்றி அந்தப் பகுதிகளில் குடி தண்ணீருக்கும் பெரும்தட்டுப்பாடுநிலவுகின்றது. விவசாயச் செய்கைகள் கருகி அழிந்துள்ளன. விவசாயம் அழிவடைந்ததால் வாழ்வாதாரம் இன்றிப் பல விவசாயிகள் உயிரை மாய்த்துக் கொள்வது அதிகரித்துள்ளது. மாரடைப்பு போன்றவற்றால் இறக்கும் விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-எ)

# பாகிஸ்தானின் ஏழு நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதித்தது அமெ.



வோஷிங்டன், ஜன. 2
அணுவாயுத ஏவுகணைத் திட்டங்களுக்கு துணையாக இருக்கின்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பாகிஸ்தானில் உள்ள ஏழு நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதித்தது அமெரிக்கா.
அமெரிக்க தேசிய பாதுகாப்பு அல்லது வெளிநாட்டு கொள்கை நலன்களுக்கு மாறாக செயற்படுவதாக கருதி, பாகிஸ்தானின் 7 நிறுவனங்கள் ஏற்றுமதி நிர்வாக கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்கீழ் கொண்டு வரப்படுகின்றன. குறிப்பிட்ட உண்மைகள் அடிப்படையில் இந்த அரச நிறுவனங்கள், மறைமுகமாக செயற்படும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அமெரிக்காவின் பாதுகாப்புக்கு, வெளியுறவு கொள்கைக்கு மாறான செயற்பாடுகளில் தொடர்பு கொண்டுள்ளன என்று நம்புவதற்கு நியாயமான காரணம் உள்ளது என்று அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (ம)



# பேண்தகு யுகம்

ஜனாதிபதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்களின்
சிந்தனைக்கமைய
சௌபாக்கியம் நிறைந்த தேசத்தை கட்டியெழுப்பும் வகையில்

## பேண்தகு யுகத்தின் பிரார்த்தனை
### பிரகடன தேசிய வைபவம்

2017 ஜனவரி 2 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு
ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பிக்கப்படும்.

"எதிர்கால சந்ததியினரின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை இழக்காது
தற்காலத் தேவைகளை பூரணப்படுத்திக் கொள்ள உறுதி பூணுவோம்"

இலங்கையின் 2030 நோக்கு:

- பொருளாதார ரீதியில் உயர்ந்த நடுத்தர வருமானம் பெறும் ஒரு நாடாக எழுந்து நிற்றல்
- சமூக ரீதியில் நல்லிணக்கத்தை மைய்யமாகக் கொண்டு வறுமையை அகற்றி சமூக நீதியை யதார்த்தமாக்கும் நாட்டினைக் கட்டியெழுப்புதல்
- சுற்றாடல் என்ற வகையில் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பேண்தகு வள உபயோகத்தை உறுதிப்படுத்தல்

ஜனாதிபதி செயலகம்
இலங்கை

கட்டுரை

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அம்பாந்தோட்டைத் துறைமுக விவகார மர்மம் துலங்குமா?

அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தி தொடர்பான 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதியை 99 வருடகாலம் பயன்படுத்திக் கொள்வதற்கு சீன நிறுவனம் ஒன்றுடன் இலங்கை அரசு செய்துகொள்ளவிருக்கும் ஒப்பந்தத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் அவரது சகாக்களும் கடுமையாக எதிர்த்துக் குரல் எழுப்பத் தொடங்கியிருப்பது ஆச்சரியமாகவிருக்கிறது. சீன அரசையும் வர்த்தக நிறுவனங்களையும் ஆரம்பத்தில் இவர்கள்தான் செங்கம்பளம் விரித்து வருந்தி அழைத்து வந்தார்கள். கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்திக்கென ஒரு பெரும்பகுதிக் கடற்பரப்பைச் சீனக் கம்பனிகளுக்குத் தாரை வார்த்து ஒப்பந்தம் செய்தார்கள். அந்த அபிவிருத்தித் திட்டத்தைச் சீன அதிபர் ஸி ஜின் பின்னை அழைத்துத் தானும் சேர்ந்து மகிந்த ராஜபக்ச ஆரம்பித்து வைத்தார். அந்தக் காலப் பகுதியில் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கான ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டு வேலைகள் ஆரம்பமாகி முடிவுற்றிருந்தன. அந்தத் திட்டத்திலும் வேறு சில அபிவிருத்தித் திட்டங்களிலும் வேலை செய்வதற்கென ஏராளமான சீனத் தொழிலாளர்கள் அங்கு கொண்டு வரப்பட்டனர். அவர்களால் பெரும் கலாசார சீர்கேடுகள் தோன்றியிருப்பதாகவும் அந்தப் பிர தேசங்களில் காணப்பட்ட கட்டாக்காலி நாய்கள் எல்லாம் அவர்களின் உணவுக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டதாகவும் உள் ளூர் விசமிகள் குரல் எழுப்பியிருந்தார்கள். நாய்கள் மட்டுமன்றி ஏனைய மிருகங்களும் கூட அவர்களால் உணவுக்குப் பயன் படுத்தப் படுவதுடன் அவைகளை நல்ல விலை கொடுத்து கிராமவாசிகளிடம் சீனர்கள் கொள்முதல் செய்கிறார்கள் என்றும் கூறப்பட்டது. இவ்வாறு துறைமுக மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் சீனர்களுக்கு வழங்கப்பட்டதால் அந்தத் திட்டங்களில் பணிபுரிய சீனர்கள் வந்து குவிவது ஒரு புறமிருக்க, கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் சீன பிச்சைக்காரர்களின் எண் ணிக்கை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அண்மையில் நுழைவிசைவு முடிவுற்ற நிலையில் இலங்கையில் தங்கியிருந்த குறி பார்த்துச் சுடுவதில் வல்லவரான சீனர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசு பதவிக்கு வந்தபின்னர் கொழும்புத் துறைமுக அபிவிருத்திக்கென விலையில்லாமல் கொடுக்கப்பட்ட நிலம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டு திட்டத்தின் பெயரும் மாற்றப்பட்டு 99 வருட ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டமும் மாற்றி அமைக்கப்பட்டு 99 வருட குத்தகைக்குக் கொடுக்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருக்கிறது. அதே விதமானது தானே இப்பொழுது அம்பாந்தோட்டத் துறைமுக அபிவிருத்தித் திட்டமும். அதை ஏன் எதிர்க்கிறார்கள் ராஜபக்சவும் அவரைச் சேர்ந்தவர்களும். சமீபத்தில்தான் சீனாவின் அழைப்பின் பேரில் அவரும் அவரது நண்பர்களும் சீனாவுக்குப் போய் வந்தார்கள். முன்னாள் அயலுறவு அமைச்சரும் ராஜபக்சவினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய கட்சியின் தலைவருமான ஜி.எல்.பீரிஸ் அவருடன் சீனா சென்றவர்களில் முக்கியமானவர். இவர்கள் எல்லாம் சீனாவின் விருந்தோம்பலை மிக உருசிகரமாக அனுபவித்துவிட்டுத் திரும்பியதன் பின்னர் அந்த நாட்டுடன் செய்து கொள்ளப்படவிருக்கும் ஒப்பந்தத்தை இப்போது ஏன் எதிர்க்கிறார்கள்?

இதில் ஏதும் மர்மம் இருக்குமோ என்ற சந்தேகம் தோன்றுகின்றது. அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்துக்கு எழுந்துள்ள எதிர்ப்பு குறித்து சீனத் தூதரும் ஜனாதிபதியுடன் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.

மகிந்த ராஜபக்சவினரின் நிலைப்பாட்டின் படி கொழும்பில் பெரும்பகுதி கடல் பிரதேசம் சீனக் கம்பனிக்கு வழங்கப்படலாம் என்றால் அம்பாந்தோட்டையில் மட்டும் ஏன் அதே விதத்திட்டம் முன்னெடுக்கப்படலாகாது என்றகேள்வி எழுகின்றது.

கொழும்பு அபிவிருத்தித் திட்டம் சீனாவுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அங்கு சீன நீர்மூழ்கிகள் வந்து சென்றதை இந்தியா குறைகூறியது. இப்போது அம்பாந்தோட்டையில் நிலம் சீனாவுக்கு வழங்கப்படுவது குறித்து ஏன் மௌனம் சாதிக்கிறது என்றும் கூட மகிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

தாங்கள் செய்தால் அதில் குற்றமில்லை. அதையே மாற்றார் செய்தால் வெகுண்டெழுவதன் நோக்கமென்ன? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது போல் தோன்றுகிறது அல்லவா? அதுவும் விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.



# வரலாற்றில் இடம்பிடித்த திருமலை மாணவர்கள் படுகொலை

மு.ஈழத்தமிழ்மணி

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம், தமிழர்களின் இதய பூமியாகியகிழக்கு மாகாணத்தின் முக்கிய மாவட்டமாகத் திகழும் திருகோணமலைப் பிரதேசத்துக்கென நீண்ட வரலாறு உண்டு. நில ஆக்கிரமிப்பு, தமிழர்களின் உயிர் பறிப்பு, பெரும்பான்மையின சமூகத்தினரால் தமிழர்கள் மீது பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், தமிழ் மக்களின் இடப்பெயர்வு என வரலாற்றில் பல அத்தியாயங்களைப் புரட்டிக் கொண்டு போகலாம்.

தமிழ்மக்களின் அரசியல் உரிமைப்போராட்டத்தில் தமிழ்மக்கள் பலர் உயிரிழந்த வரலாறும் திருகோணமலை மண்ணுக்கு உண்டு. தமிழர்களின் உரிமைக்கான அறப்போராட்டத்தில் முதலில் உயிர் நீத்த தியாகி நடராஜன் இவர்களில் முக்கியமானவர். 1970கள் முதல் 2006 வரை யான காலத்தில் தமிழர்கள் மீதான அடக்கு முறைகளும் படுகொலைகளும், தமது சொந்த இடங்களில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் இந்த மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் மறக்கமுடியாத மிகப் பயங்கரமான படுகொலைச் சம்பவம், திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி இரவு ஐந்து மாணவர்களின் உயிர்ப்பறிப்புச் சம்பவமாகும்.

இனப்படுகொலைகள், அரசியல் படுகொலைகள், இயக்கப்படுகொலைகள், பழிதீர்ப்புப் படுகொலைகள் என நடைபெற்ற காலமான அந்த 2006 ஆம் ஆண்டு, திருகோணமலையையும் நடுங்க வைத்திருந்தது.

2006 ஜனவரி 2ஆம் திகதியன்று திருகோணமலையைச் சேர்ந்த சண்முகராசா கஜேந்திரன், தங்கத்துரை சிவானந்தா, மனோகரன் ரஜீர், லோ.றொகாந்த், கோ.பிறேமச்சந்திரன் ஆகிய ஐந்து மாணவர்களின் படுகொலைகள் இடம்பெற்று இன்றுடன் (2.01.2017) 11 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ச வெற்றியீட்டி சுமார் 3மாதங்களுக்குள், 2006ஆம் ஆண்டு பிறந்து 2ஆம் நாள் கழிவதற்குள் தமிழர்கள் மீதான அந்தப் படுகொலை படையினரால் அரங்கேற்றப்பட்டிருந்தது.

**காரணம் ஏதுமின்றி படையினர் நடத்திய படுகொலை**

குறித்த தினத்தன்று இரவு 7.20 மணியளவில் ஏது மறியா அப்பாவித் தமிழ் மாணவர்கள் ஐவர் திருகோணமலைக் கடற்கரையில் டொக்யாட் வீதியில் அமைந்துள்ள காந்தி சிலை அமைந்துள்ள நீண்ட படிக்கட்டில் அமர்ந்து வழமைபோல் தமக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

அவ்வேளையில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று மாணவர்கள் இருந்த சுற்றாடலை வேவு பார்த்தபடி நடமாடிக் கொண்டிருந்தது. அதனைக் கண்டுகொள்ளாது மாணவர்கள் தமக்குள் உரையாடிக் கொண்டிருக்கையில், முச்சக்கரவண்டியொன்றில் வந்த இனம்தெரியாத நபர்கள்,



மாணவர்கள் இருந்த பக்கம் எறிகுண்டொன்றை வீசிவிட்டு அங்கிருந்து மறைந்து விட்டனர். திருகோணமலை புனித யோசப் கல்லூரி மாணவரான யோகசாரா பூங்குழலோன் காலில் எறிகுண்டு வீச்சால் ஏற்பட்ட காயம், கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த மாணவனை வைத்தியசாலைக்கு ஏனைய நான்கு மாணவர்களும் அழைத்துச் செல்ல முயன்றனர். அந்த வேளையில் சுமார் பத்து நிமிடங்கள் வரையில் படையினரின் துப்பாக்கி வேட்டுக்கள் மாணவர்கள் இருந்த இடத்தை நோக்கி சரமாரியாக சீறிப்பாய்ந்தன.

இருப்பினும் காயப்பட்ட சக மாணவனை விட்டு விலகாது நான்கு மாணவர்களும் அவனைச்சுற்றி நின்றனர். மாணவர்கள் நின்றிருந்த இடத்தை கவனித்த ஆயுதம் தாங்கிய படையினர் மாணவர்களைத் தாக்கித் தரையில் வீழ்த்தினர்.

மாணவர்களைத் தனித்தனியாகப் பிடித்து விசாரித்ததோடு இரவு 8 மணியை நெருங்கிக் கொண்டிருக்கையில், அவர்களை வீதியில் படுக்க வைத்து ஒவ்வொருவர் மீதும் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர். மாணவர்களின் காதுக்குள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் ஐந்து மாணவர்களும் மூளை சிதறி உயிரிழந்ததாக அடுத்த நாள் வெளியாகிய பத்திரிகைச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

மாணவர்கள் தங்களுடன் எடுத்து வந்த எறிகுண்டே தற்செயலாக வெடித்ததில் ஐந்து மாணவர்களும் உயிரிழந்தனர் எனக்கூறி சம்பவத்தை அப்படியே மறைத்து விட அரசும் படையினரும் கடுமையாக முயன்றனர். ஆனால் ஐவரும் எறி குண்டுச் சிதறல்களால் மரணமடையவில்லையெனவும், மிக நெருக்கமாக நின்று சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதை அடுத்த நாள் சில ஊடகங்கள் ஒளிப்பட ஆதாரங்களுடன் வெளியிட்டிருந்தன.

மாணவர்களின் தலையின் பின்புறத்திலும், அவர்களின் காதுகளின் கீழும் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்துச் சென்ற ஆதாரங்களை ஒளிப்படங்கள் தெளிவாக நிரூபித்திருந்தன. அதன் மூலம் அரசும் படையினரும் மாணவர்களின் கொலைகளை மறைத்து விட எடுத்த முயற்சிகள் அம்பலமாகின. ஐந்து மாணவர்களும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தே உயிரிழந்தனர் என்று பிரேத பரிசோதனையின் மூலம் வெளியிடப்பட்ட அறிக்கை கூறியிருந்தாலும் படையினர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

### படையினரது வெறியாட்டத்தை ஆதாரங்களுடன் நிரூபித்த ஊடகவியலாளரும் சுட்டுக்கொலை

ஐந்து மாணவர்கள் மீதான படுகொலையால் திருகோணமலை மாநகரம் அதிர்ச்சியில் உறைந்திருந்தது. படையினரே ஐந்து மாணவர்களைப் படுகொலை செய்தனர் என்பதை திருகோணமலைத் தலைநகரில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் உலகுக்கு பல ஆதாரங்களோடு தெரியப்படுத்திய சுடர் ஒளி, உதயன் பத்திரிகையின் செய்தியாளராகப் பணிபுரிந்த சுகிர்தராஜன் ஜனவரி 22 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். படையினர் கூறியவை யாவும் பொய்யென இடித்துரைத்து உண்மையை உலகுக்கு வெளிப்படுத்திய பேனாமுனைப் போராளியின் உயிர் இனந்தெரியாதோரால் பறிக்கப்பட்டது.

ஐந்து மாணவர்களின் படுகொலைகள் நடந்து தற்போது 11 ஆண்டுகளாகிய போதிலும் படுகொலைக்கான நீதி கிடைக்கவில்லை. அதற்கான நீதியின் குரல்களும் ஓய்ந்து விடவில்லை. இன்றுவரையில் மனித உரிமைக் குழுக்கள் மற்றும் பலியான மாணவர்களில் ஒருவரான காசிப்பிள்ளை மனோகரன் குடும்பத்தின் நீதிக்கான குரல் இன்று வரையில் ஓங்கி ஒலித்தபடியிருக்கின்றது.

பலியான ஐந்து மாணவர்களின் சார்பாக லண்டனைத் தலைமையாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பான அம்னெஸ்ரி இன்ரர் நசனல் தீவிரமான ஓர் பரப்புரையை முன்னெடுத்து வருகின்றது.

இந்த அமைப்பின் அமெரிக்கப் பிரதிநிதியும், இலங்கை விவகாரங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவருமான ஜிம் மக்டொனொல்ட் கொலைகாரர்களைக் கண்டுபிடித்து நீதியின் முன்நிறுத்துவதற்கு இலங்கை அரசு அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென தெரிவித்திருந்தார்.

இந்தப் படுகொலைகளோடு சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆயுதப்படையினர்களான 15 பேர் கைது செய்யப்பட்டிருந்தார்கள். பின்னர் பிணையில் விடப்பட்டிருந்தனர்.

இந்த மாணவர்கள் படுகொலைச் சம்பவம் பன்னாட்டு அளவில் கவனத்தை ஈர்த்திருந்தது. 2014ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைகள் சபை மாநாட்டின்போது, முன்னாள் மனித உரிமை ஆணையகத்தின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த அறிக்கையில் திருகோணமலையில் 2016 ஜனவரி 02ஆம் திகதியன்று நடைபெற்ற ஐந்து மாணவர்கள் படுகொலை வழக்குத் தொடர்பான சாட்சியங்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனத் தெரிவித்திருந்தார். மேலும் அந்த அறிக்கையில் குறித்த தினத்தன்று திருகோணமலை கடல் முகப்பில் வைத்து ஐந்து மாணவர்கள் இலங்கைப் படையினரால் சித்திரவதைப்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது.




குறித்த சம்பவம் தொடர்பான வழக்குப் பிரசித்திபெற்ற நபர்கள் உள்ளடங்கிய உதலகம ஆணைக்குழுவால் கடந்த 2006,2007 காலப்பகுதிகளில் விசாரிக்கப்பட்டு வந்தபோதிலும், அரசோ குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஒருபோதும் வெளியிட்டிருக்கவில்லை.

அதேகாலப்பகுதியில் குறித்த படுகொலைச் சம்பவம் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவிலும் விசாரிக்கப்பட்டிருந்தது.

### ஐ.நா. சபை வரை முறையீடு மேற்கொள்ளப்பட்டும் பயனேதும் கிட்டியதில்லை

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மனித உரிமை மாநாட்டில் தனது மகன் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில் பன்னாட்டு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று படுகொலை செய்யப்பட்ட ரஜீகர் என்ற மாணவனின் தந்தையான மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தப் படுகொலை சம்பந்தமாக இலங்கை அரசு எந்தவித விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லையென்ற குற்றச்சாட்டை, 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்வைத்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் பிரித்தானிய நாடாளுமன்றின் குழுஅறை 14இல் நடைபெற்ற தமிழர் பேரவையின் மூன்றாவது ஆண்டுக் கருத்தரங்கில் உரையாற்றுகையில், திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் படுகொலை, மூதூரில் தொண்டர் அமைப்பைச் சேர்ந்த 17 உதவிப் பணியாளர்களின் படுகொலைகள் தொடர்பில் இலங்கை அரசு உறுதிமொழிகளை வழங்கியிருந்தும் கூட, அந்த விசாரணைகளைப் பூர்த்தி செய்து குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென குற்றம் சாட்டியிருந்தார்.


இலங்கை அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல் சம்பவங்களையும் ஐந்து மாணவர்களின் படுகொலையையும் பன்னாட்டு அரசுகள் கவனித்து வந்தன. 11ஆண்டுகள் நிறையும் நிலையில் முன்னைய மகிந்த அரசு மாணவர்கள் மீதான படுகொலை விசாரணையை நடத்தாது காலத்தைக் கடத்தி வந்தது போல், ஜனாதிபதி மைத்திரி அரசும் இரண்டு ஆண்டுகள் முடியும் நிலையில் 5 மாணவர்கள் படுகொலை தொடர்பான விசாரணைகளில் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது மௌனம் சாதித்து வருகின்றது.

ஐந்து மாணவர்களின் படுகொலை தொடர்பில் போதிய வலுவான சாட்சியங்கள் இருந்த போதிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனைகள் வழங்கப்படுமா? குற்றவாளிகளை இனம் கண்டு நீதிக்கு முன் நல்லாட்சி அரசு நிறுத்துமா? மைத்திரி அரசுக்கு எதிர்க்கட்சித்தலைவரான இரா.சம்பந்தன் இந்தப் படுகொலைகள் சம்பந்தமாக அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்தக் கொலைகள் சம்பந்தமான விடயத்தில் கிளிவெட்டி குமாரபுரம் படுகொலை சம்பந்தமாக குற்றவாளிகளை விடுவித்த தீர்ப்பு மற்றும் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ந.ரவிராஜ் படுகொலை சம்பந்தமாக வழங்கப்பட்ட தீர்ப்பு என்பவை போலவே ஐந்து மாணவர்கள் மீதான படுகொலை விசாரணை வழக்கு நடைபெற்றால், நீதித்துறை அப்படிப்பட்ட தீர்ப்பைத்தான் வழங்குமா?

11ஆண்டுகளுக்கு மேலாக விசாரணைகள் எதுவுமின்றி வழக்கு இழுபடும் நிலையில், தமிழ்மக்களுக்கு மறுக்கப்பட்டதொரு நீதியே மைத்திரி அரசிலும் அமையும்.

ஐந்து மாணவர்களின் படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்று 11 ஆண்டுகள் கடந்தும், சம்பவம் குறித்து விசாரணைவேண்டும் என்ற பன்னாட்டுச் சமூகங்களின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருப்பதனால், இந்தப் படுகொலைச் சம்பவம் முக்கியத்துவம் பெற்றதாகக் கொள்ளப்படுகிறது.



# வாசகர் திருமுகம்

## கடைத்தொகுதியை அமைக்கப் பொருத்தமானது புறநகர்ப்பகுதியே

யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் போதனா வைத்திய சாலைப் பக்கமாக மின்சார சபை இயங்கும் வளவினுள் நடைபாதை வியாபாரிகளுக்கான நிரந்தர கடைத்தொகுதி மாநகரசபையால் அமைக்கப்படுவதாக பத்திரிகை வாயிலாக அறியக் கிடக்கின்றது. நகரமத்தியில் இவ்வாறான கடைத்தொகுதி அமைவதால் அது பொதுமக்களது போக்குவரத்துக்கு மிகவும் இடையூறு ஏற்படுத்துகிறது. அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நோயாளிகளைக் காவிச் செல்லும் அம்புலன்ஸ் வாகனங்களும் இப்பாதையாலேயே பயணம் செய்ய நேரும். மருத்துவ பீடத்துக்கான 8 மாடிக்கட்டடமும் இதன் அருகேயே அமைக்கப்படவிருப்பதாக அறியக்கிடக்கின்றது. அனைத்துப் பிரதான நகரங்களிலும் நகர விரிவாக்கத்தின்போது, கடைத் தொகுதிகள் புறநகர்ப்பகுதிகளில் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. எனவே நகர விரிவாக்கத்தில் அக்கறையுடன் செயற்படும் அரச அதிபர் உட்பட சமூக அக்கறையுடையவர்கள் இது குறித்துப் பரிசீலித்து கடைத் தொகுதியை மாற்று இடமொன்றில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

*சி.சுப்பிரமணியம்,*
*நெடுந்தீவு*

## பொருத்து வீட்டுத் திட்டத்தில் ஏனிந்த விடாப்பிடி?

தமிழ் மக்களுக்கும் தமிழர் நிலத்துக்கும் பொருத்தமே இல்லாத உலோக வீடுகளை அமைப்பதில் அமைச்சர் விடாப்பிடியாக நிற்கிறார். அமைச்சருக்கு இதனால் பெரிய இலாபம் கிட்டக் கூடும் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். சம்பந்தமே இல்லாமல் எமது நாட்டு காலநிலைக்கும், தரைத்தோற்றத்துக்கும் எமது கலாசார, நீடித்த பாவனை, பாரம்பரியம் என்பவற்றுக்கும் மாறாக, வீண் செலவில் பொருத்து வீடுகளை உள்ளே நுழைப்பது ஏன் ஐயா? மக்களை முட்டாள்களாக்கி நிம்மதியைக் குலைக்காதீர்கள்.

யாழ்ப்பாணத்தையும் வடக்கையும் ஐஸ்லாந்து" என அமைச்சர் நினைக்கிறாரோ தெரியவில்லை. எனவே எந்த வகையிலும் எமது மக்களுக்குப் பொருத்தமில்லாத உலோக வீடுகளை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுங்கள் ஐயா!

*மக்கள் நண்பன்,*
*மாதகல் வடக்கு.*

# வரலாற்றில் இன்றைய தினம்

1993 - தெற்குப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் செயலிழப்பு பீடாதிபதிகளால் திறப்புக்கள் உபவேந்தர்களிடம் கையளிப்பு - யாழ். பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனையவற்றில் சம்பள உயர்வு கோரி ஆசிரியர்கள் போராட்டம்.

- சமாதானத் தீர்வு காண்பதன் மூலம், நாடு பிளவுபடுவதைத் தடுக்கலாம் என எண்கோண மண்டபத்திலிருந்து பிரேமா உரை.

1994 - பத்திரிகைகளில் அரச செலவில் அனுபந்தங்கள் விளம்பரங்கள் வெளியிடத் தடை ஜனாதிபதி விஜேதுங்க நடவடிக்கை.

- வடக்கு - கிழக்கு இந்திய அமைதிப் படைத் தளபதியாகக் கடமையாற்றிய லெப்டினன்ட் கேணல் ஏ.எஸ் கல்கத் இராணுவத்திலிருந்து ஓய்வு.

1995 - யாழில் மழை பொய்த்ததால் கிணறுகள் மூலம் வயல்களுக்கு நீர், மழை வேண்டி ஆலயங்களில் பிரார்த்தனை.

- பிரபாகரன் ஓர் அபூர்வ மனிதப் போராட்டத்தின் உந்துசக்தியென சிங்களப் பத்திரிகை லக்பிம கருத்து.

1997 - புலிகளின் தாக்குதலில் கிழக்கில் ஹெலி சேதம் எனத் தெரிவிப்பு.

# நட்பு

ஒரு
வருடன் நட்
புக்கொள்வதற்கு
முன் நன்றாக யோசித்து
அவருடன் நட்புக்கொள்.
அந்த நட்பை விலக்க விரும்
பினால் மேலும் நன்றாக
யோசனை செய்த பின்னரே
அதனை நடைமுறைப்படுத்து!

*– பிராங்ளின்*


உண்மையான நட்பு
ஆரோக்கியம் போன்
றது. அதனை இழக்கும்
வரை அதன் மதிப்பை
நாம் உணர்வ தில்லை.

*– வோல்டன்*

கல்மனம் படைத்த நண்பர்
களை விட கொலைகாரன்
ஒன்றும் கொடியவனல்ல.

*– விவேகானந்தர்*





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# நம்பிக்கை

நம்பிக்கையே
வாழ்வின் ஆதாரம்!
நம்பிக்கையே இனிமையான
எதிர்காலங்களை
அமைக்கும்!
நம்பிக்கையெனும் அச்சாணி முறியாமல்
இருந்தால்தான் வாழ்க்கைச் சக்கரம் சீராகச்சுழலும்!
நம்பிக்கையை விதை:
நல்லெண்ண நீரூற்று:
தடைகளைக் களையெடு:
விடாமுயற்சியை உரமாக்கு:
வெற்றிக்கனிகள் உன்வசமாகும்





# மான்கள்

அழகிய மான்கள் எல்லாமும்
அழகிய ஓட்டம் கொண்டனவாம்

துள்ளித் துள்ளி விரைந்தோடும்
தூரம் கடந்தே தொடர்ந்தோடும்

ஓசை கேட்கும் நுட்பத்தில்
ஓடும் மான்கள் சமர்த்தாகும்

தூரச் சத்தம் கேட்டு விட்டால்
துடிப்பாய் காதை மண் மீதில்

வைத்தே உறுதிப் படுத்திவிடும்
விரைவாய் எழுந்தே ஓடிவிடும்

பின்னால் தொடரும் புசிங்கம்
முன்னே கண்டு பிடித்துவிடும்

தப்பித்தோடும் பல நேரம்
தவறாய்ச் சிக்கும் சில நேரம்

அழகில் சிறந்த மானினம்
அற்புத உலகின் சிறப்பாகும்



# உண்மையான அழகு எது?

ஓர் அழகான கிராமத்தின் மாலை வேளையில், வயல்களில் வேலை செய்து களைத்த உழவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். தன் அம்மாவுடன் நடந்துசென்ற ஒரு சுட்டிப் பையன், பட்டாம்பூச்சிகளைக் கண்டு அவற்றின் பின்னால் ஓடினான். தன் தாயை விட்டு வெகுதூரம் வந்து விட்டதை அப்போது தான் சிறுவன் உணர்ந்தான். யாருமே இல்லாத அப்பகுதியில் சிறுவனின் அழுகுரல் மட்டுமே எங்கும் ஒலித்தது.

அய்யோ, வழி தெரியாம ரொம்ப வந்துட்டேனே... அம்மா.. அம்மா...எங்கம்மா கிட்ட யாராச்சும் கொண்டு போய் விடுங்களேன்! என கதறி அழுதான்.

அப்போது அவ்வழியே வந்த ஓர் உழவன், சிறுவனின் அழுகுரல் கேட்டு அவனிடம் சென்றார்.

நீ யார்?...எதற்காக இங்கே தனியாக நிற்கின்றாய்?

நான் பட்டாம்பூச்சி பிடிக்க ஓடி வந்து அம்மாவ தொலைச்சிட்டேன்..அவங்க வயல்ல வேலை செய்துவிட்டு வீட்டுக்குப் போய்க்கிட்டு இருக்காங்க.. எனக்கு திரும்பிப் போக வழி தெரியவில்லை.. என்று சிறுவன் கூறவே,

அவனைச் சமாதானப்படுத்திய உழவன், சரி, பயப்படாதே... நான் உங்கம்மா கிட்ட கூட்டிக்கிட்டு போறேன்! உங்கம்மா எப்பிடி இருப்பாங்கன்னு சொல்றியா? எனக் கேட்டார்.

அதற்கு எங்கம்மா ரொம்ப அழகா இருப்பாங்க...இந்த ஊருலயே அவங்க தான் அழகு! என பெருமையுடன் பதிலளித்தான் சிறுவன்.

சிறுவனை அழைத்துக் கொண்டு ஊரை நோக்கிச் சென்ற உழவன், எதிரில் மிகவும் அழகான பெண் நடந்து வருவதைக் கண்டார். உடனே தம்பி, இவங்க ரொம்ப அழகாக இருக்கிறாங்க. இவங்க தானே உன் அம்மா? எனக் கேட்க, தன் அம்மா இன்னும் அழகாக இருப்பாள் என சிறுவன் பதிலளித்தான்.

வழியில் இரண்டு அழகான பெண்கள் தண்ணீர் சுமந்து செல்வதை உழவர் கண்டார். கண்டிப்பாக இவர்கள் இரண்டு பேரில் ஒருவர் தான் சிறுவனின் அம்மாவாக இருக்க வேண்டும் என்று நம்பிய உழவன், சிறுவனிடம் கேட்டார்.

ஆனால் இல்ல... எங்கம்மா இவங்க எல்லாரையும் விட அழகா இருப்பாங்க! என்று உறுதியாகக் கூறினான்.

அப்போது எதிரில் பதற்றத்துடனும், கண்ணீருடனும் ஒரு பெண் ஓடிவருவதைப் பார்த்த சிறுவன் அதோ என் அம்மா! அதுதான் என் அம்மா! என் அம்மா கிடைத்து விட்டாள்! என சந்தோசக் கூக்குரலிட்டான். கறுப்பாகவும், ஒரு கண்ணில் பார்வையில்லாமலும் காட்சியளித்த அந்தப் பெண்ணைப் பார்த்த உழவன்...

அந்த ஊரே அதிரும் படி சிரித்தான். இதுவா உங்கம்மாவா? இவங்களையா அழகுன்னு சொன்னாய் என்று சிறுவனைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு சிறுவன் மிகவும் பெருமையாக, ஆமா...அவங்க என்ன ரொம்ப பாசமா பாத்துக்குவாங்க.. எல்லோர்கிட்டயும் அன்பா நடந்துக்கிறது. இவங்க தான் உலகத்துலயே ரொம்ப அழகானவங்க! என்று பதிலளித்து விட்டு, தன் தாயின் கையைப் பிடித்து துள்ளிக் குதித்து நடந்தான்.

உண்மையான அழகு எது என்பதை உணர்ந்து கொண்ட உழவன், முகம் இருண்டு போய்விட அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தான்!

# ஆங்கில புத்தாண்டு பலன் 2017



## மிதுனம்

உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் சுக்கிரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் 2017ஆம் ஆண்டு பிறப்பதால் சமயோஜித புத்தியால் சாதிப்பீர்கள். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். நீண்ட காலமாக தள்ளிப்போன காரியங்கள் முடிவடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார்கள். பூர்வீக சொத்தைச் சீர்செய்வீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்தால் நல்ல பதில் வரும். ஆனால் எட்டாவது ராசியில் இந்த ஆண்டு பிறப்பதால் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். சிறுசிறு விபத்துக்களும் வந்து போகும். வீண் வறட்டுக் கௌரவத்திற்காக சேமிப்புக்களைக் கரைத்துக் கொண்டிருக்காதீர்கள். ஆடம்பரச்செலவுகளைக்குறைத்து அத்தியாவசியத்தை மட்டும் செய்யப்பாருங்கள். அரச விடயம் சாதகமாக முடியும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும்.

வருடப்பிறப்பு முதல் 8ஆம் திகதி வரை உங்களுடைய ராசிநாதனான புதன் சனியுடன் சேர்ந்து ஆறாம் வீட்டில் மறைந்திருப்பதால் ஒவ்வாமை, நரம்புச் சுளுக்கு, சளித் தொந்தரவு வந்துபோகும். ஏப்ரல் 04ஆம் திகதி முதல் மே 25ஆம் திகதி வரை உள்ள காலக்கட்டத்தில் செவ்வாயை சனி பார்ப்பதால் மறைமுக எதிர்ப்புகள், பழைய கடனை நினைத்த கவலைகள், வீண் பரபரப்பு, சகோதர வகையில் மனவருத்தம் வந்து நீங் கும். ஜுலை 25ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 9 இல் கேது நிற்பதால் தந்தைக்கு நெஞ்சு வலி, பித்தப்பையில் கல், சிறுநீரக கோளாறு வந்து போகும். அவருடன் மனவருத்தங்களும் வரக்கூடும்.

ஜுலை 26ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை ராசிக்கு 2இல் ராகுவும், 8 ஆம் வீட்டில் கேதுவும் தொடர்வதால் வீண் விரையம், அலைச்சல், பொருள் இழப்புகள் வந்து போகும். சாதாரணமாக பேசப் போய் சண்டையில் முடிய வாய்ப்பிருக்கிறது. வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து ஏமாற வேண்டாம். பண விடயத்திலும், கல்யாண விடயத்திலும் குறுக்கே நிற்க வேண்டாம். சிறுசிறு விபத்துக்களும் வந்து போகும். அநாவசியமாக மற்றவர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம். வீண் பழிக்கு ஆளாவீர்கள். கண் பார்வையைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். சிலர் மூக்குக் கண்ணாடி அணிய வாய்ப்பிருக்கிறது. பல் மற்றும் காது வலி வந்து போகும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் சப்தம-ஜீவனாதிபதியான குரு உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் எதிர்ப்புக்கள் அதிகமாகும். இனம்புரியாத கவலைகள் வந்து போகும். தாயாருடன் மனஸ் தாபங்கள் வெடிக்கும். அவருக்கு கை, கால் வலி, சளித் தொந்தரவு வந்து நீங்கும். வர வேண்டிய பணத்தைப் போராடி வசூலிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். புதியவர்களை நம்பிப் பழைய நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால் வீண் பழிக்கு ஆளாவீர்கள். வாகனத்தை கொஞ்சம் கவனமாக இயக்குங்கள். விபத்துகள் நிகழக் கூடும். ஆனால் செப்ரெம்பர் 02ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் நுழைவதால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். வறண்டிருந்த பணப்பை கொஞ்சம் நிரம்ப ஆரம்பிக்கும். குழந்தைப் பாக்கியம் உண்டு. பிள்ளைகளால் மதிப்பு, மரியாதை கூடும். மகளுக்கு ஏதோ ஒரு வகையில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் இப்பொழுது கூடி வரும். மகன் குடும்பச் சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார். வாடகை வீட்டிலிருந்த சிலர் சொந்த வீட்டிற்கு குடிபுகுவீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினை முடிவுக்கு வரும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். தங்க ஆபரணங்கள் இரத்தினங்கள் வாங்குவீர்கள்.

டிசெம்பர் 15ஆம் திகதி வரை சனி பகவான் 6ஆம் வீட்டிலேயே நீடிப்பதால் எதிர்ப்புக்கள் குறையும். தொலை நோக்குச் சிந்தனை அதிகமாகும். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். வழக்கில் வெற்றி உண்டு. தந்தையாரின் ஆரோக்கியம் சீராகும். அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். புது வீடு கட்டிக் குடிபுகுவீர்கள். ஆனால் டிசெம்பர் 16ஆம் திகதி முதல் சனி 7இல் அமர்ந்து கண்டகச் சனியாக வருவதால் கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இருவரும் மனம் விட்டுப் பேசி முடிவுகளெடுப்பது நல்லது. மனைவிக்கு சிறுசிறு அறுவைச் சிகிச்சைகள், முதுகு மற்றும் மூட்டு வலி வந்துபோகும். மற்றவர்களை நம்பி பெரிய முயற்சிகளில் ஈடுபடாதீர்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கு முன் பாக சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசிப்பது நல்லது. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களின் மாறுபட்ட அணுகு முறையால் லாபமீட்டுவீர்கள். திடீர் லாபம், பெரிய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் கூடி வரும். வாடிக்கையாளர்களின் ரசனை யைப் புரிந்து கொள்வீர்கள். சந்தையில் மதிக் கப்படுவீர்கள். புதுப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேலையாள்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். விலகிச் சென்ற பழைய பங்குதாரரும் மீண்டும் வந்திணைவார். உத்தி யோகத்தில் செப்ரெம்பர் மாதம் முதல் உங்களின் உத்யோகஸ்தானாதிபதி குருபகவான் சாதகமாவதால் பணிகளை முடிப்பதிலிருந்த தேக்க நிலை மாறும். வேலைச் சுமையும் குறையும். உங்களை கசக்கிப் பிழிந்து, உருகுலைய வைத்த மேலதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார். சக ஊழியர்களும் மதிக்கத் தொடங்குவார்கள். வருடத் தொடக்கத்திலேயே பதவி உயர்வு, சம்பள உயர்வு மற்றும் புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். வெளிநாட்டுத் தொடர்புள்ள நிறுவனங்களிலிருந்து உங்களுக்கு அழைப்பு வரும்.

பெண்களுக்கு, அடிக்கடி முகம் சோர்ந்து காணப் பட்டீர்களே, ஏதோ இனந்தெரியாத கவலை உங்களை வாட்டியதே, இனி அவற்றிலிருந்து விடுபடுவீர்கள். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். காதல் கைகூடும். தோழிகளுக்கெல்லாம் திருமணமாகி விட்டதே! நமக்கு இன்னும் ஆகவில்லையே என வேதனைப்பட்டீர்களே! இனி கண்ணுக்கு அழகான கணவர் வந்தமைவார். தடைபட்ட உயர் கல்வியை மீண்டும் தொடர்வீர்கள். உங்கள் தகுதிக்கேற்ற நல்ல வேலையும் கிடைக்கும். மாணவர்கள் அதிகாலையில் எழுந்து படிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். உயர்கல்வியில் கூடுதல் மதிப் பெண் எடுத்து பெற்றோரின் தலை நிமிரும்படியாக செய்வீர்கள்.

இந்த 2017 ஆம் ஆண்டு உங்களுக்கு ஒருபக்கம் பரபரப்பான வாழ்க்கையைத் தந்தாலும், பிற்பகுதியில் சாதனையாளராகவும் மாற்றும்.

**நாளை**
**மார்கழி-19**
செவ்வாய்க்கிழமை -03.01.2017
திதி: பஞ்சமி பி.ப.02.07
நட்சத்திரம்: சதயம் பி.ப.03.59
ராகுகாலம்:03.30-05.00 வரை
சுபநேரம்:11.00-12.30 வரை
விநாயக ஷஷ்டி விரதம்

# டெங்கை ஒழிப்பதற்கு திடசங்கற்பம் பூணுவோம்

ஒவ்வொரு வருடம் ஆரம்பித்ததும் எமது மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுகின்றனர். வருடப் பிறப்பை மகிழ்ச்சியாகக் கொண்டாடினாலும் பாதிப்புக்களில் இருந்து விடுபடுவதாகத் தெரியவில்லை கடந்த காலங்களில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் மற்றும் சுனாமி என்பன இவற்றுக்கு முன்னுதாரணங்களாகும். இந்த வருடம் வடக்கு மாகாணத்தில் பரவலாக ஆரம்பித்துள்ள பொதுவான பிரச்சினை டெங்கு என்பதாகும். டெங்கு தற்போது யாழ். குடாநாடு உட்படப் பல இடங்களில் பாதிப் புக்களை ஏற்படுத்துகின்றது. மக்கள் இதை அசண் டையாக எடுத்துக் கொள்கின்றார்கள் எனக் கூறப் படுகின்றது. மக்கள் விழிப்படைய வேண்டும். யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 2 ஆயிரத்து 171 பேர் டெங்குத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். டிசெம்பர் மாதத்தில் ஒருநாள் மட்டும் 31 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என மருத்துவ அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வெளிமாவட்டங்களுக்கு அதிலும் கொழும்புக்கு அடிக்கடி சென்று வருபவர்களினால் இத்தகைய தாக்கம் அதிகரிக்கின்றது என சுகாதார மருத்துவ அதிகாரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம்தான் டெங்கின் தாக்கம் அதிகமாக உள்ளது. 10 மாவட்டங்களில் யாழ். மாவட்டம் முன்னிலையில் உள்ளது. கடந்த வருடம் 2 ஆயிரத்து 171 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என அறிக்கைகள் காட்டுகின்றன. உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையே இதுவாகும். அறிவிக்கப்படாத வகையில் 10 வீதமான நோயாளர்கள் உள்ளனர். இதனால் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளானவர்கள் இன்னும் அதிகமாகக் கூடிய வாய்ப்பு உள்ளது. டெங்குத் தாக்கம் 2016ஆம் ஆண்டு ஜுன் வரைக்கும் குறைவாகவே இருந்தது. அதன் பின்னரே அதிகமாக இனங் காணப்பட்டது. அதிலும் டிசெம்பர் மாதம் மிகக் கூடுதலாக உள்ளது.

டெங்கு தொடர்பான பல விழிப்புணர்வுகள், பரிசோதனைகள் மேற் கொண்டாலும், சில சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இன்னமும் டெங்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாமல் உள்ளது. கடந்த வருடம் டெங்கினால் மூன்று இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன. சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலேயே இவை இடம்பெற்றுள்ளன.

டெங்கு கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படாவிட்டால் டெங்கின் தாக்கம் எல்லை மீறிபோகக்கூடிய வாய்ப்பு உள்ளது என சுகாதார மருத்துவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நுளம்பு பெருகக்கூடிய இடங்களை இனங்கண்டு அதற்குரிய தீர்வை முதலில் காணவேண்டும்.

மழை நீர் ஓடும் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட வேண்டும். நீண்ட கால இடைவேளையின் பின் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதால் பாடசாலைகள் மற்றும் அதனை அண்டிய சூழல் துப்புரவு செய்யப்பட வேண்டும். எனவே மக்கள் இந்த விடயங்களில் விழிப்பாக இருக்க வேண்டும். தங்களுடைய சுற்றுப்புறச் சூழலை துப்புரவாகப் பாதுகாக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

எனவே எமது உடல் நலத்தில் ஆர்வம் உடையவர்களாக டெங்கு நோயில் இருந்து எமது உயிர்களைப் பாதுகாத்து இந்த வருடத்தில் உயிர்ச் சேதங்களை இல்லாது ஒழிப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.





# காதைப் பிளக்கும் பட்டாசு வெடிச் சத்தங்கள்

எஸ்.எஸ்.இந்திரன்

புவியின் முதல் எதிரி யார் என்றால் சந்தேகமே இல்லை மனிதன் தான். மனிதனின் சுயநல மிக்க, பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காத தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாக புவியின் இயற்கைச்சமநிலை மாற்றமடைந்து இயற்கை இடர்கள் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் புவியின் ஆயுள் ஒவ்வொரு நாளும் குறைந்து வருவதோடு, மனிதன் தனது ஆயுளையும், ஏனைய உயிரினங்களின் ஆயுளையும் குறைத்து வருகின்றான்.

இயற்கை வளங்களான நீர், நிலம், வளி மற்றும் ஒலி மாசடைவதோடு மனிதன் தான் நுகருகின்ற பொருள்கள் அனைத்தையும் தனது குறுகிய இலாபங்களுக்காக மாசாக்கியும் நஞ்சாக்கியும் வருகின்றான். அதன் காரணமாகவே தொற்றுநோய்களுக்கும், தொற்றா நோய்களுக்கும் ஆட்படுகின்றான். அத்தோடு ஏனைய உயிரினங்களின் இருப்புக்கும் ஆபத்தை ஏற்படுத்தி அவற்றின் அழிவுக்கும் வித்திடுகின்றான்.

**அநாகரிகமான செயற்பாடுகள்**

ஒரு மனிதனின் அநாகரிகமான செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் தீங்குகள், அவனுக்கே ஏற்படவேண்டும். ஏனைய மனிதர்களுக்கோ, சமூகத்துக்கோ, ஏனைய உயிரினங்களுக்கோ தீங்குகள் ஏற்படுத்துபவனாயின் மனித உரிமை மீறலையும் விலங்கின இருப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய குற்றங்களைப்புரிந்தவனுமாகின்றான், என்றாலும் கூட மனிதனின் சில அவசியத்தேவைகள் நிறைவேற்றப்படும் போது, சில மாசுக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. அதனையும் இழிவவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அந்த வகையில் அடங்குவது- தொழிற்சாலை, வாகனம் போன்றவற்றின் மூலம் ஏற்படும் ஒலி மாசடைதலையும், வளி மாசடைதலையும் குறிப்பிடலாம். ஆனால் அவசிய தேவையின்றி ஒலி மாசடைதலையும், வளி மாசடைதலையும், சுற்றுப்புறத்தில் குப்பைகளையும் ஏற்படுத்துகின்ற பட்டாசு வெடியினால் மனிதத்தேவைகள் ஏதாவது நிறைவேற்றப்படுகின்றனவா? இதனை வாங்குவதற்காக ஒட்டுமொத்தமாக மில்லியன் கணக்கான பணத்தைச் செலவிட்டு கரியாக்குகின்ற செயற்பாட்டை ஏன் தவிர்க்க முடியாது?

சாவு வீடுகள், கொண்டாட்டங்கள், பண்டிகைகள், விழாக்கள், பிறந்த நாள் மற்றும் சிறப்பு வைபவங்கள் போன்ற தினங்களில் பட்டாசுச் சத்தங்களின் ஓசை காதைச் செவிடு படவைப்பதோடு அவற்றின் நச்சுவாயு மணத்தை காற்று வீசும் திசையில் நீண்ட தூரத்துக்கு உணரக் கூடியதாக இருக்கும். அதாவது அதன் நச்சுக் காற்றைச் சுவாசிக்கின்றோம் என்பதே உண்மையாகும். இதனால் ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு எவருமே முன் வருவதில்லை. அத்துடன் பட்டாசு போடும்போது போட்டவருக்கும் வீதியால் சென்றவருக்கும் ஏற்பட்ட விபத்துக்களைப் பற்றியும் இதன் மூலம் சில அங்க இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். பட்டாசு உற்பத்திநிலையங்கள் விற்பனைநிலையங்கள் என்பவற்றில் ஏற்பட்ட விபத்துக்களால் பல உயிரிழப்புக்கள் எற்பட்டுள்ளன. இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் கோயிலில் ஏற்பட்ட பட்டாசு விபத்தில் 115 பேர் உயிரிழந்தமை பற்றிய செய்தியை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஒலி மாசடைதல்**

ஒலி மாசடைதலிலே முதன்மை வகிப்பது போர் வெடி பொருள்களாகும். அதற்கடுத்த நிலையில் பாதிப்பை ஏற்படுத்துவது பட்டாசு வெடி பொருள்களாகும். ஏனெனில் இவற்றில் பட்டாசு எறிபவரைத் தவிர ஏனையோர் இதனை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். திடீரென ஏற்படுகின்ற சத்தத்தால் ஏனையோர் அதிர்ச்சியடைகின்றனர். நோயாளிகள், வயோதிபர்கள், சிறுகுழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார்கள்போன்றவர்களுக்கு இந்த அதிர்ச்சி மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பது விஞ்ஞான பூர்வ உண்மையாகும். அத்துடன் பட்டாசு கொளுத்துபவர்கள் தங்கள் தங்கள் வீடுகளில் போடுவதில்லை. ஏனையவர்களின் வீடுகளுக்கு முன்னாலும் சந்திகள், தெருக்கள், வீடுகள், ஒழுங்கைகள் போன்ற பொது இடங்களிலே தான் போடுகின்றார்கள். இதனால் அதற்கு அருகில் வசிக்கும் அப்பாவிகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பதோடு கடதாசிக்குப்பைகளும் அவ்விடங்களிலே சேர்கின்றன. இதனால் மாநகர சுத்திகரிப்பாளர்களின் வேலைப் பளுவும் அதிகரிக்கின்றது. இதனால் சில நகர சபைகளில் சாவு வீடுகளுக்கு பட்டாசு போடுவதைத் தடை செய்ததாக பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

யாழ். குடாநாட்டை எடுத்துக் கொண்டால், ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது சில பின்தங்கிய பிரதேசங்களிலும் யாழ். நகர கரையோரப் பிரதேசங்களிலும்பட்டாசுவெடிபொருள்களின்பாவனை அதிகமாகக் காணப்படுகின்றது. அந்தப் பிரதேச மக்களின் மத வழிபாட்டுத் திருவிழாக்களின் இறுதி நாள் அன்று பட்டாசுகளுக்காக பணத்தை வாரியிறைக்கின்றார்கள். இங்கு காணப்படுகின்ற ஆலயங்களுக்கிடையே பட்டாசு போடுவதில் போட்டி நிலைமையும் காணப்படுகின்றது. அவர்களின்வருட இறுதியில் வருகின்ற பண்டிகைக் கால நிகழ்வையும் புது வருடப் பிறப்பையும் உள்ளடக்கிய சில தினங்களுக்கு அந்தப் பிரதேசத்தில் கொளுத்தப்படும் பட்டாசுகளால் இரவு கூடப் பகல்போல் காட்சியளிக்கும். இத் தினங்களில் வயோதிபர்கள்நோயாளிகள் அமைதியைவிரும்புவோர்கள் அமைதியாக உறங்க முடியாது-ஏனெனில், அவர்களின் மத வழிபாடுகளும் நடுநிசியிலேயே நடைபெறுவதே இதற்குக் காரணமாகும். திடீரென ஏற்படும் வெடிச் சத்தம் காரணமாக அதிர்ச்சி, குருதிஅமுத்தம், மனக் குழப்பம், இருதயப் படபடப்பு, காதுமந்தமாதல் நித்திரைக் குழப்பம், மன உளைச்சல் என்பன ஏற்படுவதோடு-அதன் நச்சு வாயுவைச் சுவாசிப்பதால் தொய்வு, சுவாசப் புற்றுநோய், ஈரல் புற்று நோய் போன்றவையும் ஏற்படுகின்றன.

பூமியில் உயிரினங்களினதும் உயிரற்றவைகளினதும் இருப்புக்கு மிக முக்கியமானது பிராணவாயு என்கின்ற ஒட்சிசன் ஆகும். இதனால் தான் அதனை உயிர்க் காற்று (பிராணவாயு) என்கிறார்கள் ஞானிகள். இந்த உயிர்க்காற்றை நச்சுக் காற்றாக மாற்றிக் கொண்டிருப்பவன் பகுத்தறிவு படைத்த மனிதன். அந்தச் செயற்பாடுகளில் ஒன்று தான் தேவையற்ற பயனற்ற பட்டாசு வெடிப்பாகும். இதனால் வளியில் நச்சுவாயுக்கள் சேர்வதால் வளி மாசடைகின்றது. ஏனைய மனித செயற்பாடுகளான ரயர், பிளாஸ்ரிக், இறப்பர் குப்பைகளை எரித்தல் மற்றும் ஊதுபத்தி, நுளம்புச் சுருள் போன்றவற்றின் பாவனையாகும். இவைககளினாலும் வளியில் நச்சுவாயுக்கள் சேர்கின்றன. ஆனால் இவை யாவுமே தவிர்க்கப்படக்கூடியதே. இவைகள் யாவற்றையும் மாற்று வழிகள்மூலம் தவிர்க்கலாம். உலகளாவிய ரீதியில் வளி மாசடைதல் காரணமாக வருடாந்தம் 80 இலட்சம் பேர் உயிரிழக்கின்றார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. இலங்கையில் வருடாந்தம் 7800பேர் இறக்கின்றார்கள் . முன்பு எல்லாம் புவியின் காலநிலையில் அசாதாரண மாற்றங்கள் ஏற்படுவதற்கு மிக நீண்ட காலங்கள் எடுத்தன. 500, 100. வருடங்கள். ஆனால் இன்று 50, 100 வருடங்களுக்குள் பெரிய மாற்றங்கள் நிகழ்கின்றன. இதே போக்கில் புவி மாசடையுமாயின் 5, 10 வருடங்களில் அசாதாரண மாற்றங்களுக்கு முகங்கொடுக்கவேண்டி வரும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**மதங்களால் போர்கள்**

மனிதனை நல்வழிப்படுத்துவதற்காகவே மதங்கள்தோற்றம் பெற்றன. ஆனால் இன்று மதங்களின் பெயராலேயே பல போர்கள் சண்டைகள் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு மதங்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்களின் சமூகப் பொறுப்பற்ற தன்மையும் எதிர்காலச் சந்ததியினர் பற்றிய தூரநோக்கற்ற சிந்தனையும், சுயநலத் தன்மையான செயற்பாடுகளுமே காரணங்களாகும். மக்கள் வழிநடத்துவதற்குத் தலைவர்கள் இன்றித் தான்தோன்றித் தனமாக நடக்கின்றார்கள். இவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது மதத் தலைவர்களேயே சாரும்.

ஏனெனில், சமயமும்-வாழ்வும் மிகவும் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்துள்ளன என்பது கண்கூடு. ஏனையவர்களைவிட சமயத்தலைவர்கள் சமூகத்தில பெரும் மாற்றங்களை ஏறபடுத்தலாம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எந்தச் சமயப் பண்டிகைகள் ஆயினும் அவை கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கங்கள் யாவை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவற்றின் மூலம் இயற்கைக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாதவாறு கொண்டாடப்படவேண்டும் என்பது அடிப்படையாகும். ஏனெனில் பண்டைக் காலத்தில் இயற்கையையே கடவுளாக வழிபட்டார்கள். இயற்கையிலிருந்தே கடவுள் என்ற கொள்கை தோன்றியது. எல்லாச் சமயக் கடவுளர்களும் சமயப் பெரியார்களும் அன்பையும்-அறத்தையும்-அமைதியையும்-சமாதானத்தையும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

போர்ச்சூழல் காரணமாக எத்தனையோ உள்ளங்கள் உடைந்து, உருக்குலைந்து இருக்கையில் அந்த மக்கள் உதவிக் கரத்தை எதிர்பார்த்து ஏங்கி இருக்கையில், இன்னொரு புறத்தில் காசைக் கரியாக்கி மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தொல்லைகளையும், பாதிப்புக்களையும் நோய்களையும் சூழல்மாசடைதலையும் ஏற்படுத்துகின்ற தூரநோக்கற்ற செயற்பாடுகள் அவசியமானதுதானா? ஏன் இந்தப் பட்டாசுகளுக்காக கரியாக்குகின்ற பணத்தை சேகரித்து அவர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளியை ஏற்றக் கூடாதா?"

பொது இடங்களில் மது அருந்துவது தண்டனைக்குரிய குற்றம். பொது இடங்களில் புகைப்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதேபோல பொது இடங்களில் பட்டாசு கொளுத்துவதும் தடை செய்யப்பட வேண்டும் என்பதே சுற்றச்சூழல் ஆர்வலர்களினதும் வேண்டுகோளாகும்.

*கட்டுரையாளர்:*
*(சுற்றுச்சூழல் ஆர்வலர்)*

> "போர்ச்சூழல் காரணமாக எத்தனையோ உள்ளங்கள் உடைந்து, உருக்குலைந்து இருக்கையில் அந்த மக்கள் உதவிக் கரத்தை எதிர்பார்த்து ஏங்கி இருக்கையில், இன்னொரு புறத்தில் காசைக் கரியாக்கி மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தொல்லைகளையும், பாதிப்புக்களையும் நோய்களையும் சூழல்மாசடைதலையும் ஏற்படுத்துகின்ற தூரநோக்கற்ற செயற்பாடுகள் அவசியமானது தானா? ஏன் இந்துப் பட்டாசுகளுக்காக கரியாக்குகின்ற பணத்தை சேகரித்து அவர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளியை ஏற்றக் கூடாதா?"













# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** திட்டமிட்ட பணிகள் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் பண வரவும், நன்மையும் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள்.

**இடபம்:** குடும்பத்தினரின் ஆதரவு வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். உடல்நிலை சீராக இருக்கும். பெண்கள் கணவரின் அன்பை பெறுவர்.

**மிதுனம்:** நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். சுபவிடயம் பற்றி பேச்சு நடக்க வாய்ப்புண்டு.

**கடகம்:** நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் அளவில் செழிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பை பெற்று மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் பெருகும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**கன்னி:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள்.தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பயணத்தின் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். பிள்ளைகளின் நலனுக்காக பெண்கள் பாடுபடுவர்.

**துலாம்:** எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதியவர்களின் நட்பால் நன்மை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிறைந்திருக்கும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**தனுசு:** அக்கம்பக்கத்தினர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில் வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். மாணவர்கள் திட்டமிட்டுப் படிப்பர்.

**மகரம்:** வெகுநாள் எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். பெண்கள் உறவினர்களுடன் சுற்றுலா செல்வர்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வழக்கத்தை விட கூடுதல் ஆதாயம் கிடைக்கும். வெளியூர் பயணத்தின் மூலம் இனிய அனுபவம் கிடைக்கும். மாணவர் படிப்பில் ஆர்வம் காட்டவும்.

**மீனம்:** எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சியால் வருமானம் கூடும். நிலுவைப் பணம் வசூலாகும். பெற்றோர் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**குழந்தை அருண்**

இந்த வருடம் போல, அடுத்த வருடம் அமைந்த விடக் கூடாது என்பது தான் பலரின் புத்தாண்டு ஆசையாக உள்ளது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | 3 | | | |
| | | 4 | | | 1 | | 8 | 7 |
| | | | | | | 5 | 6 | |
| 2 | | 9 | 6 | | | | | |
| | | 5 | | | | 1 | | |
| | | | 4 | | | | | 8 |
| | | | | | 8 | | 9 | 1 |
| | 6 | 7 | | 9 | | | | 3 |
| | 8 | | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையுான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 3 | 6 | 7 | 4 | 2 | 9 |
| 7 | 2 | 6 | 9 | 8 | 4 | 1 | 3 | 5 |
| 3 | 9 | 4 | 1 | 2 | 5 | 7 | 8 | 6 |
| 6 | 7 | 1 | 8 | 5 | 2 | 9 | 4 | 3 |
| 4 | 5 | 9 | 7 | 3 | 1 | 2 | 6 | 8 |
| 2 | 3 | 8 | 4 | 9 | 6 | 5 | 7 | 1 |
| 9 | 6 | 2 | 5 | 7 | 3 | 8 | 1 | 4 |
| 5 | 4 | 3 | 2 | 1 | 8 | 6 | 9 | 7 |
| 1 | 8 | 7 | 6 | 4 | 9 | 3 | 5 | 2 |



# பைரவா முன்னோட்டம் ஒரே இரவில் 1 லட்சம் விருப்புகள்




2017ஆம் ஆண்டின் முதல் அதிரடி வசூல் படமாக இருக்கும் என அனைவராலும் எதிர்பார்க்கப்படும் படம் 'பைரவா'. விஜய், கீர்த்தி சுரேஷ், ஜெகபதி பாபு, டேனியல் பாலாஜி, சதீஷ் மற்றும் பலர் நடித்துள்ள இந்தப் படத்தின் முன்னோட்டம் நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் வெளியிடப்பட்டது. முன்னோட்டம் வெளியான சிறிது நேரத்திலேயே, பார்ப்பவர்களின் எண்ணிக்கை விறுவிறுவென ஏறிக்கொண்டே போனது. ஆயிரம், லட்சம் என நள்ளிரவு நேரத்திலும் பலர் முன்னோட்டத்தைப் பார்த்ததால் சுமார் 12 மணி நேரத்துக்குள்ளாகவே 15 லட்சத்தை நோக்கி முன்னோட்டம் பார்த்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. அது மட்டுமல்லாமல் முன்னோட்டத்தை விருப்பு செய்தவர்களின் எண்ணிக்கையும் ஒரு லட்சத்தைக் கடந்து ஒரு லட்சத்து 38 ஆயிரம் வரை சென்றது.

முன்னோட்டம் முழுவதும் விஜய்யின் அதிரடி மற்றும் நடிப்பு மட்டுமே பார்க்க முடிகிறது. மொத்தத்தில் விஜய் ரசிகர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய படமாக 'பைரவா' இருக்கும் என முன்னோட்டத்தைப் பார்த்து கணிக்க முடிகிறது. இந்தப் பொங்கல் 'பைரவா' பொங்கல்தான். மற்ற படங்கள் 'பைரவா' வுக்குப் பின்னர்தான் இருக்கும் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# முட்டை றொட்டி

## தேவையான பொருள்கள்

றொட்டி - 2
முட்டை - 3
கடலை மாவு - 4 தேக்கரண்டி
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 1
மஞ்சள் தூள் - அரை தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
சீரகம் - 1/2 தேக்கரண்டி
கொத்தமல்லி - சிறிது
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய் - தேவையான அளவு




## தலையலங்காரம்

1 முன்பகுதி தலைமுடியை பகுதியாகப் பிரித்து, பின்பகுதி முடியை பொனிரெய்ல் இட்டுக் கொள்க.
2, 3 பொரிய வூல் பாண்ட் இட்டு, அதனை தலை முடியால் படத்தில் காட்டியவாறு சுற்றி பாண்ட் இட்டுக் கொள்ள
4 எச்சிய வெளித் தலைமுடியை சுருட்டி, கொண்டையைச் சற்று) கிளிப் செய்து கொள்ள.
5 முன் பக்க முடியை வாரி இழுத்து பின்பகுசியில் வைத்து கிளிப் செய்க.



## செய்முறை

றொட்டி சுடுவதற்கு ஏற்ற வகையில் மாவைப் பதப்படுத்தி முன்பே வைத்துக் கொள்ள வேண்டும். பின்பு றொட்டியாக சுட்டு வைத்துக் கொள்ளவும்.
வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் வெங்காயம், பச்சைமிளகாய் சேர்த்து லேசாக வதக்கிக் கொள்ளவும்.
ஒரு பாத்திரத்தில் வதக்கிய வெங்காயம், கடலைமா, மஞ்சள் தூள், உப்பு, கொத்தமல்லி சேர்த்து அத்துடன் முட்டை உடைத்து ஊற்றி நன்கு அடித்துக் கொள்ளவும்.
தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடேற்றி, ஒரு றொட்டியை எடுத்து கல்லில் போட்டு, கலந்து வைத்துள்ள முட்டை கலவையை றொட்டி முழுவதும் படுமாறு ஊற்றி, சுற்றி எண்ணெய் ஊற்றி வெந்ததும் திருப்பி போடவும்.திருப்பி போட்டு அந்த பகுதியிலும் முட்டை கலவையை ஊற்றி வேக வைத்து எடுத்தால் முட்டை றொட்டி தயார். சிறுவர்களும் இதனை விரும்பி உண்பார்கள்.

## இயற்கையில் கிடைக்கக்கூடிய விதைகளும் அவற்றின் பயன்களும்



**முருங்கை விதை:**
பெண்களுக்கு சத்துக் குறைவினால் ஏற்படும் தலைவலி, கால்களில் அடிக்கடி உண்டாகும் தசைப்பிடிப்பு ஆகியவை நாளடைவில் குணமாகும். விதைகளை, நெய்யில் வறுத்து பொடித்து, பாலுடன் சேர்த்து காய்ச்சிக் குடித்தால் ஆண்களுக்கு விந்தணுக்கள் அதிகரிப்பதுடன், விந்துவின் கெட்டித்தன்மை அதிகமாகும், நரம்புகள் பலப்படும்.



**பூசணி விதை:**
பூசணி விதையை நெய்யில் வறுத்து சாப்பிட்டு வந்தால், வெள்ளைப்படுதல் குறையும். ஆண்கள் பூசணி விதையைப் பொடி செய்து பாலில் கலந்து குடித்தால், உடல் உஷ்ணம் குறைவதுடன் விந்தின் கெட்டித்தன்மை அதிகரிக்கும். பூசணி விதையை நசுக்கி காயமாக்கிப் பருகினால், வயிற்றிலுள்ள பூச்சிகள் நீங்கும்.

**பப்பாளி விதை:**
பப்பாளி விதை காயத்தைப் பருகிவந்தால் வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியேறும், செரிமானம் அதிகரிக்கும், வாயுத்தொல்லை நீங்கும். ஒரு கரண்டி விதையை அரைத்து முகத்தில் பூசிவந்தால், சருமம் பொலிவாகும். உடலில் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடியது.





**திராட்சை விதை:**
திராட்சைப் பழத்துடன் விதைகளைச் சேர்த்து உண்பது நல்ல பயனைத் தரும். குருதிச் சோகை நோயால் பாதிக் கப்பட்டவர்கள் இதன் விதைகளை உண்டு வந்தால், குருதியில் ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும்.



**நாவல் கொட்டை:**
நாவல் கொட்டையை, நிழலில் உலர்த்தி லேசாக வறுத்து, வெந்தயத்துடன் சேர்த்து அரைத்து நீர் அல்லது மோருடன் கலந்து பருகலாம். மலச்சிக்கல் பிரச்சினை நீங்கும். சிறுநீரில் வெளியேறும் சீனியின் அளவும் கட்டுக்குள் அடங்கும். நீரிழிவு நோயாளிகளுக்கு அருமருந்தாகப் பயன்படுகிறது.




## சிங்களப் பஞ்சாபிகள்

சிங்களப் பஞ்சாபிகள் அறிமுகமாகியுள்ளன. அடிப்படையில் அனார்கலி வடிவத்தில், இடுப்புபகுதியில் சிங்கள காலா சாரத்துக்கு அமைவாக பிரில் வைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 2 ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# புரூண்டி அமைச்சர் சுட்டுக்கொலை

புத்தாண்டு தினத்தன்று வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது புரூண்டியின் சுற்றுச்சூழல் அமைச்சர் சுட்டுக்கொல்லப்பட்டார். உள்ளூர் நேரப்படி, நள்ளிரவு 12.45 மணிக்கு 53 வயதுடைய இமானுவேல் நியோன்குரு, துப்பாக்கி வைத்திருந்த இனந்தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸாரின் பேச்சாளர் ஒருவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இந்தப் படுகொலையைத் தொடர்ந்து நியோன் குருவுடன் வந்த பெண் ஒருவர் பொலிஸாரின் விசாரணைக்காக தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளதாக பியரி குருக்கி என்பவர் தன்னு டைய டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

குற்றவாளி தண்டிக்கப்படுவார் என்று புரூண்டி அதிபர் பியரி குருன்ஸிசா தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டில் அதிபர் பியரி மூன்றாவது முறையாக அதிபர் பதவியில் நீடித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றமான காலகட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதில், ராணுவத்தின் உயரதிகாரிகளும் அடங்குவர்.

(வ)

## மரண அறிவித்தல்



### செல்வி மார்கிரட் தேவமலர் மான்ன்

பரந்தனைப் பிறப்பிடமாகவும், கெருடாவில் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட செல்வி மார்கிரட் தேவமலர் மான்ன் 22.12.2016 வியாழக்கிழமை காலை கர்த்தருக்குள் நித்தியதுயில் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா சீவரத்தினம் மான்ன் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிவசுப்பிரமணியம், தேவராணி (கனடா), CLLR எலிசாமான்ன் (லண்டன்), காலஞ்சென்ற எலிசபெத் மற்றும் மோசஸ் (லண்டன்), காலஞ்சென்ற சொலமன் மற்றும் திரேசா (கனடா), பிலோமினா (கனடா), விக்ரோரியா (லண்டன்),விக்டர், கலா, சாந்தி, டேவிட், பிரின்ஸ், ஜோன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,புஷ்பராணி, பாலசுப்பிரமணியம், சிறிபாலகிருஷ்ணன் ஜனட், ஞானகுணசீலன், ஜெயந்திரன்,சந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 04.01.2017 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி தனன்கிளப்பு வீதியில் உள்ள பெந்தேகோஸ்தே சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தபால் நிலைய வீதி,**
**கெருடாவில், சாவகச்சேரி.**

(C/217)
(11,17,18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 680 5960, 077 694 9750, 077 847 3356**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு: 03.06.1954
இறப்பு: 01.01.2017

### கணபதிப்பிள்ளை யோகலிங்கம்

புளியங்கூடலில் பிறந்து வளம் மிகு வன்னி விசுவமடுவில் வாழ்ந்த காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை (மட்றாஸ்) மற்றும் நாகம்மா தம்பதியரின் தலைமகன் யோகலிங்கம் 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் வசந்தமலரின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற யோகமலர் மற்றும் யோக வசந்தன், யோகவாசு, யோகவண்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் அமரத்துவக் கிரியைகள் 04.01.2017 புதன் கிழமை புளியங்கூடல் சந்தி, சரவணை வீதி இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுருவில் புளியங் கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல்,**
**ஊர்காவற்றுறை.**

(ஜே.7341) (13.18)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### திருமதி
### றோஸ்விஜயலட்சுமி ஞானச்சந்திரன்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் விஜயலட்சுமி ஞானச்சந்திரன் நேற்று (01.01.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான யோனா-பரிமளம் தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ் சென்றவர்களான ஞானப்பிரகாசம்-சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகளும் ஞானச்சந்திரனின் அன்புமனைவியும் அக்னஸ், பற்றீசியா, போல்அன்ரன், அரியவதனி ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் சசிகுமார், பவிசங்கர் ஆகியோரின் அன்பு மாமியும் அன்ரனிறொபேட், அபிசனா ஆகியோரின் பேர்த்தியும் டெசிஜெயமலர், போல் அரியரட்ணம், ஐசாக் ஜெயரட்ணம், லீலாஎலிசபெத், சுகிர்தரஞ்சிதமலர், மாக்கிரட் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஞானசரோஜினி, மேரிஞானறோஸ், சுசிலாதேவி, தேவச்சந்திரன், ஞானரஞ்சிதமலர், ஞான சுலோசனா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.01.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் தென்னிந்திய திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல் :**
குடும்பத்தினர்
**077 348 6903, 076 645 9927**

## மரண அறிவித்தல்

### மதவீரசிங்கம் கதிரித்தம்பி

(ஓய்வு நிலை அதிபர்)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட மதவீரசிங்கம் கதிரித்தம்பி நேற்று (01.01.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான மதவீரசிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான காசித் தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் (ஓய்வு நிலை ஆசிரியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புச் சகோதரனும் இராசரத்தினத்தின் அன்பு மைத்துனரும் தேவபாலவின்அன்பு மாமனும் சிவநங்கை (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சி), சிவபாமா (ஆசிரியர் - யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி), சிவநம்பி, சிவபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உருத்திரமூர்த்தி (யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சிவகுமார் (விவசாயப் பணிப்பாளர் வடமாகாணம்), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுகா, வினுசன், மிதுலா, விதுர்ஷன், சௌமியா, கௌசல்யன், ஆசிகா, அட்சரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2017) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உசன்,**
**மிருசுவில்.**

(C 216)
(14,17,18.)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி லீலாவதி திருஞானசம்பந்தர்

கல்லூரி வீதி, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும் நவாலி அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி திருஞானசம்பந்தர் 30.12.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருஞானசம்பந்தரின் (சம்பந்தர் மாமா) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அப்புத்துரை- கண்ணகை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குழந்தைவேலு-லட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும் மோகனராஜ் (மோகன் பருத்தித்துறை), வனஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜானகி (அபிவிருத்தி இணைப்பாளர், பிரதேச செயலகம் ,மருதங்கேணி), ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமி யாரும் சாருஜன்,சாருஜே ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஈஸ்வரி (சிறைச்சாலை உத்தியோகத்தர்), தங்கராணி(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,சிமெந்து கூட்டுத்தாபனம்), பூபதி, பாலச்சந்திரன், (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர் ) பத்மாவதி, (இளைப்பாறிய மருத்துவதாதி) ,சாந்தினி (வைத்தியசாலை ஊழியர் ஆதார வைத்தியசாலை -மந்திகை ), பத்மநாதன் ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்றவர்களான வேதவல்லி, நிர்மலாதேவி, புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**077 923 3160, 077 616 9283**

### செல்லையா மகேஸ்வரன்

**(இளைப்பாறிய சிவில் பொறியியலாளர் - இலங்கை மின்சாரசபை)**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கு, கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரன் (31.12.2016) சனிக்கிழமை மாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் இளையமகனும், இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வானந்தரதியின் (இளைப்பாறிய ஆசிரியை - கொ/இந்துக்கல்லூரி) அன்புக் கணவரும், பரதனின் (யா/ பரியோவான் கல்லூரி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் சுகிர்தம்மா, பொன்னுத்துரை (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் - மீன்பிடித் திணைக்களம்), தவமணி (இளைப்பாறிய ஆசிரியை), பரமேஸ்வரி, நாகேஸ்வரி, நவரத்தினம் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2017) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்து மயானத்துக்கு (டிப்போ அருகில்) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/7339)(11,18)

**தகவல்: குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னத்துரை கோபாலபிள்ளை**

திதி: 02.01.2017



மலர்வு
15.10.1934

உதிர்வு
13.01.2016

அன்பில் ஆசானே பண்பில் பெரியோனே
பாசமிகு எங்கள் – ஐயாவே !
அல்லும் பகலும் அயராது உழைத்து எம்மைப்
பேணி வளர்த்த பெருந்தகையே..
மண்ணுலகம் போற்ற வாழ்ந்த தாங்கள்
விண்ணுலகம் சென்று ஓராண்டானதோ
எங்கள் எண்ணமெல்லாம் உங்களின்
அழியா நினைவுகளுடன் என்றென்றும்... !
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.15, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



உதிப்பு
08 . 06 . 1932

உதிர்வு
03 . 12 . 2016

### அமரர் மகேஸ்வரி தம்பையா

கடந்த 03.12.2016 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இத்தியடிப் பிள்ளையார் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (c/215) (13.18)

குடும்பத்தினர்.

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.12.1942

மறைவு
28.12.2011

### அமரர் செல்லர் குணபாலசிங்கம்
(குணம்)

திதி:வளர்பிறை சதுர்த்தி (02.01.2017)

உற்றவர் சுற்றத்தவரின்
உயர்வே உன் உணர்வாய்
உழைத்தும் உதவியும் எமை
உயர்வாய் வாழ வைத்த
உத்தம குடும்பத் தலைவா!
உம்மை இழந்து ஐந்தாண்டுகள் ஆயின
உம் நினைவாய் வாழ்கிறோம்
உம் நினைவலைகள் என்றும் நிலைத்திருக்கும்

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய் (8.27555) (13.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

---

# எப்படி எல்லாம் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டச் செயலக கைத்தொழில் அபிவிருத்தி சபையில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **திருமதி சபிதா சிவாகரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**இ. ரவீந்திரரட்ணம்**

அவர்கள் 29.12.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சாரபில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்டச் செயலக நலன்புரி கழகம்

---

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
**திரு.ச.உருத்திரமூர்த்தி**
அவர்களின் பாசமிகு மாமனார்
**மத்வீரசிங்கம் கதிரித்தம்பி**
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்
*யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.*

---

## இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வி.எஸ்.குணசிங்கம்**
(ஓய்வு பெற்ற வனபரிபாலன திணைக்கள எழுதுனர்)



உறவாக
05.02.1931

நினைவாக
16.12.1996

திதி: 02.01.2017


ஈர்பத்து வருடங்களின் ஈர விழிகளில்
உங்கள் விழுதுகள் நாம்
நிதர்சனத்தை உணர்கின்றோம்
வருடங்களிற்கு வயதானாலும் – உம்
சுவடுகள் சுடராகும் உறவுகளின் உணர்வுகளில் ........

(J 7338)
(14,17,18)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### புஸ்பராஜா பிரவீன்

( மயிலங்கூடல் ,இளவாலை –
முன்னாள் உயர்தர வகுப்பு மாணவன் யா/மத்திய கல்லூரி )

பிறப்பு
10.05.1994

இறப்பு
02.01.2012

என் அன்புத் தம்பி சிந்துக்குட்டியே
நீ என் மீது காட்டிய பாசத்தை
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
யாராலும் என்னிடத்தில் இருந்து
பிரித்து விட முடியாது
இன்று நீ என்னைப் பிரிந்தாலும்
உன் மீது வைத்த பாசம்
என்றும் பிரியாது.

என்றும் உன் நினைவுடன்
அப்பா,அம்மா,அக்கா
அமெரிக்கா.

---

புத்தாண்டை மிகவும் மங்களகரமாக கருதும் நாம், அன்றைய தினம் கோவில், தேவாலயம் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று, ஆண்டு முழுவதும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டுவது வழக்கம். ஆனால், பல்வேறு நாடுகளில் ஆங்கிலப் புத்தாண்டை வித்தியாசமாகக் கொண்டாடுகின்றனர்.

சிலி நாட்டினர், டிசெம்பர் 31ஆம் திகதி இரவு அனைவரும் குடும்பத்துடன் தங்களது முன்னோர்கள் புதைக்கப்பட்டுள்ள கல்லறைக்குச் செல்கின்றனர். நள்ளிரவில் தங்கள் முன்னோர்களை வழிபடுகின்றனர். இவ்வாறு செய்தால், முன்னோர்கள், தங்களுக்கு அதிர்ஷ்டத்தையும், வளத்தையும், தீயசக்திகளிடம் இருந்து பாதுகாப்பையும் தருவார்கள் என்பது அவர்களின் நம்பிக்கை.

டென்மார்க்கில், ஆண்டு முழுவதும் சேர்த்து வைக்கப்பட்டிருந்த பழைய பீங்கான் பாத்திரங்களை, டிசம்பர் 31ஆம் திகதி இரவு எடுத்துச் சென்று, நண்பர்கள், உறவினர்கள் வீட்டின் வாசலில் போட்டு உடைத்து, நொறுக்கி விட்டுத் திரும்புவர். இதன் மூலம் அதிர்ஷ்டம் அவர்கள் கதவைத் தட்டும் என்பது நம்பிக்கை.

ஈகுவடார் நாட்டில், புத்தாண்டு முதல்நாள் இரவு, கொடும்பாவி எரிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனால் அவர்களுக்கு வளமான எதிர்காலம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. சிலர் பழைய, தேவையில்லாத ஒளிப்படங்களையும் எரிப்பதும் உண்டு.

புத்தாண்டுத் தினத்தில், ஸ்கொட்லாண்டில், தீப் பந்தம் சுற்றுவது வழக்கம். இதன் மூலம் தங்களைச் சுற்றியுள்ள பாவங்கள் அகன்று, ஒளிமயமான பரிசுத்தம் ஏற்படும் என்பது நம்பிக்கை.

மெக்சிக்கோவில், புத்தாண்டு முதல் தின நள்ளிரவில் உறவினர்கள் ஒன்று கூடி அமர்ந்து, முன்னோர்களை வணங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அப்போது, நல்ல அதிர்ஷ்டத்தையும், வழிகாட்டலையும் வழங்குமாறு முன்னோர்களின் ஆவிகளிடம் வேண்டுவர்.

ஸ்பெயினில், டிசெம்பர் 31ஆம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு, 12 திராட்சைப் பழங்களை மென்று தின்பர். இதனால், ஆண்டு முழுவதும் தங்களை நோய் தாக்காது என்பது அவர்களின் நம்பிக்கை.

இத்தாலியில் புத்தாண்டு பிறக்கும் போது பிரம்மாண்டமான வாண வேடிக்கைகள் நடக்கும். தொடர்ந்து, சதுக்கத்தில் கூடியிருக்கும் ஜோடிகள் கட்டிப்பிடித்து முத்தமிட்டுக் கொள்வர். இதற்குப் பெரிய முத்தம் என்று பெயராம். மகிழ்ச்சி நிலைக்க இப்படி ஒரு பழக்கம். (வ)

## இழுவைமடி...

இந்தப் பேச்சுக்களின் போது, கடந்த நவம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இந்திய நடுவண் அரசு இழுவைமடிப் படகைத் தடைசெய்ய வேண்டும் என்று நவம்பர் மாதம் நடைபெற்ற பேச்சுக்களில் இலங்கை அரசும், இலங்கை மீனவ பிரதிநிதிகளும் வலியுறுத்தியிருந்தனர். இந்த விடயம் தொடர்பில் ஆராயந்துள்ள இந்திய நடுவண் அரசு அதனை தடை செய்வதற்கு கொள்கை அளவில் இணங்கியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர்கள் ரீதியில் இன்றைய சந்திப்பில் பேசப்படும். இதன்போது தீர்க்கமான முடிவு எடுக்கப்படக் கூடும் என்று தெரியவருகின்றது.

புதுடில்லியில் கடந்த சனிக் கிழமை நடந்த பேச்சுக்களின் போது முக்கியமான விடயத்தை இந்தியத் தரப்பினர் முன்வைத்துள்ளனர். எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய்து தடுத்து வைக்கும் போது துன்புறுத்தல்களை மேற்கொள்ள வேண்டாம் என்று கோரியுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

(வ-5)

## நல்லாட்சி பற்றி...

உரை அமையும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அரசை 2017 இல் கவிழ்க்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சூளுரைத்துள்ள நிலையில் பிரதமரின் இந்தச் சிறப்புரை மகிந்தவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமையும் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். (வ-4)

## பொருத்து...

வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பொருத்தமானது இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்துள் ளது. கல் வீடுகளே நிர்மாணித்து வழங்கவேண்டும் என்று அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், விடாப்பிடியாக இந்த வீட்டுத் திட்டத்தை முன்னெடுத்தே தீருவேன் என்று தெரிவித்திருந்தார்.

வலி. வடக்கில் மக்கள் மீள்குடியேறுவதற்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்ற இனந்தெரியாத சிலர், தாம் திணைக்களத்திலிருந்து (எந்தத் திணைக்களம் என்று எதுவும் தெரிவிக்கவில்லை) வருகின்றோம். முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுக்கு விண்ணப்பியுங்கள் என்று கோரியுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்குரிய அரசியல்வாதி ஒருவர், மாவட்ட நிர்வாகங்களுடன் தொடர்பு கொண்டு, முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களுக்கு அதிகமாக விநியோகிக்குமாறு கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-5-10)

## முதலீடுகளைத்...

யாகவே அவர் அவ்வாறு கூறுகிறார் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த வருடம் மைத்திரி - ரணில் ஆட்சியைக் கவிழ்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்துக்கே அமைச்சர் சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டையில் நேற்று மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"இத்தகைய பொய்யைக் கூறுவதால் என்ன நேரும்? இலங்கைக்கு வருகை தரவுள்ள முதலீட்டாளர்கள் ஏன் அங்கு செல்ல வேண்டும் என எண்ணுவார்கள். ஏனெனில், இலங்கையில் நிலையற்ற தன்மையொன்று உருவாகுகின்றமையால், நாம் ஏன் இலங்கைக்குச் சென்று கோடிக்கணக்கில் முதலீடுகளை செய்து, தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குள் எழும். இதுவே 2017ஆம் ஆண்டு ஆட்சி மாற்றமடையும் என்று பன்னாட்டு ஊடகர்களிடம் மகிந்த கூறியமைக்கான நோக்கமாகும். இதுவே ரகசியம்.

இந்தச் செயல் மிக மோசமானதொன்றாகும். தொழிற்சாலைகளை உருவாக்கி பிரேமதாச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க குடும்பத்தினருக்கா தொழில்கள் வழங்கப்படும்? முடிந்தால் 2017ஆம் ஆண்டு ஆட்சியைக் கவிழ்க்குமாறு மகிந்தவுக்கு நான் பகிரங்கமாகச் சவால் விடுக்கின்றேன்" என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (வ-4)

## வடக்குக்...

விவகாரம் தொடர்பில் அமைச்சு ரீதியிலான பேச்சு கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது. புதுடில்லி அரசின் விவசாய, மீன்பிடி அமைச்சர் ராதா மோகன சிங் தலைமையிலான குழுவினர் இதில் பங்கேற்கவுள்ளனர். கொழும்பு அரசு சார்பில், அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமைச்சு மட்டத்திலான பேச்சு என்பதால், மீனவர் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இருப்பினும் இந்தப் பேச்சின் போது இலங்கை அரசு எத்தகைய வலியுறுத்தல்களை முன்வைக்க வேண்டும் என்று, இணையத்தின் செயலரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"டில்லியில் நவம்பர் மாதம் நடைபெற்ற மீனவ சங்கத்தினர் இடையேயான பேச்சுக்களின் போது சில விடயங்களை நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். அந்த விடயங்களைத் தொடர்ச்சியாக இலங்கை அரசு வலியுறுத்த வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகளை முற்றாகத் தடைசெய்ய வேண்டும், சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை கடற்பரப்பில் அனுமதிக்கக் கூடாது, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிவரக்கூடாது போன்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்தோம்.

இலங்கை அரசு இன்றைய பேச்சுக்களின் போது இவற்றை வலியுறுத்த வேண்டும். இந்தியாவின் தந்திரோபாய நகர்வுகளுக்கு மாட்டிக் கொண்டு எமது கடலை அவர்களுக்குத் தாரை வார்க்கக் கூடாது. அவ்வாறு ஏதாவது செய்தால், நாடு தழுவிய ரீதியில் தொடரான பெரும் போராட்டங்களை நாங்கள் முன்னெடுப்போம்" என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலர். (5)

## மகிந்த...

15 பேர் அரசுடன் இணைந்து கொள்வார்கள் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு தற்போதைய அரசின் ஆட்சியைக் கவிழ்ப்பதே தனது இலக்கு என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். இந்தப் பின்னணியில், தேசிய அரசில் அங்கம் வகிக்கின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் வரையில் மகிந்த அணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு அமைய சில இராஜாங்க அமைச்சர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, மகிந்த அணியிலுள்ள 15 பேர் தேசிய அரசுடன் இணைந்து கொள்வார்கள் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இவ்வாறு இணைந்து கொள்பவர்கள், எந்தவொரு ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கும் உட்படாதவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(வ-5)

## யாழ்ப்பாணம்...

சிறி சேன பல நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார். எனவே இழுபறியிலுள்ள இந்தக் காணி விடயத்துக்கும் அவர் உடனடித் தீர்வாக வைத்தியசாலை காணியை விடுவிக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் சிறுவர் வைத்திய சாலை அமைப்பதற்கு 2017ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர் வைத்திய சாலை அமைப்பதற்கு 1.5 ஏக்கர் காணி தேவையாக உள்ளது. காணி உரிய காலத்தில் கிடைக்காது போனால் நிதி வேறு இடத்துக்கு சென்றுவிடும் அபாயநிலை உள்ளது. வைத்தியசாலைக்குரிய காணியைத்தானே விடுவிக்குமாறு கோருகிறோம். யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி அந்தக் காணியை விடுவிக்க உடனடி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்" என்று மருத்துவர்கள் கோருகின்றனர்.

"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்குக் காணி இல்லாமை பெரிய பிரச்சினையாக உள்ளது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும், பண்ணையில் உள்ள வைத்தியசாலைக்குரிய காணியைப் பெற்றுத் தரும்படி பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம். சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான காணியை பெற்றுக்கொள்வதற்கு நன்கொடையாளர்களிடமும் கேட்டுள்ளோம்.

வைத்தியசாலையின் அபிவிருத்தித் திட்டத்துக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. காணிகள் பெற்றுக்கொள்ள முடியாமையால் கிடைக்கப்பெற்ற நிதிகள் திரும்பிச் சென்றுள்ளன. இது எங்கள் மக்களுக்கே பாதிப்பாக அமைந்துள்ளது. தூர இடங்களில் இருந்து வரும் வைத்தியசாலை ஊழியர்கள் தங்கி நின்று பணிபுரிவதற்கு விடுதி அமைக்க வேண்டியுள்ளது. அதற்கும் காணி தேவையாக உள்ளது. வைத்தியசாலையின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்குக் காணிகள் இல்லாமை பெரிய பிரச்சினையாக உள்ளது. இதற்கு புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து வரும் எமது உறவுகளோ அல்லது தனி நபர்களோ வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள காணிகளை வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்குவதற்கு முன்வர வேண்டும்" என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (வ-4,7)

## கல் வீடுதான்...

மக்களிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சோ.சேனாதிராசா இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருத்து வீட்டுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்திருந்தது. இந்த வீட்டுத் திட்டத்தின் ஊழல்கள் - முறைகேடுகள் தொடர்பில் நாடாளுமன்றில் கூட்டமைப்பு முன்வைத்தது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் காணுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு உறுதியளித்திருந்தார்.

8 லட்சம் ரூபா வீட்டுத் திட்டம் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்றது. ஆனால் அமைச்சர் சுவாமிநாதன் கல் வீடு கட்ட, மண்ணில்லை, கல்லில்லை என்று அற்ப காரணங்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகின்றார்.

இந்த விடயத்தில் பிரதமர் நடவடிக்கை எடுப்பதாக - தீர்வைக் காணுவதாகச் சொன்ன பின்னரும், முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுக்கு அமைச்சர் சுவாமிநாதன் விளம்பரம் செய்வது தவறானதாகும்.

ஏன் இவ்வளவு அவசரம். அமைச்சர் சுவாமிநாதனின் விசுவாசிகளும் முகவர்களும் இணைந்து மாவட்டச் செயலர்களையும், பிரதேச செயலர்களையும், ஊழியர்களையும் மிரட்டி - அச்சுறுத்திப் பொருத்து வீடுகளை ஏற்க வேண்டும் என்று பேசுகின்ற செய்திகளும் கசிந்திருக்கின்றன.

வீட்டுத் திட்டம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி பொருத்தமான தீர்மானங்களை எடுக்க வேண்டும். அமைச்சர் சுவாமிநாதனின் மீள்குடியேற்ற அமைச்சில் ஓராண்டுக்குள் இரண்டு செயலாளர்கள் துரத்தப்பட்டுள்ளனர். அமைச்சுக்கு இன்னுமொரு செயலாளர் நியமிக்க முடியவில்லை. அரச செயலாளர் தரமுள்ளவர்கள் இந்த அமைச்சுக்கு வர மறுக்கின்றனர்.

பொருத்து வீட்டுத் திட்டத்தை 21 லட்சத்தில் இருந்து 16 லட்சமாகக் குறைத்து, அமைச்சர் சுவாமிநாதன் விளம்பரம் பிரசுரித்து ஒப்பேற்ற எடுக்கும் நடவடிக்கையில் மறைந்திருக்கும் மர்மம்தான் என்ன? அரசையும், தமிழ் மக்களையும் அமைச்சர் சுவாமிநாதன் தவறாக வழிநடத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

(வ-5)

## கொழும்பிலிருந்து...

குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரால் கடத்தப்பட்ட தங்கம் 2.44 கோடி மதிப்புடையது. கடத்தலுக்கு பயன்படுத்திய சொகுசு கார் உட்பட தங்கமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் சென்னை புலனாய்வுத்துறை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்" என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,8)

## தமிழ்மொழி...

உறுதியுரையில் ஒரு நாடு ஒரே இனமாக வாழ்வோம் என்று அச்சடிக்கப்பட்டுள்ளது கண்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதன் காரணமாக இன்றைய தினம் ஒப்பமிடும் நிகழ்வில் இந்த வாக்கியம் மாற்றியமைக்கப்படும் பட்சத்திலேயே ஒப்பமிடுவதாகவும் அல்லது ஆங்கில மொழிமூலமான உறுதியுரையில் மட்டுமே ஒப்பமிடுவதாக மேல் அதிகாரிகளைக் கோரவுள்ளதாக இடை நிலை ஊழியர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு வாக்கியங்களும் கருத்தும் மாறியுள்ளமை வேண்டுமென்றே மாற்றியமைக்கப்பட்டதா? அல்லது மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட தவறா எனத் தெரியாத நிலமையே காணப்படுவதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை தமிழுக்கான மொழிபெயர்ப்பில் ஏற்பட்டுள்ளது. அது சீர் செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

(வ-4,10)

## 2016இல் மழை...

முழுவதும் 1010.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே கிடைக்கப் பெற்றுள்ளது. நவம்பர் மாதத்தில் அதிகளவிலான மழை பெய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 2012ஆம் ஆண்டே, கடந்த ஆறு ஆண்டுகளில் மிக மோசமான மழை வீழ்ச்சி பதிவாகியது. அந்த ஆண்டு 943.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி மாத்திரமே கிடைக்கப் பெற்றிருந்தது.

ஏனைய ஆண்டுகளில் ஆயிரத்து 5[illegible] மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அண்ணளவா[illegible] கிடைக்கப் பெற்றுள்ளது. 2010ஆம் ஆ[illegible] ஆயிரத்து 496.5 மில்லி மீற்றரும், 2011[illegible] ஆண்டு ஆயிரத்து 470.7 மில்லி மீற்ற[illegible] 2013ஆம் ஆண்டு ஆயிரத்து 33 மி[illegible] மீற்றரும், 2014ஆம் ஆண்டு ஆயிர[illegible] 368 மில்லி மீற்றரும், 2015ஆம் ஆ[illegible] அதிகபட்சமாக ஆயிரத்து 838 மில்லி[illegible] றர் மழை வீழ்ச்சியும் கிடைக்கப் பெற்றி[illegible] தது" என்று வளிமண்டலவியல் திணை[illegible] களப் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்[illegible]

(வ[illegible]

## தனியார்...

ஆய்வுகூட வசதிகள் காணப்ப[illegible] அனைத்து வைத்தியசாலைகளுக்[illegible] குருதிப் பரிசோதனை இயந்திரங்[illegible] பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

அரச வைத்தியசாலையில் அனு[illegible] கப்படும் நோயாளர்களுக்கு தனி[illegible] ஆய்வு கூடங்களில் குருதிப் பரிசோத[illegible] மேற்கொள்ளப்படுமாயின், சம்பந்த[illegible] வைத்திய சாலையின் பணிப்பாள[illegible] எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடு[illegible] படும்.

இந்த விடயம் தொடர்பில் ஆய்வுகூட[illegible] கள் காணப்படும் அனைத்து வை[illegible] சாலைகளிலும் சேவையாற்றும் ப[illegible] பாளர்களுக்கும் சிறப்பு சுற்றறி[illegible] அனுப்பிவைக்குமாறு அமைச்சின் [illegible] லாளருக்கு பணிப்புரை விக்கப்பட்டுள[illegible] என்று சுகாதார அமைச்சர் ராஜித சே[illegible] ரத்ன தெரிவித்தார்.

([illegible]



# அரையிறுதிக்குச் சென்றது கலைமதி

யாழ்ப்பாணம், ஜன. 2

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத்தில் புத்தூர் கலைமதி அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து சங்கானை ஐக்கியம் அணி மோதியது.

ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய புத்தூர் கலைமதி அணி முதல் இரு செற்களையும் முறையே 25:09, 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# வயதுப் பிரிவுகளில் மாற்றம்


யாழ்ப்பாணம், ஜன. 2

நடப்பு வருடத்தில் நடைபெறவுள்ள பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பெரு விளையாட்டின் வயதுப் பிரிவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி பெரு விளையாட்டில் பங்கு பற்றும் வீர, வீராங்கனைகளின் வயதெல்லை 14 வயதுக்கு மேற்பட்டதாகவும் 20 வயதுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

14 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் இருபாலாருக்கான எல்லே, மென்பந்து கிரிக்கெட், ஹொக்கி, கடற்கரை கரப்பந்தாட்டம், ஜூடோ, கூடைப்பந்து, உடற்பயிற்சி, பெண்களுக்கான கால்பந்தாட்டம் போன்றனவும், 16 வயதுக்குட்பட்ட 18 வயதுக்குட்பட்ட 20 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கராத்தே மற்றும் ஆண்களுக்கான கால்பந்தாட்டம் ஆகியனவும்-

14 தொடக்கம் 17 வயதுக்குட்பட்ட பிரிவு மற்றும் 17 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் சதுரங்கம், மேசைப்பந்து, பூப்பந்தாட்டம், எறிபந்து, கபடி, கரம், ரென்னிஸ், கூடைப்பந்து ஆகியனவும் நடைபெறவுள்ளன. (ம-422)



# 12 வயதுப் பிரிவுக்கும் அஞ்சலோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 2

நடப்பு வருடத்திலிருந்து 12 வயதுப் பிரிவினருக்கும் அஞ்சலோட்டப் போட்டிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

நடப்பு வருடத்துக்கான மெய்வன்மைப் போட்டிகள் 12 வயதுக்குட்பட்ட, 14 வயதுக்குட்பட்ட, 16 வயதுக்குட்பட்ட, 18 வயதுக்குட்பட்ட, 20 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் நடைபெறும் என்று ஏற்கனவே திர்மானிக்கப்பட்ட நிலையில், முதன்முதலாக 12 வயதுப் பிரிவினருக்கு இம்முறை அஞ்சலோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

4 நபர்கள் பங்குபற்றும் 50 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் ஆகிய போட்டிகளாக அவை அமையவுள்ளன.

14 வயதுக்குட்பட்டவர்களுக்கு 4 நபர்கள் பங்குபற்றும் 50 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 200 மீற்றர் போட்டிகளாகவும், 16 வயதுக்குட்பட்ட பிரிவில் 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 200 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் போட்டிகளாகவும்-18 மற்றும் 20 வயதுக்குட்பட்டவர்களுக்கு 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 200 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 800 மீற்றர் போட்டிகளாகவும் நடைபெறவுள்ளன. (ம-422)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதியானது



யாழ்ப்பாணம், ஜன. 2

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தின் தொடரில் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

ஆவரங்கால் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் 25:22, 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தது நவஜீவன்ஸ், அடுத்த செற்றையும் கைப்பற்றினால் நவஜீவன்ஸால் நேற் செற் வெற்றிபெற முடியும் என்ற நிலை இருந்தது. இதனால் மூன்றாவது செற்றில் வென்றேயாகவேண்டும் என்ற நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது ஆவரங்கால் மத்தி.

ஆனால் மூன்றாவது செற்றையும் 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது நவஜீவன்ஸ். (ம-422)



யாழ். சதுரங்க முற்றத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் நியம வேகக் கட்டுப்பாட்டுப் போட்டிகள் அண்மையில் இடம் பெற்றன. (ம)

# யங்கம்பன்ஸ் 'ஏ', வல்லை வி.கழகங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டன

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸ் 'ஏ', வல்லை அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

யங்கம்பன்ஸ் 'ஏ' உதயதாரகை 'பி' ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் ஏ அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை 'பி' அணி மோதியது. ஆட்ட ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யங்கம்பன்ஸ் 'ஏ' அணி. 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் அணியைச் சேர்ந்த பிரகாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

**சேவியர் - வல்லை**

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் அணியை எதிர்த்து வல்லை அணி மோதியது. ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் சக்கோட்டை சென். சேவியர் அணியின் கனியூட் முதற் கோலைப் பதிவு செய்தார். அதே நிமிடத்தில் வல்லை அணி வீரர் ஜெகதாஸ் பதில் கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். 18 ஆவது நிமிடத்தில் வல்லையின் சார்பாக பிறிதொரு கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவில் வல்லை 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியின் 34 ஆவது நிமிடத்தில் வல்லையின் ஜெகதாஸ் மேலும் ஒரு கோலை பதிவுசெய்தார். அதுவே ஆட்டத்தின் இறுதிக் கோலாகவும் அமைந்தது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வல்லை அணி வெற்றிபெற்றது. ஜெகதாஸ் ஆட்டநாயகனானார். (ம-422)

# யூத், கலைமதி வி.க. முன்னேற்றம் கண்டன

யாழ்ப்பாணம், ஜன. 2

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி யுத், புத்தூர் கலைமதி அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

ஆவரங்கால் இந்துவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணி 27:25, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது. ஆட்டத்தில் தனித்து ஆதிக்கம் செலுத்திய புத்தூர் கலைமதி அணி 25:13, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# மிஸ்பாவுக்குத் தண்டம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தாமதமாகப் பந்துவீசிய குற்றத்துக்காக பாகிஸ்தான் அணித் தலைவருக்கும் ஏனைய வீரர்களுக்கும் பன்னாட்டு கிரிக்கெட் சபை தண்டம் விதித்துத் தீர்ப்பிட்டது.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முடிவுக்கு வந்தது. இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. பன்னாட்டு



கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் வீசப்பட வேண்டிய பந்துப் பரிமாற்றங்களைவிட இரண்டு பந்துப் பரிமாற்றங்களை பாகிஸ்தான் குறைவாக வீசியிருந்தது. இதனால் குறித்த ஆட்டத்துக்கான ஊதியத்தில் இருந்து 40 சத வீதத்தை அணியின் தலைவரான மிஸ்பாவுக்கும் 20 சதவீதத்தை ஏனைய வீரர்களுக்கும் தண்டமாக விதித்துத் தீர்ப்பிட்டது பன்னாட்டு கிரிக்கெட் சபை. (ம)



காயம் காரணமாக ஓய்வில் இருந்து வந்த ரியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரர் கரித் பேல். மீண்டும் பயிற்சிக்குத் திரும்பினார் என்று ரியல் மட்ரிட் அறிவித்தது. (ம)



# மத்தியூஸ், சமீரவிடம் வேண்டும் எழுச்சி: இன்றும் தோற்றால் கிண்ணம் பறிபோகும்

இலங்கை-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
கேப்ரவுண் மைதானத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. தொடரில் மூன்று ஆட்டங்கள் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இதனால் இன்றை ஆட்டத்தை வெற்றிபெற இலங்கை முனைய வேண்டும். குறைந்தபட்சம் சமநிலையிலாவது முடிந்தால் மட்டுமே கிண்ணத்தை தீர்மானிப்பதில் அடுத்த ஆட்டம் வரை உறுதியற்ற நிலை இருக்கும்.
ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அணித்தலைவர் மத்தியூஸ், இளம் வேகப்பந்து வீச்சாளர் சமீர இருவர் மீதும் அதிக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.
கடந்த ஆட்டமும் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்திலேயே நடைபெற்றது. இரு இன்னிங்ஸையும் சேர்த்து வேகப்பந்து வீச்சாளரான லக்மல் 6 இலக்குகளையும் சுழல் வீரர் கேரத் மூன்று இலக்குகளையும் வீழ்த்தினர். 29 பந்துப் பரிமாற்றங்களை முழுமையாக வீசி ஓர் இலக்கை மட்டுமே சமீர கைப்பற்றினார். 17 பந்துப் பரிமாற்றங்களை வீசி ஓர் இலக்கையேனும் மத்தியூஸால் வீழ்த்த இயலவில்லை. ஆடுகளம் வேகப் பந்து வீச்சுக்கு சாதகமானது என்பதால் வேகப்பந்து வீச்சாளர்களான இவர்கள் இருவரின் தடுமாற்றம் இலங்கையின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது என்று வர்ணனையாளர்கள் தெரிவித்தனர். இதனால் இவர்கள் இருவரும் இன்றைய ஆட்டத்தில் திருப்தியான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டும். லக்மல் தனது திறனைத் தொடர வேண்டும் என்பதே இலங்கை ரசிகர்களின் விருப்பம். (ம)

# ஆஸியில் ஆட்டம் காண்கிறது பாக்.



ஆஸ்திரேலியாவில் வைத்து - அந்த அணியை டெஸ்ட் ஆட்டங்களில் பாகிஸ்தான் வீழ்த்தி-அல்லது சமன் செய்து 17 வருடங்கள் ஆகுகின்றன.
இந்த இரு அணிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த ஆட்டத்திலும் பாகிஸ்தான் தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்துடனும் சேர்த்து ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தொடர்ந்து 11 ஆட்டங்களில் பாகிஸ்தான் தோற்றுள்ளது. இதன்படி கடந்த 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தான்-ஆஸ்திரேலியாவில் வைத்து ஒரு டெஸ்ட் வெற்றியையேனும் பதிவுசெய்யவில்லை. (ம)

# எதுவும் முடியும் எம்மால்

## சிமித் இறுமாப்பு

மெல்போர்ண் டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிராகக் கிடைத்த வெற்றியை அடுத்து, தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்றவாறாக வெளிப்படுத்தினார் சிமித்.
கடந்த வெள்ளிக் கிழமை முடிவுக்கு வந்த குறித்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 443 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 624 ஓட்டங்களைக் குவித்து முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் முதல் நான்கு நாள்கள் வரை ஓர் இன்னிங்ஸ்கூட முடிவடையாத நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் 163 ஓட்டங்களில் பாகிஸ்தானை சுருட்டி வென்றது ஆஸ்திரேலியா.
இதனையடுத்த கருத்துத் தெரிவிக்கையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.
கிரிக்கெட் ஓர் வேடிக்கையான விளையாட்டு, எதுவும் நடக்கலாம். ஆட்டம் சமநிலையில் முடியும் என்றுதான் அனைவரும் நினைத்து இருப்பார்கள். ஆனால் வியப்புக்குரிய வகையில் ஆட்டத்தின் போக்கை மாற்றி வெற்றி கண்டிருக்கிறோம். வீரர்கள் வெற்றி தேடித்தந்த விதத்தை நினைத்து மிகுந்த பெருமிதம் அடைகிறேன். எம்மால் எதுவும் முடியும் என்பதை நிரூபித்திருக்கிறோம் என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



# ஓர் ஆட்டத்திலேனும் தோற்கவில்லை இந்தியா: பன்னாட்டு கிரிக்கெட்டில் கடந்த வருட அலசல்

பன்னாட்டு கிரிக்கெட்டில், டெஸ்ட் அரங்கில் கடந்த வருடம் ஓர் ஆட்டத்திலேனும் தோற்காத அணி என்ற மகத்தான சாதனையை இந்தியா படைத்தது. கடந்த வருடம் நடைபெற்ற ஏனைய சில முக்கிய விடயங்கள் தொடர்பான அலசல்.

### டெஸ்ட் அரங்கு

கடந்த வருடத்தில் மொத்தம் 47 டெஸ்ட் ஆட்டங்கள் அரங்கேறியுள்ளன. இதில் அதிக வெற்றிகளை குவித்த அணி என்ற மகத்தான பெருமையை இந்தியா பெற்றுள்ளது. 12 டெஸ்டில் விளையாடி அதில் 9 ஆட்டங்களில் வெற்றியும், மூன்று ஆட்டங்களில் சமநிலையும் கண்டுள்ளது. கடந்த வருடத்தில் தோல்வியே சந்திக்காத ஒரே அணி இந்தியா மட்டுமே. அதே சமயம் வெற்றியின் பக்கமே செல்லாத அணி சிம்பாப்வே. நான்கு டெஸ்ட்டில் விளையாடிய அந்த அணி அனைத்திலும் தோல்வியைச் சந்தித்தது.



துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரை மொத்தம் 90 சதங்கள் பதிவாகின. இந்தியாவின் கோக்லி, ஆஸ்திரேலியாவின் ஸ்ரீவ் சிமித், இங்கிலாந்தின் மொயின் அலி ஆகியோர் தலா நான்கு சதங்களை விளாசியுள்ளனர். தனிநபர் பெறுபேறின் அடிப்படையில் இதுவே அதிகபட்சம்.
ஆயிரத்து 477 டெஸ்ட் ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் ரூட் முதலிடத்தில் உள்ளார். 72 இலக்குகளைக் கைப்பற்றி பந்துவீச்சாளர்களின் வரிசையில் அஸ்வின் ஆதிக்கம் செலுத்துகிறார்.

### ஒருநாள் அரங்கு

கடந்த ஆண்டில் மொத்தம் 99 ஒரு நாள் ஆட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஆயிரத்து 388 ஓட்டங்களைக் குவித்து அதிக ஓட்டங்களைக் குவித்தவராக ஆஸ்திரேலியாவின் வோர்ணர் உள்ளார். 30 இலக்குகளைக் கைப்பற்றி பந்துவீச்சாளர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் ஆஸ்திரேலியாவின் சுழல் வீரர் சாம்பா. மொத்தம் 68 சதங்கள் பதிவாகியுள்ளன. வோர்ணர் 7 சதங்களைப் பதிவுசெய்து அமர்களப்படுத்தினார்.

### ரி-20 அரங்கு

கடந்த வருடம் 100 ரி-20 ஆட்டங்கள் நடைபெற்றன. ரி-20 உலகக்கிண்ணமும் இந்தியாவில் இடம்பெற்றது. தீவுகள் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 8 சதங்கள் பதிவாகின. மக்ஸ்வெலின் 145 ஓட்டங்களே தனிநபர் அதிகபட்சம். (ம)

# சௌதாம்டனை தோற்கடித்தது ஹொட்ஸ்பர்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்றுவரும் பிறீமியர் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சௌதாம்டன் அணியை டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் அணி தோற்கடித்தது. 4:1 என்ற கோல் கணக்கில் ஹொட்ஸ்பர் வெற்றி பெற்றிருந்தது. டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் அணியில் சார்பாக, டெலே அல்லி இரண்டு கோல்களையும், ஹரி கேன், சண் ஹெயுங்-மின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் பெற்றனர். இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் 36 புள்ளிகளைப் பெற்றுள்ள டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், இங்கிலாந்து பிறீமியர் லீக் தரவரிசையில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. (ம)



# இந்திய கிரிக்கெட்டுக்கு எதிராக வழக்குத் தொடர பாக். திட்டம்

இந்திய கிரிக்கெட் சபை, தம்முடனான ஒப்பந்தத்தைப் புறக்கணித்திருக்கும் நிலையில் நட்டஈடு கேட்டு வழக்குத் தொடரப்படவுள்ளது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியர் கான் தெரிவித்தார்.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்த இரு அணிகளுக்கும் இடையில் இருதரப்புத் தொடர் நடைபெறுவதில்லை. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களிலேயே விளையாடுகின்றன. கடந்த 2015ஆம் ஆண்டு இருதரப்புத் தொடரை நடத்த இருதரப்பும் முன்வந்தன. 2015ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டுவரை என ஆறு தொடர்களில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டது.


பின்னர் இரு நாடுகளினதும் எல்லையில் பதற்றம் நிலவுகின்றமையை அடுத்து தொடரை நடத்தும் எண்ணம் இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையால் கைவிடப்பட்டது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பலதடவைகள் முயற்சி எடுத்தும் இந்திய கிரிக்கெட் சபை இணங்கவில்லை. இதனையடுத்தே நட்டஈடு கேட்டு வழக்குத் தொடர பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இருதரப்புத் தொடரை நடத்த இணக்கம் தெரிவித்து, இந்திய கிரிக்கெட் சபை, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஆனால் விளையாட மறுத்து வருகிறது. இதனால் நட்டஈடு கேட்டு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீது வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடந்து வருகின்றன என பாகிஸ்தான் கிரிக் கெட் சபையின் தலைவர் சகாரியர் கான் தெரிவித்தார். (ம)

# சிமித் என் இலக்கு இர்பான் தெரிவிப்பு

ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலிய அணித் தலைவரான சிமித்தை வீழ்த்துவதே தனது இலக்கு என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான்.

இந்த இரு அணிகளும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகிறது. பாகிஸ்தான் அணியில் இர்பான் சேர்க்கப்பட்டுள்ளார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நான்தான் மிகவும் அதிக உயரம் கொண்ட (7 அடி 1 அங்குலம்) பந்து வீச்சாளர். பவுன்சருக்கு சாதகமான ஆஸ்திரேலியாவின் ஆடுகளத்தை நான் சாதகமாக பயன்படுத்திக் கொள்வேன். அதன்மூலம் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித்தை வீழ்த்துவேன். சிமித்தான் என்னுடைய இலக்கு என இர்பான் மேலும் தெரிவித்தார். (ம)





*அத்லெட்ரிகோ அணிக்கும் பார்சிலோனாவுக்கும் இடையிலான ஆட்டமொன்று எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், குறித்த ஆட்டத்துக்காக நேற்றுமுன்தினம் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)*

# இறுதி டெஸ்ட் நாளை

பாகிஸ்தான்-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் இரண்டிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதனால் நாளைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது ஆஸ்திரேலியாவைப் பாதிக்காது: ஆனால் 3:0 என்று வழித்துத் துடைக்க ஆஸ்திரேலியாவும், குறைந்தபட்சம் ஒரு வெற்றியையேனும் பதிவுசெய்ய வேண்டும் என்ற கௌரவச் சிக்கலில் பாகிஸ்தானும் உள்ளதால் ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# நியூசி. ரி-20 அணி அறிவிப்பு

## காயத்தால் குப்தில் விலகல்

பங்களாதேஷுக்கு எதிரான ரி-20 தொடருக்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக குப்தில் அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் அண்மையில் முடிவடைந்தது. 3:0 என்ற அடிப்படையில் நியூசிலாந்து கிண்ணம் வென்றது. அடுத்ததாக மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. முதல் ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான குப்தில் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ரி-20 தொடருக்கான நியூசிலாந்து அணி விவரம்: வில்லியம்சன் (தலைவர்), அண்டர்சன், போல்ட், புருஸ், கிரான்ட்ஹோம், பெர்குசன், ஹென்றி, கொலின் முன்றோ, நீஸ்கம், ரோஞ்சி, சான்நெர், சவுத்தி, வீலர், புறூம். (ம)

CHEMISTRY
2019 A/L
தமிழ்மொழிமூலம் 04.01.2017
(புதன்) 5 pm
ஆங்கில மொழிமூலம் 04.01.2017
(புதன்) 6 pm
N.KALA
83/19, ARASADY ROAD, JAFFNA.

New Sky Computer Training Center
இல.716 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
02-01-2017
• Microsoft Office 2016 - 3 Months
[Word, Excel, Access, PowerPoint, Publisher]
• Desktop Publishing - 3 Months
[Photoshop CC, PageMaker7.0, InDesign CC, Illustrator CC, CorelDraw X7]
• Graphic Designing - 3 Months
• Hardware Technology - 2 Months
• Web Designing - 3 Months
• Computerized Accounting - 3 Months
• Internet & E-mail - 1 Month
• Computer Type Setting - 2 Months
• Kids Programe (சிறுவர்களிற்கானது)
ICT G10, G11
GIT-A/L
TP:0779672038
E-MAIL:KRCOLINS@GMAIL.COM

புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொழிற்துறைக் கணக்காளர் கற்கை நெறிகள்
aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
Qualification: G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
Tamil & English -Medium
Qualification: G.C.E. O/L 6 Passes with 5 Credit Passes including mathamatics
பட்டயக்கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accountant Courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification: G.C.E.A/L 3 Passes
Gr. 9, Gr. 10 & G.C.E. O/L
English Literature Classes
CERTIFICATE COURSE IN ENGLISH
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382
021 222 9149

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.